உ

சீவயாதனா வியாசம்

சிவஞான தேசிகம்

திருப்பிரப்பன்வலசை - தியான ஸ்தலம்

பாம்பன்
ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்

நாற்கூற்றிருக்கை

ஒருபூரண சிவனார்செவி யொருநுண்பொருள் சொன்னா
யுரமாரரு ளிருதேவிய ரொருசேர விழைந்தாய்
ஒருசூருட லிருகூறுற வொளிவேலெறி தந்தா
யுணர்வேறிடு முத்தேவரு மிருதாடொழ நின்றாய்
ஒருமாமுனி யறிவேயுற வொரு போதனை செய்தா
யுரைமாமறை யிருசம்பவர் முத்தீமுத லானாய்
திருநான்முகன் முக்கண்ணுள னிருமாலுரு வொன்றாத்
திகழுந்திரு வுருவாயினை யெனையும்படர் குகனே.

– திருவலங்கற்றிரட்டு பல்சந்தப்பரிமளம்
ஆசிரியவியல் – 128

குரு வணக்கம்

குருமொழி உதவும் ஞானக் குமரவேள் அருளால் ஈந்த
ஒருமொழி தன்னை ஏற்றே உளத்தினில் ஆய்ந்து கண்டே
அருமறை போன்ற தான அரும்தக ராலயப் பேர்த்
திருமுறை தந்த பாம்பன் சீர்முனி திருத்தாள் போற்றி

– பேராசிரியர் டாக்டர் S.P. சபாரத்தினம்

C.S.S
CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ
ஓம் குஹப்ரஹ்மணே நம:
ஸ்ரீமத் குமரகுருதாசமுனீந்திர குருப்யோ நம:

அத்தியாச்சிரம சுத்தாத்வைத
வைதிக சைவ சித்தாந்த ஞானபானு
பாம்பன்
ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்
அருளிச் செய்த

சிவஞான தேசிகம்

(21 – ஆவது)

சீவயாதனா வியாசம்

(பத்திய ரூபம்)

விருத்தாசலம் : தியாகராஜ கவிராயர் குமாரர்,
வி. கலியாண சுந்தரம்பிள்ளை, B.A.
அவர்கள் இயற்றிய வுரையுடன்
(ஸ்ரீமத் சுவாமிகள் பார்வையிட்டது)

மகாதேஜோ மண்டல வெளியீடு
திருவான்மியூர், சென்னை – 600 041.

2017

முதற்பதிப்பு - 1906
இரண்டாம் பதிப்பு - 1917
மூன்றாம் பதிப்பு - 1986
நான்காம் பதிப்பு - 2003
ஐந்தாம் பதிப்பு - 2017

விலை : ரூ. 65-00

அச்சிட்டோர் : அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்,
9, அய்யா தெரு, இராயப்பேட்டை, சென்னை - 600 014

ஸ்ரீ குமார பரமேஸ்வரன்

சிவஞான தேசிகம்.

உ

சிவமயம்

குமாரகுருப்யோ நம:

21 – ஆவது

சீவயாதனாவியாசம் மூலமுமுரையும்.

பாயிரம்.

காப்பு.

ஒருவிகற்ப நேரிசைச்சிந்தியல்வெண்பா.

நீர்கொண்ட பொற்பரநா கத்திலுறை நீளயிற்கைச்
சீர்கொண்ட தேவண்ணல் சேரருடா – னேர்கொண்ட
நார்கொண்டிந் நூல்காக்க நன்கு.

பொழிப்புரை.

சகல புவனங்கட்கும் ஆதாரமாயிருக்குந் தன்மையைக் கொண்டதாய் ஹேமப்ரகாசத்தைக் கொண்டதாய்ச் சிவயோகிகட் குண்டாகுஞ் சிவாநுபவத்தில் வெளிப்படு மியல்பினதாயுள்ள பரவெளியின்கண் வீற்றிருக்கும் நீண்ட வேலாயுதத்தைத்தாங்கியவராகியும், சகல தேவதைகளின் சிறப்புந் தஞ்சிறப்பேயாகக் கொண்டவராகியும் விளங்காநின்ற குஹப்ரஹ்மத்தினருளானது பொலிவைக் கொண்டிருக்கும் அன்பின் விசேஷத்தினால், இவ்வியாசம் இடையூறின்றி யினிது முடியுமாறு நன்றாகக் காக்குந் தன்மையுடைய தாகுக.

(மற்றொரு வகை), நீர்வளமு மழகும்வாய்ந்த பரநாக மென்னுந் திருப்பரங்கிரியில் வீற்றிருப்பவராயும், நெடிய வேற்படையைத் திருக்கையினிற்றாங்கு சிறப்புடையராயும் விளங்காநின்ற சுப்பிரமணியக் கடவுளதருளும், அவரண்ணலாம்

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

விநாயகமூர்த்தியினதருளும் பொலிவுற்றிருக்கும் அன்பின் விசேடத்தினால் இவ்வியாச மிடையூறின்றி யினிது முடியுமாறு நனிகாக்குந் தன்மை யுடையன வாகுக. [(வ்யாஸம்) வியாசம் = விரிவு.] (1)

கடவுள் வணக்கம்.

கலிவிருத்தம்.

தூவி சாகன் றொகாவரு ணாடியிப்
பூவில் யாவரும் புந்திசெய் துய்யவே
சீவ யாதனை செப்பு வியாசநற்
பாவி லோதமுன் னோனைப் பழிச்சுவாம்.

இயல்பாகவே பாசமில் பொருளாய்ச் சித்தந் தெளிந்தோர்க்கு எங்கும் வெளிப்படுவதாயுள்ள விசாகப் பெருமானது திருவருளை முன்னிட்டுக்கொண்டு, இவ்வுலகினர் யாவரும் ஜீவஹிம்ஸையை நீக்கி யிருந்து அக்காரணத்தாற் சருவ வியாபகனாகிய சருவேசுரனைக் கண்டு களிக்கும் பெரு வாழ்வைத் தருவதாகிய கொல்லா விரதத்தைக் கடைப்பிடித் துய்யுமாறு, சிரத்தையுடன் படித்தறிய இந் நூலை நல்ல பத்தியரூபமாகக் கூறப்புகுந்த யாம், (எக்காரியமும் இடையூன்றி முடியுமாறு துதிக்கப்படுஞ் சிறப்பினனாகிய) முன்னோனை வணங்குவாம். (2)

என்று மெய்யித யத்தினி லின்புற
நின்று நித்த பரானந்த நீட்டிடு
மன்ற லங்குவ ளைத்தொடை மார்புடைக்
குன்றெ றிந்தவெஃ கானைக்கை கூப்புவாம்.

எக்காலத்தும் யாஞ் சிற்சுகமடைய உண்மையாகவே தஹராகாசத்தின்கண் வீற்றிருந்து நித்தியமான சிவானந்தத் தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் வாசனையும் அழகும்



அத்தியாச்சிரம சுத்தாத்வைத வைதிக சைவ சித்தாந்த
ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள்.

சிவஞான தேசிகம்.

வாய்ந்த செங்கழுநீர் மாலையணிந்த மார்பினனாகியும், கிரௌஞ்சகிரியைப் பிளக்கும்படி பிரயோகிக்கப்பட்ட வேலாயுதத்தைக் கரத்திற் றாங்கியவனாகியு மிருக்குந் திருத்தணிகை முருகக்கடவுளை யஞ்சலிப்பாம்.

[குவளையெனுஞ் செங்கழுநீர்மாலை—திருத்தணிகை முருகக்கடவுட்கே யுரித்தாகலின், இங்கு அத்தலம் வருவிக்கப்பட்டது.] (3)

கவியாக்கிய காரணம்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அணிநி றைந்தமுது கேர ளத்திரு வனந்த மாபுர விருக்கையான்
மணிநி றைந்தவர கங்கை யங்குலம்வி ளங்க வந்தநறு மாலையான்
பணிநி றைந்தநர சிங்க மூர்த்திதவ பால னாகிமு ருகற்பணி
குணநி றைந்தவொரு சுப்ர மண்யனது வேண்டு கோட்படி குயின்றதால்.

எல்லா அழகுமுடையதாகியும் புராதனமானதாகியு மிருக்குங் கேரள தேசத்தின்கண் ணுள்ளதாய திருவனந்த புரத்தையே தனக்கு வாசஸ்தானமாகக் கொண்டோனாகியும், முத்துக்கணிறைந்த ஆகாச கங்கையினது குலம் விளங்க வேளாள மரபிலுதித்து நற்குணமுடையோனாகியும், சிவத்தொண்டு மேற்கொண்டோனாகியு மிருந்த நரசிங்க மூர்த்திப்பிள்ளையின் தவபலபுத்திரனாகி முருகக்கடவுளை (மனமொழி மெய்களால்) வணங்குங் குணசம்பன்னனான சுப்பிரமணிய பிள்ளையினது வேண்டுகோ ளங்கீகரித்து வசனரூப மாயிருந்த இவ்வியாசமானது கவியாக்கப்பட்டது. (4)

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

நூல்வரலாறும், ஆக்கியோன்பெயரும்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தவஞானக் குமரகுரு தாச னென்பான்
    றண்ணளியிற் றமிழ்வசன மாகச் செய்த
சிவஞான தேசிகநூ றனிலே பாவத்
    திறங்கூறு மிருபத்தொன் றாம்வி யாசத்
திவர்சீடன் வினாமூடர் வாதிற் காசா
    னிறுத்தமொழி களையேசெஞ் செய்யு ளாகப்
பவநூறக் குமரகுரு தாசன் றானே
    பாடினனற் குருபரனைப் பழிச்சி மாதோ.

தவமும் ஞானமுமே பொருளாகக் கொண்டு குமர குருதாசசுவாமிக ளெனுஞ் சிறப்புப்பெயர் பெற்ற இந்நூலாசிரியர், வேதமுதலிய வித்தைகளிலும், ("ஒன்றாக நல்லது கொல்லாமை" எனத்) திருவள்ளுவப் பயனிலும், மற்றை மாண்புடையர் நூல்களிலுங் கூறியுள்ள கொல்லாவிரதத்தை யநுஷ்டித்து யாவரு முய்ய வேண்டுமெனுங் காருண்யத்தானே யருளிச்செய்த இவ்விரதத்தோடு அனேக விஷயங்களை ஆயிரவினாவுத்தரங்களாய் முப்பத்திரண்டு வியாசங் களாய் நின்று விளக்குவதாய்த் தமிழிற் கத்திய ரூபமாகச் செய்துள்ள சிவஞானதேசிகமெனும் பெருநூலிற் பாவத் திறம் பகரும் இருபத்தொன்றாம் வியாசத்தி லடங்கியிருக்குஞ் சீடனின் ஐம்பத்துநான்கு வினாக்கட்கும், பன்னிரண்டு மூடர்வாதங்கட்கும் ஆசிரியருரைத்த நியாய மொழிகளையே அழகிய செய்யுள்களாகப் பவத்துன்பினைக் கெடுக்குந் தகைமைவாய்ந்த மேற்குறித்த கத்தியரூபத்தைச் செய்த ஆசிரியரே தம்முடைய ஞானாசாரியரைத் துதித்துப் பத்தியரூபமாகப் பாடியருளினர். (5)

பாயிர முற்றிற்று.

சிவஞான தேசிகம்.

நூல்.

1—வது, குருசீட சம்வாதம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பின்னைநாட் குதர்க்கி யென்னும் பெயரினான் குருவை நோக்கி
யின்னில வுலகிற் சீவ யாதனை யெனவே கூறு
தன்மையை விளம்பு கென்று தாள்பணிந் திடவா ரன்பி
னன்னெறி வித்யா ரண்ய நற்குரு நவிலு மன்னோ.

மறுநாள் (விஷயப்பிரியனாகிய) குதர்க்கியென்னும் பெயருடைச் சீடன், தன் குருவை நோக்கி, இல்லெனும் மனைகளோடு கூடிய நிலவுலகில் ஜீவயாதனையென்று கூறப்படுவதன் சொரூபத்தை அடியேனுக்கு விளங்கக் கூறவேண்டுமென்று அவருடைய திருவடிகளை வணங்க; அருமையான ஜீவகாருண்ய வொழுக்கத்தைக்கைக் கொண்ட வித்யாரண்யரென்னு நாமதேயம் வாய்ந்த அந்தக் குருசிரேஷ்டர் கூறுவான் றொடங்கினர். (1)

பசுத்துவத் தொறுவுண் ஞானப் பண்புடை யெதனை யேனு
நசித்திட வடித்தல் பீழை நணுகிடக் கீறல் கொய்தல்
விசித்திட லாதி கூறும் விதமெலா மதுவே யென்னா
விசைத்தனன் கேட்ட சீட னியம்புவா னிதனை மாதோ.

பசுத்துவம் வாய்ந்த சீவக்கூட்டங்களில் அறியும் தன்மையுள்ள எச் சீவனையாவது சாகும்படி யடித்தல், துக்கமடையும்படி கீறுதல், அறுத்தல், கயிற்றாலிறுகக் கட்டுதல் முதலியவாகக் கூறும் பலவகைச் செயலெல்லாம் அச் சீவயாதனையேயா மென்று ஆசிரியர் சொன்னார். அதனைக்கேட்ட சீடன், இனி வருமாறு ஆக்ஷேபிப்பா னாயினன். (2)

(பசுத்துவம் = பசுவைப் போலச் சுதந்திரம் அற்ற தன்மை)

நிமித்தமில் லாமல் வீணே யிழைத்தறா னேரி றுன்ப
மமித்திர மாக நம்மே லதிசினங் கூரு மொன்றை
யிமைக்குமுன் கோறல் சொன்ன யாதனை யாமோ வேசில்
சுமப்பத வடிகே ளென்று சொல்லின னடிகள் சாற்றும்.

யாதொரு காரணமுமின்றி (நிர்நிமித்தமாக) வீணே நிகரற்ற துன்ப முண்டாகும்படி மேற்குறித்த செயல்களைச் செய்வதுதான் சீவயாதனையாமே யன்றிச் சினேகபாவத்தை விட்டு மிக்க கோபாவேசத்துடன் நம்மீது வருகின்ற ஜெந்துவை இமைகொட்டு முன்னர்க் கொல்லுதல் முன்சொன்ன சீவயாதனையாமோ? தாமரை மலர்போன்றிருக்கும் மாசற்ற பாதங்களையுடைய ஆசிரியரேயென; ஆசிரியர் விடை கூறத் தொடங்கினர். (3)

அன்னதுள் ளுணருந் தன்னைக் காக்கநல் லறிவொன் றுள்ளான்
றன்னொடு தனக்குத் துன்பந் தரவரு முயிர்க்கு மாண்டோ
ரின்னலெய் தாது காக்கு மியல்பின னாவ னன்றிப்
பன்னிய கொலைசெய் யான்காண் பரவுது மின்னுங் கேட்டி.

அவ்வாறு யாதொரு பிராணி கோபாவேசத்தோடு தன்மீது வருதலை யறிந்து தன்னைக் காத்துக்கொள்ள நல்லறிவொன் றுள்ளவன், அங்ஙனந் தன்னைக் காத்துக் கொள்வதோடு அந்த ஜெந்துவுக்கும் எவ்வகை யூறுமுண்டாகாதபடி காக்குந் தன்மையனாவனன்றி மேற்கூறிய கொலையினைச் செய்யான். இன்னும் அது பற்றிக் கூறுவோம் கேட்பாயாக. (4)

புல்லனோ பலர்ச காயம் பொருந்தினா னேனு மங்ஙன்
வல்லவன் போல்வெ குண்டு வன்னிவீழ் சருகு போல்வன்
சொல்லிய நேரோ ரென்று சொற்றனன் கேட்ட சீட
னல்லதிங் கொருவ னுண்ணு நலனுறச்சவட்டி னென்னை.

என்றனன் பொலநறுந்தாரிலையயிற் குகற்போற் றைய
னன்றல வதுவு மெவ்வா றென்னின்வாய் நாசி கண்கா
தொன்றிய வுடம்பு தானே யுனக்குள ததற்கு முண்டு
துன்றுணர் வுயிருக் காகத் துன்புக டோன்று மாயின்.

துடிதுடிப் பந்தோ சற்றோ தொனித்தழல் சற்றோ நெஞ்சுக்
கடிதனக் களவு முண்டோ கண்டிடு நாமிப் பொல்லாச்
செடியினைப் புரித னல்ல தீபத்தோ டொருகூ வத்துள்
ளடியொடு விழுதலொக்கு மாதலா லுதவா தீதே.

அவ்விடத்தே அற்பன், பலருடைய ஸஹாயமுடைய னாயினும் அவன் சமர்த்தன்போற் கோபித்து, நெருப்பில் வீழ்ந்து நாசமடையுஞ் சருகொத்துத் தன்கேட்டைத் தானே தேடுவோனாவா னன்றி வேறாகான். இப்போது கூறியவற்றை நன்கறிந்து கொள்ளக் கடவாயென்று ஆசிரியர் கூறக்கேட்ட சீடன், அதுசரியே, ஆயினுமொருவன் பசிவேதனை தீர்க்கும் புண்ணியம் பொருந்தப் பிறவுயிரைக் கொலைசெய்தா லென்னை? (5)

என்று வினாவினன். அதுகேட்ட, பொன்னெனத் திகழு நல்ல மாலையணிந்த வேற்படையுடைக் குகப் பெருமானைப் புகழ்ந்துய்யுங் குருவானவர், புசிப்பதற்காகச் செய்யுங் கொலையும் நற்காரியமன்று. எவ்வாறென்னின்; "வாய் நாசி கண் காது உடம்பு முதலியவற்றோடு கூடிய தேஹமெப்படி யுனக்குளதோ அப்படியே அதற்கு முளதாகையால்" உணர்ச்சி யுடன் கூடிய பிராணிக்கு ஹிம்ஸை யுண்டாகுமாயின்,— (6)

ஐயோ! துடிதுடிப்பும் பெருங்குரலிட் டழுதலுஞ் சிறுவரையோ! நெஞ்சு பதைபதைத்தலுக்கு அளவு முண்டோ! காண்பாயாக. நாமிப்பொல்லாத தீச்செயலைச் செய்வது ஓங்கி யெரியுந் தீபத்தோடு ஒரு கிணற்றில் எல்லா நலமுங்கெட விழுதலொக்கும். ஆதலால், இது தகாத காரியமே. 7

இன்னுமிக் கோற னல்லா ரிசைத்தசம் மதமு மன்று
முன்னவ னான வீசன் மொழிந்தசம் மதமு மன்று
தன்னைநே ருருவே கண்டுந் தடிந்துண்ல் பாவம் பாவ
மின்னலீ நரகஞ் சேர்தற் கிதையலால் வேறோ வேண்டும்.

மேலும், இக்கொலை செய்யத்தக்க தென்று ஆப்தர்களால் விதிக்கப்பட்ட காரியமுமன்று. முன்னோனாகியும் அதி பரமாப்தனாகியுமிருக்கும் ஈசனால் விதிக்கப்பட்டதுமன்று. (எவ்வகையானும்) பிறிதொன்றனுடல் தன்னுடலொத் திருப்பதை நேரே பார்த்தும் அதைச் சேதித்துண்டல் பாவமே! பாவமே!! துக்கத்தைப் பயக்கும் நரகத்திற் சேர்தற்கு ஈதன்றி வேறொரு பாவமும் வேண்டுமோ! (8)

ஆயெனக் கழறி னானிவ் வகிலமுட் டனதா யுட்கா
யீயிர தவுண்டி யென்று மிலையெனி னுயிரைத் தேய்க்குந்
தீயவு லோபி யாவை யென்றுநுந் நூலே செப்பு
மாயுமிவ் வாறே பல்லோ ரறையுரைக் களவு மின்றே.

இதனை ஆய்ந்தறிவாயாக வெனக் கூறினர். இவ்வுலகத்தில், தனதாயுளுக்காக அதாவது தான் பிழைத்திருக்கும்படி பசிநோய்க்கு உரிய ஷட்ரஸோ பேதமான உணவினைக் கொடுப்பாயாக; இல்லாவிடின், தன் பிராணனைத் தானே நாளடைவில் நாசஞ்செய்யுங் கொடிய உலோபியாகிய பாவியாவை யென்று உங்கள் சமயநூல் கூறும். இப்படியே சாஸ்திர விசாரஞ்செய்த பெரியோர் பலருங் கூறுங்கூற்றுக்கு மளவில்லை. (9)

ஆதலி னொருவன் றன்னை யன்புடன் வளர்ப்ப தற்கா
யாதொரு பிராணி கொல்லல் யாங்ஙனம் பாவ் மாகு
மோதுக வென்றுசீட னோதிட வித்யா ரண்ய
போதக னாம்வி வேக பூரணன் புகற லுற்றான்.

ஆகையால், ஒருவன் தனது தேஹத்தை வளர்ப்பதற்காக யாதொரு ஜெந்துவைக் கொல்லுவதானது எந்த நியாயத்தாற் பாவமாகும்? சமாதானங் கூறவேண்டுமென்று சீடன்கூற; வித்யாரண்யராகிய விவேகபூரணாசாரியர் விடை கூறலாயினர். (10)

சிவஞான தேசிகம்.

கட்டளைக் கலிப்பா.

சொன்ன வண்ணம் புலால்புசித் தன்றியுட்
டோன்று குக்கிவெந் தீயடங் காதென
வுன்ன வுந்தொக் குடல்வள ராதென
வுள்க வுஞ்சிறி தேனு நியாயமின்
றன்ன முண்ணிந்த நாட்டி லனேகர்க
ளசுத்த வூனுக ராதிலை காய்க்கறி
துன்னும் வித்து நறும்பழ மேநனி
துய்த்து வாழ்தலெல் லாரு மறிந்ததே.

நீ சொல்லியபடி யூனுணவு கொண்டாலன்றி வயிற்றி லுண்டாகும் பசியாகிய கொடுந்தீயானது தணியாதென நினைக்கவும், தோற்போர்வையோடு கூடியவுடல்வளராதென வெண்ணவுஞ் சிறிதேனு நியாயமேயில்லை. அஃதென்னை யெனின், "பெரும்பான்மையாக அன்னத்தையே ஆகாரமாகக் கொள்ளும் இந்நாட்டில் பாவத்திற்குப் பயந்த கிருத கிருத்தியர்களாகிய அனேகர்,—தானுமசுத்தமாகித் தன்னை யுண்போரையு மசுத்தராகச் செய்யுந் தன்மைத்தாகிய ஊனைப் புசியாமல் இலைக்கறி, காய்க்கறி, எங்குங் கிடைக்கும் வித்துக்களாகிய தானியங்கள், வாசனையுள்ள பழ மிவைகளையே மிகவும் புசித்து உடலோம்பி யிருத்தல் எல்லோரும் பிரத்தியக்ஷமாகக் கண்டதே யாம்" (11)

அவரு டம்பினி லேவனப் பில்லையோ
வவரி டத்தி லரும்பல மில்லையோ
வவரு டம்பினுக் கேசரை யெய்துமோ
வவரு டற்குய ராயுளஃ குங்கொலோ
வவரி டத்துய ராண்டன்மை குன்றுமோ
வவரு ருப்பெறு சந்ததி மங்குமோ
வவர்பு சிப்பினி லின்சுவை யோவுமோ
வவர கத்தில் விவேகமின் றோசொலாய்.

புலால் புசித்தலை நீக்கியிருப்போரது தேகத்தில் அழகில்

லையோ? அவர்பால் அருமையாகிய தேகபலமில்லையோ? அவருடம்புக்கே நரைதோன்றுமோ? அவருக்கு உயர்வாகிய ஆயுள் குறையுமோ? அவரிடத்துப் புருடத்தன்மை கெடுமோ? அவரவயவ ஒற்றுமை பெற்ற பிள்ளைகள் நசிக்குமோ? அவர் கொள்ளும் ஆகாரத்தில் இனியசுவையிராதோ? அவரிடத்தில் விவேகமிராதோ? கூறுவாயாக. (12)

யாது மோர்குறை வின்மையி னூன்கொடே
  யாக்கை யோம்பிட வேண்டுமென் றேசொல
லேத மாமுயிர் மேற்றயை வைத்தசை
  வேயு மூச்சுதி ரம்மற்ற வத்துவை
யாத ரத்துட னேயுண்டு வெம்பசி
  யடங்கச் செய்தல்கட் டாய மெனாவொரு
நீத மான வருத்தம் பணிக்கொள
  னிலத்தில் வாழுயர் மாந்தர் விவேகமே.

இவ்விதம் ஊனுண்ணாதாரிடத்தில் ஓர் குறைவுங் காணப்படாமையால், மாமிசத்தை யுட்கொண்டேயுடலைக் காத்தல் இன்றியமையாமை யென்றல் பிரத்தியக்ஷ நியாய விரோதமெனுங் குற்றமாம். ஆகையாற் பிராணிகளின் மேற் காருண்யம் வைத்துச் சரத்தன்மை பொருந்தும் பிராணன், உதிரமென்னும் இவைக ளில்லாத பதார்த்தங்களை விருப்புடனே புசித்துக் கொடிய பசி தணித்தலை அவசியஞ் செய்தல் வேண்டுமென்னு நீதமான அருத்தத்தையே "ஆயுளுக்காக வுணவைக்கொடு" எனும் அந்நூல் வாக்கியங் கட்குச் செய்துகொள்ளல், இப்பூமியில் வாழும் தர்மாநுஷ் டானத்திற் சிறந்த மனிதரின் விவேகத்தாலாய பயனாம். (13)

இவ்வி தங்குரு சொற்றதைக் கேட்டவ
  னினிய தேறன் மொழித்துவர் வாயுளா
யவ்வி தஞ்சொல் லுயிர்ப்பில் பதார்த்தமே
  யருந்து வோர்க்கதி வல்லமை யில்லையென்

றொவ்வு ஞாயத்திற் காட்டுகின் றேனவர்க்
குவணி யாதிபல் லாயுத மேகொடு
தெவ்வர் சூழ்ந்திடு போரிடை யாற்றலில்
செய்கை யேயிது மெய்யெனச் செப்பினான்.

இப்படிக் குரு கூறியதைக் கேட்ட சீடனானவன், இனிய தேன்போன்ற மதுரமொழிகளைத் தருஉஞ் சிவந்த வாயுடைப் பரமாசாரியரே! அவ்வாறு தாங்கள் கூறிய பிராணன் முதலியவற்றோடு கூடாத பதார்த்தமே யருந்துவோர்க்குச் சௌரியத்தன்மையில்லையெனப் பொருந்து நியாயவழிக் காட்டுகிறேன். அதாவது, — அன்னோர்க்கு வாள் முதலிய ஆயுதங்களை யேந்தி மாற்றலர் கூடியிருக்கும் போர்க்களத்திற் சமர்செய்யுந் தன்மையில்லாமையேயாம். இது சத்தியமெனக் கூறினன். (14)

இல்லை யில்லையிந் நாட்டிலு முத்தர
வெல்லைக் குள்ளும் புலானுக ராதவர்
நல்ல வீரர்க ளாயிருக் கின்றனர்
ஞாட்பின் மிக்கவர் பூர்வம் விளக்கியே
சொல்ல ணங்கிதி காசத்தி லேவருந்
துரோண னும்பர சன்பரித் தாமனும்
வெல்லும் வீரம் படைக்கப் புலால்சொரி
விடக்கெண் மானமு முண்டன ரோசொலாய்.

இல்லை, இல்லை. இத்தக்ஷிணதேசத்திலும் வடநாட்டிலும் புலாலுண்ணாதவர்கள் இப்போதும் நல்லவீரர்களாக விருக்கின்றார்கள். போர்க்களத்திற் சிறந்த வீரர்களாக முற்காலத் திருந்தோரின் சரிதங்களை விளங்கக் கூறுந் தெய்வீகம் பொருந்திய இதிகாசத்திலே புகழ்ந்து கூறப்படுகின்ற துரோணாசாரியரும், பரசுராமரும், அசுவத்தாமருஞ் சத்துருக்களைப் புறங்காணும் வீரத்தைப்பெறத் துர்க்கந்தம் வீசும் ஊனை எள்ளளவேனும் உண்டனரோ? கூறுவாயாக. (15)

கட்டெண் ணாதுசொன் னாய்மக னேநிறை
கருணை யாளரெங் கேனுஞ்செந் நீரினைத்
திட்டி யாலறி போதிரங் குந்தயை
செய்தன் மேன்மை யலாதிழி வில்லையென்
றிட்டர் நூல்களெல் லாஞ்சொலும் வேதமோ
டேதி லாகமங் கூறுமென் றோதிய
தட்டி லப்பெரு மான்சொலைக் கேட்டவன்
றாண்டிப் பேசத் தொடங்கின னங்ஙனால்.

பெரியோர் வகுத்த வரம்புகளை யோசியாது பேசிய மகனே! நிறைகருணையுடையோர் எவ்விடத்தாயினும் உதிரத்தைக் கண்டபோது இரக்கப் படுமாறு செய்யுந் தயாமூல தர்மாநுஷ்டானம் சிறந்ததேயொழிய இழிவானதன் றென ஆப்தர்நூ லனைத்துங் கோஷிக்கும். அப்படியே வேதங்களும், குற்றமற்ற சைவாகமங்களுங் கூறுமென வுரைத்த அவ்வாசிரி யரது மறுக்கப்படாத வாக்கியத்தைக் கேட்ட சீடன், அதையும் ஆசங்கித்துப் பேசத்தொடங்கினன். (16)

நன்றி மேய துரோணனு மேனைய
நலிவி லாரு மனேக தளங்களைக்
கொன்றி ரத்தம் புலால்கமழ் பூமியிற்
குறைவி லாமனின் றாரவ ரேதமே
துன்று பாவிக ளாவர்கொ லோநிசஞ்
சொல்க வென்றனன் றீர்த்த னியம்புவான்
வென்றி கொள்ளுஞ் சமீகத்தின் மாண்டிடின்
வீர சொர்க்கமுன் னேகிட்டு மன்றியும்.

நற்குணங்களையுடைய துரோணாசாரியரும், மற்றுமுள்ள வீரத்திறங் குறையாத சௌரியவான்களும் அனேக சைந்நியங்களை உதிரமும் முடை நாற்றமுந் தரத்தக்க யுத்தபூமியிற் கொன்று வீரப்பிரதாபங் குறையாமல் நின்றார்களன்றோ, அவர்கள் கொலைப்பாவத்தாற் பீடிக்கப் பட்டவர் தாமோ? உண்மை கூறவேண்டுமென்றனன்.

அதைத்கேட்ட பரிசுத்தராகிய ஆசிரியர் விடைகூறத் தொடங்கினர். சத்துருக்களை, ஜயிக்கும் யுத்தரங்கத்தின் மாண்டவர்கட்கு உடனே வீரசுவர்க்கமெய்தும். அதுவுமின்றி,(17)

துட்ட சீவன்செய் துன்பொழிப் பானதைத்
தோன்றல் கொல்லுத னல்லற மாமென
விட்ட ஞாயம் பிடித்தந்த மள்ளர்க
ளிழைத்த போர்பெரும் பாவமன் றென்றன
னட்ட மில்குரு வேயது வேயொரு
ஞாய மென்னி னவின்றவந் நீரவர்
சட்ட மானதன் மம்பிடித் தெற்றிய
தன்மை போலிங்ங னேயொரு மைந்தனும்.

துஷ்ட ஜீவர்கள் பிறர்க்குச் செய்கின்ற துன்பத்தை யொழிக்கும்படி யவர்களை யரசனாவான் கொல்லுதல், நல்ல தர்மகாரியமேயென விதித்த விதியையே உறுதியாகப் பற்றி அவ்வீரர்கள் செய்த சண்டை பெரியபாவமாகாதென்று அவ்வாசிரியர் கூறினர். (மேல்), நற்குணங்களிற் குறைவில்லாத குருவே! அதையே யொரு நியாயமாகக் கொண்டு பேசினால், கூறப்பட்ட அத்தன்மையோர், தர்மசாஸ்திர விதியையே கடைப்பிடித்துக் கொன்றதுபோல இக்காலத்து மொரு மனிதன்,— (18)

தன்னு யிர்த்திறங் காக்கு நிமித்தமே
சவட்டன் மாபவ மின்றெனக் கொள்ளினென்
அன்ன புண்ணிய மங்ஙன மில்லையோ
வறைக வென்ற குதர்க்கியை நோக்கிமெய்
மன்னு சேயவ னோன்கழற் பூதியான்
மல்கு துட்டப் பிராணிகொல் லாவிடிற்
றுன்னு மெண்ணில் பிராணிகட் கின்னலே
தோன்று மாகலி னத்தொழி றக்கதாம்.

தனதுயிர்த் திறத்தைக் காக்கு நிமித்தங் கொல்லுதல் பெரும்பாவமில்லை யெனக்கொண்டால், தோஷமென்னோ?

மேற்குறித்த புண்ணியமும் அதனாலுண்டாகாதோ? சொல்லியருள்கவென் றுரைத்த குதர்க்கியாகிய சீடனைப் பார்த்துச் சத்தியரூபியாகிய ஸ்ரீகுமாரக்கடவுளின் வலியதிருவடிச் செல்வமுள்ள ஆசிரியர், விருத்தியாகின்ற துஷ்டப்பிராணிகளை யாருங் கொல்லா விட்டாற் பூமியி லுள்ள அளவிறந்த ஜீவராசிகட்குக் கெடுதியே யுண்டாகும். ஆகையால் அக்கொலை நியாயமான காரியமே. (19)

பூமி மீதொரு வன்பசி யாலுழல்
 போதவ் வூனினை யேயுண்டு தீர்கவென்
றேமி ழற்றுந ராருமிங் கில்லையே
 னென்னி னேனைய வுண்டி யிருத்தலா
னீமி ழற்றிய வாறுண்ணக் கொல்லுத
 னிலையிற் றக்கதன் றென்றனன் கேட்டவ
னாமி தைச்சொலு வோமினி யென்றணி
 நாட்டி லேசொலு மாற்றமொன் றோதுவான்.

பூமியிலே ஒருவன் பசிநோயாற் சுழன்று திரியுங் காலத்தில், அந்த மாமிசமே யுண்டு அப்பசியைத் தணித்துக் கொள்வாயாக வென்று இங்கே சொல்லுநர்யாருமிலர். ஏனெனில், “வேறுவிதவுணவுகளுமிருக்கின்றனவாதலால்.” நீ கூறியவாறு புசிப்புக்காகக் கொல்லுதல், தக்க காரியமன்றென்று கூறினர்: அதைக் கேட்டயர்வுற்ற சீடன், இனி, நாமிதனைச் சொல்லிப் பார்ப்போ மென்று தன்மனத்திற் கருதினவனாகி, அழகிய நாட்டிலே புறமதத்தார் வழக்கமாகச் சொல்லும் வாக்கிய மொன்றைக் கூற வாரம்பித்தான். (20)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

*படைத்தபடைப் புகளெல்லா மனுடர்க் கென்றே
 பல்லோரும் பகர்கின்றா ரதன்மெய் யென்னை
விடைக்குருவே புகலென்றா னத்தன் காளாய்
 விறலாவை யோம்பிப்பால் கறந்து ணற்கென்

றடக்கநறும் பொருள்கோடல் வேண்டு மஃதை
யடித்துண்ணற் கென்றுகொளல் பொருந்தா தென்றான்
மிடற்சீடன் பாலுயிர்கட் கிச்சொல் லொவ்வும்
வேறுயிர்கட் கொவ்வாதென் றேதர்க் கித்தான்.

வினாவிற்கு விடைகூறுவதில் வல்லுநராகிய பரமகுருவே! புறமதத்தா ரென்று நுங்களாற் கூறப்பட்ட அனேகர் வழங்கும் *"படைத்த படைப்புகளெல்லாம் மனுடர்க்கு" எனும் மொழியின் உண்மைக் கருத்தென்னை? கூறவேண்டு மென்றனன். அங்ஙனம் ஆசாரியர், காளைப் பருவமுள்ள வனே! மகிமையுள்ள பசுவை யிரக்ஷித்து அதன் பாலைக் கறந்துண்ண வேண்டுமென்னுஞ் சாஸ்திரங்களுக்குப் பொருத்தமான பொருளை அங்ஙனங் கொள்ளவேண்டும். அதனை வதைத்து உண்ணவேண்டு மென்னும் பொருள் கொள்ளல் அத்திற நூல்களின் கருத்தோடு பொருந்தா தென்றுரைத்தார். (மேல்), பிடிவாதமுடைய சீடன், பால் கொடுக்கும் பிராணிகட்கு மாத்திரம் இஃதொவ்வுமேயன்றி மற்றைப் பிராணிகட் கொவ்வாதென ஆக்ஷேபித்தான்.

[*இம்மொழிப்பொருள், மநுஸ்ம்ருதி 5—28—ற் பிரமதேவர் இவ்வுலக முழுதும் ஜீவனுக்காகாரமாகவுண்டுசெய்தார். ஆதலால், நெல் முதலிய தாவரமும் மிருக முதலிய ஜங்கமமும் ஜீவனுக்கு ஆகாரமாகவேயிருக்கின்றன" எனவருகின்றது. இதற்கும் இங்ஙனம் ஆசிரியர் விரிக்கும் பொருளே பொருளெனக் கொள்க] (21)

அவைபெரிது மோம்பியவை வருத லேக
லலங்கார மாநிற்ற லொலித்த லாட
லுவகைநலம் பாராட்ட லாதி யாவு
முபயோக மெனக்கொளலா மனுடர் யாரு
மிவையல்லாற் பல்லுயிரீ பொருளுஞ் செய்யு
மேவல்களு மனுடர்களுக் காகு நல்ல

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

செவியுள்ளோ யறிதியெனத் தீர்த்தன் சொன்னான்
சீடனருட் குருவைமறு படியு நோக்கி.

மாந்தர் யாவரும், நீ கூறிய மற்றைப் பிராணிகளையும் நன்கு காப்பாற்றி அவை அழகாக வருதல், போதல், அழகுபொருந்த நிற்றல், சத்தமிடல், ஆட்டல் இவைகளாற் றமக்குண்டாகுஞ் சந்தோஷத்தையடைதல் முதலிய பிரயோஜனமெல்லாம் அவற்றாலுண்டாகும் பயனென்று கொள்ளலாம். இவையே யன்றிப் பல பிராணிகள் கொடுக்கும் பதார்த்தங் களும், அவைகள் உழைக்கு முழைப்பும் மனிதர்க்கு உபயோக மாகும். நல்ல கேள்வியுள்ளாய்! இவ்விவரம் அறிவாயாக வென்று பரிசுத்தராகிய குரு கூறினர். சீடனாவான், மறுபடியுந் தயாளுவாகிய குருவைப்பார்த்து, — (22)

ஆனாலு முண்ணுபுலா னீங்க லானே
யகிலநிறை படைப்பெல்லா மனுடர்க் கென்று
மேனானன் குரைத்தமொழிக் கியைந்த வர்த்தம்
விரிக்காத போலியெனச் சொன்ன தாகு
மேனோவிவ் வாறுசொல வேண்டு மையா
வெனவினவக் குருமைந்தன் வதன நோக்கிக்
கூனான குதர்க்கமதே கற்றா யொன்றிற்
கொள்ளுவதுந் தள்ளுவது மறியாப் பேதாய்.

ஆனாலும், மனித ருண்ணும் புலாலை நீக்க வேண்டு மென்னுங் கருத்தினால், "உலகி னிறைந்த படைப்பெல்லாம் மனுடர்க்கு" என்று நான் நன்றாக மேலே யுதகரித்த வாக்கியத்திற்குத் தாங்கள் செய்த பொருள்— பொருத்தமான தாகாமே போலியென வாகும். ஐயரே! ஏனோ விப்படிக் கூறவேண்டு மென்று கேட்க; குருவானவர், அச்சீடன் முகத்தை நோக்கி வக்கிரகதியான குதர்க்கமே பேசக் கற்றவனே! யாதொரு வஸ்துவிற் கொள்ள வேண்டியதையுந் தள்ள வேண்டியதையும் அறியும் ஊகமில்லாப்பேதையே! கேட்பா யாக. (23)

ஈசனது சிருட்டியினி னன்றுந் தீது
மிருநரக சுவர்க்கமெனு மிரண்டு முண்டே
நேசமுட னின்னுநனி விளக்கு கின்றேம்
நிரப்பற்ற வொருமாது ளங்க னிக்க
ணாசில்கெழு வின்சுவையுந் துவர்ப்பு மிப்பி
யதனினன் னித்திலமு மழிபு லாலு
மாசிலரவின் மணியுங் கொடிய நஞ்சு
மடுவினிடை நன்னீரும் பழுத்த சேறும்.

உயர்வில்வந் தன்னினறும் பூவு முள்ளு
முளவிவற்று ளருந்துவன வருந்தல் யாதோர்
செயிரறநன் கணிவனவே யணித லன்றோ
சீலமுறு மானுடர்கட் காகுமிந்த
மயர்வில்லாக் காட்டாலே யுயிரி லுள்ள
வத்துவெலா முபயோக மாகா வன்றிப்
பயமில்லாப் புலிமனுடர்த் தின்ப தாலே
பகர்மனுடர்ப் படைத்ததுவு மதற்கென்றாமே.

ஈசுவரசிருஷ்டியிற் சுவர்க்க நரகமெனு மிரண்டுமுள்ளவாறு போல நல்லதுங் கெட்டதுமாகிய இரண்டுமிருக்கும். இவ்விஷயத்தைப் பிரியத்துடன் இன்னுந் தெளிவாக விளக்குகின்றோம். குறைவில்லாத ஒரு மாதுளங்கனி யின்கண்ணே குற்றமற்ற மதுரமுந் துவர்ப்பும், முத்துச்சிப்பியில் நன்முத்தும் அழுகியொழியத்தக்க மாமிசமும், சர்ப்பத்திற் குற்றமற்ற நாகரத் தினமுங் கொடுமையான விஷமும், மடுவிற் சுத்தோதகமும் அழுகற்சேறும், — (24)

உயர்ந்த வில்வமரத்திற் சுகந்தமலரும் முட்களும் உள்ளன. இவற்றுள் எவை புசிக்கத்தக்கனவோ அவற்றைப் புசித்தலும், எவை நன்கு தரிக்கத்தக்கனவோ அவற்றைத் தரித்தலுமன்றோ ஆன்றோராசாரம் பாதுகாக்கும் உத்தமர்க்குத் தக்கனவாகும். இந்த மயக்கமில்லாத உவமானத்தால் ஏற்படு முப மேயமாவது பிராணிகளின் தேகத்துள்ள சகலமும் உபயோகமாகா, சிலவே

உபயோகமாகுமென்பதாம். இந் நியாயமுமன்றிப் புலியானது மனிதரைப் பசியின் பொருட்டுத் தின்பதுண்டு. அக்காரணத் தால் மனிதரைப் படைத்ததும் புலியி னுபயோகத்திற் கென்று கூறவும் இடந்தருமே பிறர்கொளும் அவ்வருத்தம்.

[இங்ஙனம், மாதுளம்பழத்திலுள்ள இன்சுவையையும், மடுவிலுள்ள சுத்தோதகத்தையுமே அருந்தும் பொருள் களாகவும்; முத்தையும், நாகரத்தினத்தையும், வில்வ மலரையுமே அணியும் பொருள்களாகவுங் கொள்க.] (25)

இவ்விதமவ் வொவ்வாச்சொல் விளம்பிக் கொன்றூ
னிரையெனவே புசித்திடுவோர் கொளுமோ ரர்த்த
மொவ்வுமெனின் மலமூத்தி ரங்க ளைத்தா
முண்ணாமல் விடுவதென்கொ லசுத்த மென்றே
தெவ்வுரைக்கத் துணிவதென்கொன் மதிதா னுண்டேற்
றேர்ந்துகொளா யெனவறிஞன் சொன்னா னங்ஙன்
கவ்வையுணர் மாணவக னனியோ சித்துக்
கருணைகிளர் குருமுனிதைக் கழறுற் றானால்.

இந்தப்படி அந்தப் பொருத்தமில்லா வுரையையுரைத்துக் கொண்டு பிராணிகளைக் கொன்று அவற்றின் தசையை யாகாரமாக வுட்கொள்வோர் கொள்ளுகின்ற அவ்வருத்தம் அங்கீகரிக்கத்தக்க தெனின், அந்தப் பிராணிகளின் தேகத்திலுள்ள மாமிசத்தை யுண்பது போல மலமூத்திரங்களையும் உண்ணாமே நீக்குதலென்னை? அவைகளசுத்த மென்று விரோதங் கூறுதலென்னை? உனக்கு நுட்பபுத்தி யிருந்தால் விசாரித்தறிவாயாகவென்று மேதாவியாகிய ஆசிரியர் கூறினர். (மேல்), துன்பத்தை யுணரத்தக்க மாணாக்கன் நன்றாக யோசித்துப் பார்த்துக் காருண்ய வீக்ஷணத்தாற் பிரகாசிக்குங் குரு சன்னிதியிற் பின்வருமாறு கூறுவானாயினன். (26)

இங்கோதி யுள்ளனவுட் சிலவென் கூற்றிற்
 கிரிபின்றி யொவ்விடுமெவ் வாறென் றக்காற்
றங்காம லிழிமலமூத் திரமு மிந்தத்
 தரணிமிசை வைத்தியகன் மத்திற் காகுஞ்
செங்காவி யன்னவிறைச் சிகளு மந்தச்
 செய்கைக்கு வைத்தியர்க ளுபயோ கிப்பார்
மங்காத விவ்வழியி னாலெல் லாமிம்
 மாந்தர்க்கா மெனுமாற்றா னென்றா னன்றே.

இப்பொழுது தாங்கள் கூறிக்கொண்டு வந்தவற்றுட் சில, நான்கொண்ட பொருளுக்கு விரோதமின்றியியைவனவாகும். எவ்வழியா லென்னில் "உள்ளே தங்கியிராமல் வெளிப்படு மூத்ர புரீஷங்களும் இப்பூமியில் வைத்தியத் தொழிலுக்கு உபயோகமாகும். செங்காவிக் கல்லொத்த இறைச்சிகளையும் வைத்தியர்கள் அத்தொழிலுக்கு உபயோகப் படுத்துவார்கள். குறைவில்லாத இந்நியாயத்தால் எல்லாப் பிராணிகளிலுள்ள எல்லாப் பொருளும் மனிதரின் உபயோகத்திற்கு ஆகு மென்னும் வழியால்" என்றான். (27)

தீமனமில் பெருங்கருணைக் குருவென் பான்மா
 திணிதோளோ யெதற்கெதுப யோக மாமோ
நேமவழி யதுசாலு முயிர்க்கூ றின்றி
 நீணிலத்தி லவற்றிலிருந் தெடுக்கும் பண்டந்
தாமதமில் லாதுபயோ கிக்க லாமத்
 தாழ்வற்ற கருமத்தாற் பாவ மெய்தா
தேமனென வுயிர் தொலைத்தூ னருந்த லாகா
 தெனுந்தீர்வை யொன்றேநந் துணிபு கண்டாய்.

(மேல்), தீயசிந்தையில்லாத மஹா காருண்ய மூர்த்தியாகிய குருவானவர், மிக்க திண்மையான புஜங்களை யுடையவனே! எக்காரியத்திற் கெது பயன்படுமோ அக்காரியத்திற்கு அதை யுபயோகிக்க வேண்டுமென்று நியமத்தைக் கொண்ட மார்க்கம் ஏற்புடைத்தே. (இந்த) நெடிய பூமியில் உயிர்களுக்கு ஹிம்ஸை

யில்லாமல் அவைகளிலிருந் தெடுக்கப்படும் வஸ்துக்களை யாதொரு தடையுமின்றி யுபயோகிக்கலாம். அந்த நிந்தையற்ற கருமத்தாற் பாவம் வரமாட்டாது. நமனைப்போல உயிரையு முடம்பையும் பிரிப்போராகி யூனருந்தல் அடாதென்னு முடிபொன்றே நமது ஒருதலையான சித்தாந்தமாம்.

[ஹிம்ஸை யில்லா தெடுக்கப்படும் வஸ்துக்கள். — உயிர் நீங்காக் காலத் தெடுக்கத்தக்க முதிர் இறகு, முதிர் உரோமம், முதிர் நகம், முதிர் யானைத்தந்தம், மலம், மூத்திரம், முதலியனவும்; உயிர் நீங்கியகாலத் தெடுக்கத்தக்க அந்தப் பண்டங்களும், புலித்தோல், மான் ஆடு மாடு முதலியவற்றின் றோல், கொம்பு, நரம்பு முதலியனவுமாம்.] (28)

பசுவதைத்து வைத்தியமே செய்த னீத
பக்கமன்றே னென்னினந்த வைத்தி யந்தா
னுசிதமுள்ள பற்பத்தாற் செய்யுந் தெய்வ
மோடதியாற் செய்திடுமா னுடமு மாமூன்
கசியவதிற் செய்தலிராக் கதமுற் சொற்ற
கரிசிலிரண் டுந்தேர்ந்தோ ரிதனைச் செய்யா
ரசுசியுடை யிராக்கதமென் வைத்தி யத்தை
யருட்குணத்தர் விரும்பகில்லா ரதனா லென்றான்.

பசுவெனப்படும் உயிரை வதைசெய்து அதனூனைக் கொண்டு வைத்தியஞ்செய்தல் நியாயமார்க்க மன்று. ஏனெனில், வைத்தியமானது தகுதியுள்ள பஸ்மங்களைக் கொண்டு செய்யும் தேவவைத்தியமென்றும், மூலிகைகளைக் கொண்டுசெய்யும் மாநுஷவைத்தியமென்றும், உதிரங் கசியும் ஊன்களைக் கொண்டுசெய்யும் இராக்ஷத வைத்தியமென்றும் மூன்று வகையாக இருக்கும். குற்ற மற்ற முற்கூறிய இரண்டிலுந் தேர்ச்சியுள்ள வைத்தியர்கள் கடைப்பட்டதாகிய அந்த இராக்ஷத வைத்தியஞ் செய்யச் சம்மதியார்கள் : அதன் பாவத்தன்மையை நோக்கிக் காருண்ணிய சுபாவமுடையோரும் அவ்வித வைத்தியத்தைச் செய்துகொள்ள விரும்பார்களென்று கூறியருளினர். (29)

சிவஞான தேசிகம்.

கட்டளைக்கலிப்பா.

கேட்ட சீடனவ் வாறெனி னிப்பெருங்
கிடக்கை மானவ ரல்லிழி பல்லுயிர்க்
கூட்டத் துண்ணற் புலாலுள தைத்தினங்
கொன்று தின்மினென் றேயிறை கூறினன்
வாட்ட மின்றத னாலுண்ண லாமென
வழங்கி யன்னண மேசிலர் செய்யவிந்
நாட்டி லாயதெவ் வாறவர் மட்டிலே
நாதன் றீர்த்தன னோநவில் கென்றனன்.

இவ்வாறு கூறிய ஆசிரியர் கூற்றைக் கேட்ட சீடன், அப்படியாகில், "இவ் விஸ்தீரணமான பூமியில் மநுஷ்யரல்லாத மற்றைக் கீழ்ப்பட்ட பல பிராணிகளின் கூட்டத்துள் நல்ல மாமிசமுள்ளதைப் பிரதிதினமுங்கொன்று தின்பீர்களாக" என்று சருவேசுவரனே விதித்துளான்; ஆகையால் நம்மைப் பாவம் பீடியாது; ஊனுண்ணலாமென ஒரு கோட்பாட்டை வழங்குவித்து அப்படியே சிலர் செய்துவர இந்நாட்டி லுண்டாயிருப்பதென்னோ? (ஒருவாறு) அவ் வழக்கம் அன்னவர் மட்டிலிருக்கலாமென இவ்வீசுவ்ரனே விதித்த னனோ? விளக்கியருள்க என்றனன். (30)

எப்பெ ரும்புவி வாழுயிர் யாவுமா
ளேசி றெய்வ மிரண்டிலை யொன்றுகாண்
டப்பி லாவது நீதியின் மிக்கதே
சருவ வாவிகள் கண்ணுமன் புள்ளதே
யப்ப னன்னைக்கு மப்பனு மன்னையு
மாகி நிற்குமஃ தேயரு ளாலுயர்
வொப்பு டன்றரு மாவிகொன் றுண்மினென்
றோதிற் றென்றிட லெண்ணறு மேதமே.

எவ்வெப் பெரும்புவனத்திலும் வாழ்கின்ற சர்வ ஜீவராசிகளையும் ஆண்டருளும் பரம்பொருள் ஒன்றேயன்றி யிரண்டில்லை. அனாதி மலமுக்த சித்ரூபியான காரணத்தால்

ஒரு சிறிதுங் களங்கமின்றி யிருக்கும் அப்பரம்பொருள், நியாயம் விதிப்பதிற் சிறந்துளது. அப்பொருள், சர்வான்மாக்க ளிடத்தும் பரிபாகத்துக் கேற்றபடி அன்புடையதே. எல்லாவுயிர்களின் பிதா மாதாக்கட்கும் அப்பனும் அம்மையுமா யிராநின்ற அந்தப் பரமான்மாவே காருண்ய மேலீட்டினால் ஒன்றற்கொன்று உயர்வாயும் ஒத்ததாயுந் தன்னாற் சிருஷ்டிக்கப்பட்ட பிராணிகளை மனிதராகிய நீங்கள் கொன்றுண்ணக் கடவீர் களென விதித்ததென்று கூறுவதும் அளவற்ற பாவமாம். (31)

அவ்வு யிர்க்கொலை செய்கையின் மந்திர
மறைத லிற்பிழை யில்லையென் றாலங
னொவ்வெ னுந்துன்பி லாதற வேண்டுமே
நொந்து கத்தித் துடித்திட லென்கொலோ
வொவ்வு ஞாயமின் றாகலி னக்கொலை
யுணர்வி லான்றன்னைத் தான்வதைக் கின்றவோ
ரெவ்வ மொக்குமன் பாலிது பற்றிநா
மின்னுங் கூறுது நீநனி யுய்த்துணர்.

அந்த ஜீவஹிம்ஸையைச் செய்யும்பொழுது அதற்காக வேற்பட்ட மந்திரத்தை முன்னரோதி யிடுதலாற் குற்றமில்லை யென்னிலோ, அங்ஙனம் நோயென்கிற துன்பமில்லாது அவ்வுயிர் போக வேண்டும். துன்படைந்து வாய்விட்டலறித் துடித்தல் பிரத்தியக்ஷமாகையால், மந்திரமோதிக் கொள்வதில் விசேஷமென்னை? பொருந்து ஞாயமொன்றுமில்லை. ஆதலின், அத்தகைய கொலைப்பர்வம் அறிவிலியாகிய வொருவன் தனக்குத்தானே செய்து கொள்ளுந் தற்கொலைப் பாவத்தை யொத்ததாகும். அன்பினால் இவ்விஷயம் பற்றியே யின்னுங்கூறுவோம்: நீ நன்றாக உய்த்துணர் வாயாக. (32)

உயிரைக் கொன்றுடல் வாட்டி வதக்கியிங்
குண்ணத் தானல் விவேகிகட் கெப்படி
முயலு நெஞ்ச மனேக வுயிர்ப்புலான்
முடைக ளுண்பவர் கட்கும் பிணங்களை

நயவு ணாவென வுண்டுவக் குஞ்சவம்
 நரிக்கு நாய்க்கு மிருக்கின்ற பேதமென்
வியன்வி வேகிக ளிவ்விரண் டாய்வுறின்
 மேல திற்றென வேயறி வாரரோ.

பிராணிகளைக் கொன்று அதன் மாமிசத்தைத் தீ முன்னர்ப் பசனஞ் செய்து உண்பதற்கு நல்ல விவேகிகளின் மனந்தான் எப்படிப் பிரயத்தனப்படும்! அனேக ஜீவராசிகளின் துர்க்கந்தத்தோடு கூடிய ஊனைப் புசிப்பவர்க்கும், பிணங்களைத் தக்கவுணவென வுண்டு சந்தோஷிக்கும் பேய்க்கும், (இடுகாட்டு) நரிக்கும், நாய்க்குமிருக்கின்ற பேதந்தா னென்னை! விசாலமான விவேகமுடையோர் யோசிப்பா ராயிற் புலாலுண்டலோ, சாகமுண்டலோ சிறந்ததென்று தமக்குத்தாமே யறிந்து கொள்வர். (33)

ஊனை யேபுசிக் குங்குலத் தோர்மக
 னொருபி ராணிகொள் வெந்துயர் கண்டிடி
னீன மேதுமி லாப்பரி தாபமுற்
 றிரங்கு வானவ னக்குண னாயினுந்
தானுண் ணற்கென வேவதை செய்கையிற்
 றயவெ னக்குண நீத்தவ னாவனே
யான தாலிந்த மானுட னுக்குமே
 லாய தெய்வந் தயாவுடைத் தென்றுமே.

புலாலையே யுண்ணப் பழகிய குலத்திலுதித்தவருள்ளும் கருணையுள்ளவொருவன், ஒரு பிராணியாதோவொரு காரணத்தாற் படுந் துக்கத்தைக் கண்ட வழி, எவ்விதத்துங் குறைவற்ற பரிதாபமுடையனாயிரக்கப்படுவான். அவன் அத்தன்மைய னாயினுந்தானுண்பதற்காகக் கொலை செய்கை யில் காருண்யமாகிய அந்தக் குணமில்லாதவனே யாவன். ஆகையால், இந்த ஏகதேச கருணையுள்ள மனிதனுக்கும் மேலாயுள்ள தெய்வமானது நித்திய கருணாநிதியேயாம். (34)

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

அத்தி றத்தெய்வ மாவிகொன் றுண்மினென்
றருளி னாற்சொலிற் றென்பதைப் பாவமு
ளெத்தி றப்பவ மெத்திற வன்கண்மை
யெத்தி றத்துணி பெத்திறப் பேதைமை
யெத்தி றப்படி றெத்திற மோசமென்
றெத்தி றத்தளந் தோதிடு வேஞ்சைசை
பித்த ரும்பழி சொல்வர்கொல் லாமையே
பேர றந்தவ மென்றிறை செப்பினான்.

அத்தகைய தெய்வம், மனிதர்மீது வைத்த கிருபையினாற் பிராணிகளைக் கொன்று புசியுங்களென்று கூறிற்றென்னும் வாக்கியத்தை, பாபங்களில் எத்தன்மையான பாபமென்போம். கொடுமைகளில் எத்தன்மையான கொடுமை என்போம். துணிவான காரியங்களில் எப்படிப்பட்ட காரியமென்போம். எப்படிபட்ட பேதைமையென்போம். எவ்வகையான பொய் யென்போம். எவ்வளவு பெரியமோசமென்போம். எவ்வகையால் அதன்தன்மை முழுதுமாராய்ந்து கூறும் ஆற்றல் பெறுவோம். சீச்சீ! பித்தங்கொண்டவரும் பழிப்பர். கொல்லாமையே பெருந்தருமமென்றும், கொல்லாமையே பெருந்தவமென்றும் ஆசாரியர் கூறினர். (35)

கலிநிலைத்துறை.

கொன்றாற் பாவந் தின்றாற் றீரு மெனுங்கூற்றென்
னென்றான் சீடன் மைந்தா கேளென் றெழிலாசான்
றின்றாற் பாவந் தீரு மென்னிற் றினந்தோறுங்
கொன்றோ தின்னத் தீர்வுண்டாகுங் கொடிதாமே.

"கொன்றாற் பாவம்: தின்றாற்றீரும்" என்னும் வாக்கியத்தின் பொருளென்னவென்று சீடன் கேட்டனன். அதுகேட்ட அறிவழகு வாய்ந்த ஆசிரியர், மைந்தனே! நான் சொல்வதைக் கேட்பர்யாக. தின்றாற் பாவந் தீருமென்றால், தினந்தோறுங் கொன்று தின்றல் ஆகுமெனலோ சித்தாந்தம்? அப்படிச் செய்யிற் கொடிய பாவஞ் சேருமன்றோ. (36)

சிவஞான தேசிகம்.

கலிவிருத்தம்.

அந்தமுடி வின்னதென வாய்வலியி லார்தா
மெந்தமுடி வானநடு வெண்ணுவர் மதித்தே
செந்தயவி லாமனுடர் செய்பொருண்மெய் யென்று
புந்தியின் மதித்துயிர் வதைத்துமிசை புல்லர்.

"பாவம்: தின்றாற் றீரும்" என்பதன், துணிபொருள், — "ஆஹாரத்திற்கென்று தன் மனமாரக் கொல்லாமல் யாதோ ரறியாமையாலே தன்னாற் கொல்லப்பட்ட பிராணியினது மாமிசத்தை அக்கொலைப்பாவ பரிகாரத்தின் பொருட்டுப் பச்சையாகவே துயரத்தோடு இம்மையிலேனும், மறுமைப் பயனாகிய நரகத்திலேனும் புசித்தாற்றான் தீரும்" அதவாது "கொலைப்பாவம் அநுபவித்தன்றி யொழியாது" எனவாகு மென்பதை விசாரித்தறியுஞ் சக்தியில்லாதார், எந்த முடிவான ஞாயத்தைத்தான் யூகத்தால் யோசிக்குந் திறமுடையராவர்! செவ்விதான காருண்ய மில்லாத அற்பர் செய்யுமருத்தத்தை யுண்மைப் பொருளாக மதித்துப் பிராணிகளை வதைத் துண்கின்ற கீழோர்,— (37)

ஏசுவினை யாலுலகி லெள்ளளவு நல்ல
யோசனையி லாநடையு ளாரெனவு மாவ
ராசுடைய வன்னவர்செய் யாவிவதை தானே
தாசரடை நன்னிலை கெடுத்தளவில் சன்மம்.

இவ்வுலகிற் பலரும் பழிக்குங் காரியங்களைச் செய்தலால், எள்ளள்வேனும் நல்ல யோசனையில்லாத வொழுக்க மற்றவ ரெனவுமாவர். பாவிகளாகிய அத்தன்மையோர் செய்யுஞ் சீவக்கொலையானது செய்த அவரைப் பெரியோரடை யத்தக்க மோக்ஷாதிக்ய மெய்தாது பண்ணி, அளவற்ற ஜன்மங்களில்,— (38)

உளனவுடல் சேர்த்தறிவு கொன்றுபிணி யுண்ணு
மீனவடி வாக்கியிறை யெண்ணுணர் வழித்து
மானவரு ளீனரென வேசெயு மதத்தா
லூனுயிர் வதைத்துமுடை யுண்டுதிரி வோனை.

அற்பதேகங்களிற் புகும்படிசெய்து, அங்ஙனம் நல்லறிவைக் கெடுத்து, நோயால் நொறுங்குண்ணும் ஹீனரூபமாகச் செய்து, ஆண்டு ஈசுர தியானத்திற்குரிய நற்புத்தியையழித்து, மானுட தேகமெடுத்தவருட் கீழ் மக்களென வுலகு கூறும்படி செய்யும். மதத்தினாற் சீவனை வதைத்து அதன் றுர்க்கந்த மாமிசத்தைப் புசித்துத் திரிபவனை,— (39)

இம்மைமுடி வாமறுமை யிற்புலவில் வீழ்த்து
விம்மிய வவன்றசையை வீரமற லுண்ணுஞ்
செம்மையின் முடைப்பிரியன் சிந்தைசிறி தேனும்
வெம்மையறு பூததயை மேவிடுவ தில்லை.

புலாலுடம்பு நீங்கியவுடன்வரு மறுமையிற் புலால் நரகத்திடை வீழ்த்தி, வீரத்தோடு கூடிய காலபடர் அவனது புஷ்டித்த தசையைப் பிடுங்கித் தின்னுமாறு செய்வர். அருவருப்பான நாற்றமுள்ள மாமிசப் பிரியனது மனத்திற் கிஞ்சித்தேனும் வெப்பமென்பதில்லாது தண்ணெனவிருக்கும் ஜீவகாருண்யம் பொருந்துவதேயில்லை. (40)

எப்பொழுது பூததயை யென்பதிலை யோகே
ளப்பொழு தருட்பர னருட்பரிவு மில்லை
தப்பினது விம்மகி தலத்துறு செருக்கா
லற்பனென வாயிடுவ னேகனக னேனும்.

நாம் சொல்வதைக் கவனிப்பாயாக. எக்காலம் வரையிற் சீவகாருண்ய மொருவனிடத் தில்லையோ அக்காலம் வரையிற் கிருபாநிதியாகிய பரமேசுவரனது காருண்ய சக்தி யவனைப் பரிவுடன் நடத்துவதில்லை. அப்படி யெவனொருவன்

அக்காருண்ய சக்தியின் அருளையிழந்தனனோ வவனறிவிலார் விரும்பத்தக்க இவ்வுலகச் செருக்குடையனே யாவனதனாற் குபேரனொத்த மஹதைசுவரியவானா யிருப்பினும் அவன், அற்பனென யாவருங் கூறத்தக்க நிலையையே யடைவன். (41)

ஏனெனி னிரங்குமன மின்றிநிதி யீட்ட
லீனவினை யந்நிதி புரத்தனல மில்லா
மானவர்கை யீதலிவை யால்விசன மல்கி
யூனமுற லாலென வுரைத்தனன் விரித்தே.

ஏனெனில், எவ்வுயிர் மாட்டும் இரங்குமனமின்றித் திரவியந் தேடுதலாலும், அப்படித் தேடுந் திரவியத்திற்குக் கடவுள் கருணையைத்தானே பெருங்காப்பாக்கிக் கொள்ளாத அவன் றனது அற்பத்தொழிலையே காப்பாக்கிக் கொள்ளுதலாலும், யோக்கியமில்லா மனிதரை நம்பி அவர் கையில் அத்திரவியங் கொடுக்க நேரிடுதலாலும் அத்திரவிய மவனைவிட்டு நீங்கும்: அக்காரணத்தா லவனுள்ளத்திலே துக்கம்பெருகி ஈனநிலையை யடைவனாகலின் என்று ஆசிரியர் விரித்துக்கூறினர். (42)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இவைசெவி யேற்ற சீட னிழிபுலான் மறுத்த லென்று
நவில்வது புலாலு டம்பை நனிமறந் திருத்த லென்றும்
விவிதவைம் புலன்மறுத்த லென்றுமே சிலர்வி ளம்ப
லவனியி லுளவவ் வாய்மை யறைகென வளியோன் கூறும்.

இவ்விதம் ஆசிரியர் கூறினவற்றைச் செவிக் கொண்ட சீடன், "இழிவான புலாலை மறுத்தல்" என்று வழங்குஞ் சொற்றொடர்க்கு, மாமிசத்தாலாகிய வுடம்பை நன்றாக மறந்திருத்த லென்றும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்னும் ஐம்புலனையும் மறுத்திருத்த லென்றுஞ் சிலர் பொளுரைத்தல் இப்பூவுலகிலுள்ளன. அவ்வுண்மையயுங் கூறவேண்டுமென; கருணா மூர்த்தியாகிய ஆசிரியர் கூறலாயினர். (43)

உடன்மறந் திருக்கின் ஞான வொள்யடைந் திடுமே சீவன்
முடைநுகர் நசைகா ணுங்கொன் மூசுமைம் புலனீக் கத்து
மடமுடை மனமே தக்கால் வழுப்புலா னசையு முண்டோ
வடல்விழிப் புளர்க்கே சொற்ற தாகுமம் மறுத்தன் மன்னோ.

உடம்பை மறந்திருக்குநிலை யெய்தின் ஞானவொளி அதவாது அருளொளியை ஆன்மாவடைந்திடுமே. அக்காலத்தில் அதற்கு மாமிச முண்ண வேண்டுமெனும் விருப்ப முந் தோன்றுமோ! மொய்த்திருக்கும் ஐம்புலனுமின்றியிருக்கு நிலை வருமாயின் அக்காலத்தே மூடமனந்தா னுண்டோ!! அம்மனத்திற் றோன்றும் புலால்விருப்பந்தா னுண்டோ!!! ஒன்று மிராது. (ஆதலால்), அந்தப் புலான்மறுத்தல் இந்த வலிய ஜாக்ராவஸ்தையிலுள்ள சாதாரண ஜனங்களுக்கே சொன்ன தாகும். (44)

உயிர்க்கொலை புரியு மன்னோ ருயர்மறைக் கொலையுஞ் செய்ய
முயற்சிகொள் கின்றார் தேவர் மொழிந்தவவ் வதிகா ரத்தே
யுயிர்க்கொலை பாவ மென்று மூனுண வொண்ணா தென்று
மயிர்ப்புற விளக்க லானே யவர்முயல் வதுமுற் றாதே.

உயிர்க்கொலை செய்து வருமவர்கள், உயர்ந்த வேதக்கொலையுஞ் செய்ய யத்தனிக்கின்றனர். திருவள்ளுவதேவர் தாமருளிச்செய்த தமிழ்வேதமாகிய திருக்குறளிலுள்ள அந்தப் "புலான்மறுத்தல்" எனும் அதிகாரத்திலே உயிர்க் கொலை பாவமென்றும், ஊனுண்டல் அடாதென்றும் சந்தேகமற விளக்குதலால், அவர்கள் இவ்விதமாகப் புலான்மறுத்த லென்றதற்கு வேறு பொருள் கூறி, அதனை நிலைபெறுத்த முயல்வது முற்றுப் பெறாது.

["அவர் முயல்வது முற்றாதே" என்பதற்கு, ஊனுண்ணா மையாகிய ஓரிந்திரிய நிக்கிரகத்தில் அற்ப பாகத்தைச்செய்ய வல்லுந ராகாதார், எவ்வண்ணம் ஐந்திந்திரிய நிக்கிரக முதலிய

அருந்தொழில்களைச் செய்ய வல்லுநராவ ரென்பதும் பொருளாகலாம்.] (45)

நூலுரை புரட்டிக் கூறு நுண்ணுணர் வில்லா தாரும்
வாலுறு விரத நாளில் வழுப்புலா லொழித்துண் பார்க
ளேலது விரத மாயி னென்றுமஃ தின்றி யுண்டன்
மேலவர் புகழு நித்த விரதமா காதோ சொல்லாய்.

சாஸ்திரக் கருத்துக்களைத் தங்கள் கெட்ட வழக்கத்தோடு ஒத்திருக்கும்படி மாற்றிக் கூறும் நுட்ப அறிவிலிகளும், பரிசுத்தம் பொருந்திய விரத தினங்களில் விரத விரோதமாகிய புலாலொழித்துச் சுத்த ஆஹாரத்தை யுண்பார்கள் என்ற அக்காரியம் விரதமானால், அக்கொல்லாவிரதத்தையே எப்பொழுதும் விரதமாகக் கொண்டு அப்புலாலுணவை யொழித்திருத்தல் பெரியோராற் புகழப்பட்ட நித்தவிரத மாகாதோ? சொல்வாயாக. (46)

என்றன னிறைவன் சீட னியம்பிய புலான்ம றுத்த
லென்றுரைப் பதுங்கொல் லாமை யென்பதுந் துறவி யற்க
ணொன்றின வதனா லேனோர்க் கிலையென வுரைப்போர் வாதை
வென்றிடு வழியா தென்ன மெய்க்குரு புகற லுற்றான்.

என்று குரு கூறியருளினர். (மேல்), சீடன் கூறப்பட்ட புலான்மறுத்தலெனும் அதிகாரமும், கொல்லாமையெனும் அதிகாரமும் திருக்குறளிலே துறவறவியலில் வைக்கப்பட்டமையின், மற்ற ஆச்சிரமிகளுக்கு அந்த நியமம் ஆவசியக மன்றெனக் கூறுபவர்கள் வாதத்தை வெல்லும் மார்க்கம் யாது? கூறியருள்கவென; சத்தியவானாகிய ஆசிரியர் கூறலாயினர். (47)

அத்திற வருத்தங் கொள்ளி னத்துற வியலிற் றானே
வைத்துள வாய்மை கள்ளா மைவெகு ளாமை யெல்லா
நித்தமில் லறத்தார்க் கில்லை யென்னவா மிவைக ணீங்கி
னெத்தன்ம மனையி லோங்கு மாகலி னவரி யம்பும்.

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

அருத்தமொவ் வாது மற்றே தருத்தமென் றிடிற்பு லாலுண்
கிருத்திய மென்ப தாதி யாவையுங் கிருகத் தன்றான்
விருத்தியி னிழைக்க லாகா விளம்பவற் றினையில் விட்டோன்
கருத்தினுங் கருதலாகா தென்றலவ் வியற்க ருத்தால்.

அவ்விதப் பொருள் கொள்ளின், அத்துறவறவியலிலேயே வைக்கப்பட்ட வாய்மை, கள்ளாமை, வெகுளாமை யாதி தருமங் களெல்லாம் என்றுங் கிருகஸ்தாச்சிரமிகளுக்கு அனாவசியக மென்று கூற இடந்தரும். கூறிய வாய்மையாதி தருமங்க ளில்லாவழி, இல்லறத் தார்க்கேற்பட்ட தருமங்களி லெந்தத் தருமம் விருத்தியாகும்? ஒருதருமமு மில்லா தொழியுமாகலின், அவர்கள் கூறுகின்ற,— (48)

அருத்தம் பொருந்தாது. பொருந்தும் அருத்தம் யாதென் னில், புலாலுண்டொழில் முதலிய சகல அகிர்த்தியங் களையும் கிருகஸ்தன், தனதிச்சையின்படி செய்யாது தருமங்களை யநுஷ்டிக்க வேண்டும். துறவி, அந்த அகிர்த்தியங் களை மனத்திலுஞ்செய்ய நினைத்தல் கூடாதென்பதே அவ்வியலின் கருத்து. (49)

[வாய்மை = பொய்கூறாது மெய்கூறல், கள்ளாமை = களவுசெய்யாமை. வெகுளாமை = கோபஞ் செய்யாமை]

முழுமுதற் கடவுட் கின்றி மோகுறு தமக்கென் றிங்கே
யுழுதொழில் கூலி வேலை யுறைவிட மெழுகல் கூட்ட
லெழுமனன் மூட்ட றண்ணீ ரெடுத்தனெல் லரிசி குத்தல்
வழிவரு சிறுபி ராணி மரணவெம் பாவந்திர.

சிவனவ.னடியர் தேவர் தென் புலத் தினர்ப்பூ சித்தே
யுவகையி னமுத வன்ன மூட்டுக வென்று சைவச்
சிவதரு மோத்த ரந்தான் செப்பிடு மாயி னில்வாழ்
பவருயிர் கொன்று தின்னப் பகருமோ வறநூ லன்றே.

முழுமுதற் கடவுள் பொருட்டுச் செய்யுந் திருப்பணி பூஜை முதலியவற்றிற் கில்லாமல், இச்சைபொருந்துஞ் சுவப் பிரயோஜனங் கருதிச் செய்யப்படும் உழவுத்தொழில், கூலி வேலை, இருப்பிடம் பெருக்கல், தீமூட்டடல், தண்ணீ ரெடுத்தல், நெல்லரிசிகுத்த லாகிய இக்காரியங்களிற் சிறு பிராணிகளுக்கு நேரிடும் மரணத்தாற் சேரும் வெய்ய பாவங்களொழியும்படி,— (50)

பரமேசுவரன், அவனடியர், தேவர், பிதிர் தேவதைகள் ஆகிய இவர்களைப் பூஜித்துச் சந்தோஷத்தினால் அவர்கட்கு ஷட்ரஸோ பேதமான அன்னமூட்டுகவென்று சைவ உபாகமங்களு ளொன்றாகிய சிவதருமோத்தரமே கூறுமாயின், கிரகஸ்தாச்சிர மத்தோர் பிராணிகளைக் கொன்று தின்னலா மென்று தர்மசாஸ்திரங் கூறுமோ? கூறாது. (51)

[அனல்மூட்டலில், இரவி லேற்றப்படு தீபமுஞ் சேரும்.]

இப்படி வெல்ல லாமென் றியம்புதல் கேட்ட சீட
னொப்பினே னைய நீதா னூனொழித் துண்ணு மாறு
செப்பிலைக் கறிகாய் கட்குத் தீஞ்சுவை புலாலைப் போல
வெப்படி யினுமின் றிஞ்ஞான் றிதைநுகர்ந் துயிர்வாழ் தற்கே.

கொடுத்துவை யாத பாவி களுக்கிது கூறி னென்னா
மிடுக்கணை நயப்பென் றெண்ணு மிதயநன் றறியு மோவென்
றொடுக்கமின் மனத்தர் பல்லோ ருரைப்பரிவ் வுலகி லந்த
நடுத்தெரி முறைமை யிங்கே நவில்கென நவில்வா னையன்.

இவ்விதமாக ஞாயங்கூறி அவர்கள் வாதத்தை வெல்லலாமென்று ஆசிரியர் கூறக்கேட்ட சீடன், ஆசிரியரே! அருளிய நியாயத்திற் கியைந்தேன். ஆயினும், தாங்கள் மாமிசம் விலக்கி யுண்ணுமாறுரைக்கும் இலைக்கறிகட்குங் காய்க்கறி கட்குமுள்ள சுவை, புலாலிலுள்ள இனிய சுவையைப்போல எந்தப் பூமியிலுங் காணப்படவில்லை: இவ்வளவு இன்சுவை யுடைய புலாலை இப்பொழுதுண்டு உயிர்வாழ,— (52)

முற்பிறப்பிற் கொடுத்துவையாது பிறந்த இப்பாவிகட்குப் புலாலுண்டு சுகிக்கும்படி கூறுதலிற்பிரயோஜனமென்னை? துக்கத்தையே சுகமென்றெண்ணும் இருதயம் சுகசொரூபத்தை யறியுமோ? என்று இச்சைவழியே பரந்து திரியும் மனத்தர் பலரும் இவ்வுலகிலியம்புவர். அவ்வாக்கியத்தின் ஞாயத்தை யறியும் வழியையுங் கூறல்வேண்டுமென; ஆசிரியர் கூறத் தொடங்கினர். (53)

அப்படி யியம்பு வோரு மவ்விலைக் கறிகாய் சில்போ
தொப்புட னுருந்து வார்க ளூரறுவெம் புலிமீன் குத்தி
யப்புவாழ் சுறவு வன்மீ னாதிபல் பிராணி நாளுந்
துப்பிலூ னுண்ட லாலன் னவரினு மிவையூன் றுய்ப்ப.

மிகமிகக் கொடுத்து வைத்த மேலுயி ராமே யன்னோர்
புகலுரைப் படியித் தீர்விற் புதியநெய் கார முப்புத்
தகமுடை சேர்த்து வேவித் துண்பது குறித்துச் சற்றே
யிகலுயர் வுளர வற்றிற் கிவரெனற் கிடமுண் டாமால்.

அப்படிக் கூறுகின்றவர்களும் முற்கூறிய கீரைக்கறி காய்க்கறிகளையும் மனமொப்பிச் சிலபொழு துண்பார்கள். பெருங்கோபமுடைய புலி, மீன்குத்திப்பறவை, நீரில் வாழுஞ் சுறாமீன், முதலை முதலிய பலபிராணிகள் பிரதி தினமுஞ் சுத்தமில்லாத மாமிசாகாரம் உண்கின்றன வாதலால், முற்கூறியவர்களினும் இவைகள், மிகவுமூனுண்டு கொண்டிருக்க,— (54)

முற்பிறப்பில், மிகுதியினும் மிகுதியாகக் கொடுத்து வைத்த உயர்வான வுயிர்களாகுமன்றோ, அவர்கள் கூறும் வாக்கியத்தின் வழியாகவே. இப்படிப்பட்ட தீர்மானத்திலே, புதிய நெய், காரம், உப்பு முதலிய வஸ்துக்களை யளவாக முடைநாற்றமுள்ள ஊனோடு சேர்த்துப் பசனஞ்செய் துண்ணுங் காரணங் கருதி அந்த ஜெந்துக்களிலும் இவர்கள் சற்றுயர்வுடையர்களென்றியம்பவும் இடமுண்டாகும். (55)

இவ்வழி யுயர்வா மின்னோ ரெழிலுடம் பினையு நன்கு
கவ்வியுண் ணரியு நாயுங் கழுகுபுல் புழுவும் பேயு
மெவ்வள வதிக மேன்மை யுடையன வாகு மிங்கே
கவ்வைகொண் டுழல்சில் வண்டு கழிமலந் தனையே யுண்டு.

மகிழ்பொழுதிதைப் போலின்ப வத்து வொன்றுண்டோவித்தை
யுகமிசை வாழு மாந்த ருண்ணவே கொடுத்து வையாத்
துகளுள ரானா ரென்று சொல்லிடத் துணிந்தாங் கந்த
விகழ்புலைப் புண்டின் போரு மியம்பிடத் துணிந்தார் மன்னோ.

இப்படி யுயர்வாக வெண்ணப்படும் ஊனுண்டு வளர்ந்த இவர்களின் அழகிய வுடம்புகளை நன்கு கறித்துத் தின்னு நரியும், நாயும், கழுகும், புலியும், புழுவும், பேயும் இவர்களைவிட எவ்வளவு அதிக மேன்மையுடையனவாகும்! இங்கே துன்பங் கொண்டு ழல்கின்ற சிலவண்டுகள், மனிதர் கழிக்கின்ற பவ்வீயையே (= மலத்தையே) உணவாகக்கொண்டு,– (56)

சந்தோஷிக்கும்போது, இதைப்போன்ற மாதுரியமான வஸ்து வொன்றுண்டோ! இப்பூமியில் வாழும் மனிதர் இதை யுண்ணப் பிராப்தமில்லாத பாபிகளானாரென்று சொல்லத் துணிதல் போலப் புண்ணெனும் பெயர் பெற்ற அந்த இழிவான புலாலைப் புசிப்போரும் அவ்வாறு சொல்லத் துணிந்தனர். (57)

அம்மல மதனைத் தேவ வமுதென நுகர்வண் டேய்ப்ப
விம்மகி மாந்த ரீன வூனினை யுருசி யென்று
தம்மன மதித்தே யுண்ணச் சடமெடுத் தவரா வாரிச்
செம்மையி லார்கீர் பற்றிச் செப்புது மின்னுங் கேட்டி.

அந்தப் பவ்வீயைத் தேவாமிர்தமென வுண்ணும் வண்டை யொத்து இப்பூமியிலுள்ள மனிதர், துர்க்கந்தவூனை மகா மாதுரியமென்று தம்மனத்திற்றாமே மதித்துக்கொண் டுண்பதற்கு உடலெடுத்தவராவர். இந்நல்லொழுக்க மில்லாதார் சொல்லும் அச் சொல்லைப் பற்றி இன்னுஞ் சொல்வோம் கேட்பாயாக. (58)

மாட்டின திறைச்சி தின்னு மனுடரை யிழித்துப் பல்கா
லாட்டின திறைச்சி தின்போ ரறைவது போலப் பாம்பு
வீட்டுவண் டணின்மண் டூகம் வெண்புழுக் கெவுளி யாதி
நாட்டிலுண் பவரைச் சங்கு நண்டுநா கூர லாதி.

உண்பவர் பழிப்பா ரிந்த வூணரை யாமை மீனுண்
பண்பினர் பழிப்பா ரிந்தப் பரிசரை முயல்வெள் ளாகு
கண்பிறழ் மான்க ளாதி காதியுண் பவர்ப ழிப்பார்
பண்பறு மிவரை நல்ல பறவையுண் பவர்ப ழிப்பார்.

மாட்டிறைச்சி தின்னு மனிதரை ஆட்டிறைச்சி தின்னும் மனிதர் "மாடுண்ணி மாடுண்ணி" எனப் பலமுறை யிகழ்வதுபோலப் பாம்பு, வீட்டில் வாழும் வண்டு, அணில், தவளை, வெள்ளைப்புழு, பல்லி முதலியவற்றை நாட்டிலிருந்துண்பவரை, சங்கு, நண்டு, நத்தை, கிளிஞ்சில் முதலியவற்றை,– (59)

உண்பவ ரிகழ்வர். இந்த ஆகாரமுடையவரை, ஆமை, மீன் முதலியன வுண்ணுந்தன்மையோரிகழ்வர். இந்தத் தன்மை யுடையோரை, முயல், வெள்ளெலி, புரளுங்கண் ணுள்ள மான் ஆகியவற்றைக் கொன்றுண்போரிகழ்வர். நற்குணமற்ற விவரை, நல்ல பக்ஷிகளை யுண்போரிழித்துக் கூறுவர். (60)

["மாடு" எனுஞ்சொல்–பசுப்பெயரிற் பிங்கலந்தை, சூடாமணியெனு நிகண்டுகளி லில்லையாயினும், சேந்தன்றி வாகரத்தில் "மணியுஞ் செல்வமு நிரையும் பக்கமுந் தனமு மாடென் றுரைக்கத் தகுமே" எனுஞ் சூத்திரத்தில் "நிரை" எனவருதலும், அந்நிரையை, பிங்கலந்தை– "கோவே பெற்றம் நிரை குடஞ் சுட்டு" எனுமாற்றாற் பெற்றமெனக் காட்டலும் மாடென்பது பசுப் பொதுப்பெயரென்று நிலைபெறுத்துவ வாயின. "திகையாதோ" என்றற்றொடக்கத்துச் செய்யுளில் "உண்டுடுத்து வாழ்ந்தேனா னிரண்டுகான் மாடுபோலே" என்று ஸ்ரீ–தாயுமானாருங் கூறி யுள்ளார்.]

இயம்பிய வூனுண் மாக்க ளெவரையு மிலைகா யாதி
பயம்பட வருந்து மாந்தர் பழித்திடு மேலோ ராவர்
நயம்பட விவற்றை யோரா நரருரை ஞாய மாமோ
கயம்படர் மகனே வேறு கழறுதி யெனலுஞ் சீடன்.

இங்ஙனங் கூறிய பலவகைப்பட்ட வூனுண்போர் யாவரையும், கீரை, காய் முதலியவற்றைப் பசிதீருமாறு அருந்து மனிதசிரேஷ்டர் பழித்துக்கூறு முயர்ந்தோராவர். உயிர்க்குறுதி யுண்டாமாறு இவையற்றையெல்லாம் உய்த்து ணரா மனிதர் கூறுங் கூற்று நியாயமாகுமோ? மேன்மையுறு மகனே! இன்னும் வேறு கேட்க வேண்டிய துண்டேற் கேட்பாயாகவென்று ஆசிரியர் கூறலும், கேட்ட சீடனானவன்,—

["எனலும்" என்பது 'என்று சொன்னவளவிலே' எனும் பொருளுடைத்து. ஈற்றிலமலர்ந்த உம் — இறந்த கால வினை யெச்சவிகுதி. அல் — சாரியையாகும். இவ்விதப் பிரயோகம்:— திருஞான சம்பந்த சுவாமிகள் புராணத்தில் "என்று வாது கூறலு மிருந்த தென்னர் மன்னனும்" என்றும், இலிங்க புராணத்து முகடி தோற்றமுரைத்த அத்தியாயத்தில், "என்றலுமிங்கெனை வணங்கி" என்றும், காஞ்சிப்புராண வயிர வீசப் படலத்தில் "வேண்டி நின்றிரந் துரைத்தலுங் கருணையான் மேவியிங் குறைகின்றேம்" என்றும் வருமாறு வருவன பலவென்க. (61)

எருமையை யாட்டைப் பன்றி யினையிருங் கோழி யென்னுங்
குருகினைச் சிலதே வர்க்குப் பலியெனக் கொடுக்குங் கன்ம
முரிமையோ வுரிமை யில்லா வுறுகணோ வென்லுந்தீர்த்தன்
பெருமைசேர் தேவை நாடாப் பேதையர் வழிபா டஃதாம்.

எருமையையும், ஆட்டையும், பன்றியையும், பெருங்கோழி யெனப்படு பறவையையுஞ் சிலதேவதை கட்குப் பலியிடுங் கன்மம் தக்கதோ? தகுதியற்ற கொலையோ? என்று கேட்டலும்,

ஆசிரியர், மகாதேவதை யாகிய சௌமிய தெய்வத்தை யுபாசியாதார் வழிபாடாகும் நீ வினாவியது. (62)

இழிமதி யிழிகன் மங்க ளிழிகுல முடையர்க் கேயவ்
விழிபுல வருந்து தேவ ரிறையென வாவ ரென்று
மிழிபுல வருந்தா வீச னிணையடி தொழுவோர் யாரு
மிழிமதி யிழிகன் மங்க ளிழிகுல முடைய ராகார்.

புத்தி, கருமம், குலம் ஆகிய இவைகளா லிழிந்தோர்க்கே, அந்த இழிவான ஊனுண்ணுந் தேவர்கள் வழிபடுகடவுளாவர். எக்காலத்தும் இழிந்த வூனுண்ணாத ஈசனிருபாதங்களையுந் தொழும் புண்ணியமுளார் யாவரும், புத்தி, கருமம், குலம் இவற்றால் இழிந்தோராகார். (63)

ஊனுகர் மாக்க டாமே யுண்டிடு கள்ளு மூனு
மீனவத் தேவர்க் காக்கி யெடுத்துடன் குடித்துத் தின்று
மானமில் லாம லாடு மதியினை யருள்சா லெந்த
ஞானமுள் ளவர்ம திப்பார் நன்மதி கொண்டா யென்றான்.

ஊனுண்ணு மனிதர், தாமுண்ணுங் கள்ளையும் ஊனையும் அந்த இழிந்த க்ஷேத்ரதேவதைகளுக்கு நிவேதித் தெடுத்தவுடனே அவைகளை முறையே பானஞ் செய்துந் தின்றும் வெறிமயக்கத்தாற் கூத்தாடும் புத்தியைப் பூரண அருளாளராகிய எந்த ஞானிகள்தாம் நன்கு மதிப்பர்! நல்ல புத்தி கொண்டு ஆராய்ந்து கொள்ளென்றார். (64)

தேனிது வெனவே சொன்மச் சேந்திர நாத ராதி
மானுட சித்தர் செய்த கௌளயா மளங்க ளாதி
வானமர் வாம தேவி மகிழ்வண மிறைச்சி பானம்
மீனரி வையர்பு ணர்க்கை யபிநயம் விளம்போ *ரைந்தும்.

இனிதுப யோகித் துய்க வென்னுமுண் மையினை யீண்டு
நனிவிளக் கிடுக வென்னு நன்மகன் முகத்தை யாசான்
கனிவொடு பார்த்து மைந்தா கழறிய தசுத்த வாம
வினையதைச் செய்யா நின்ற வினைஞரு மசுத்த ராவர்.

இது, தேனொத்த இன்பமார்க்கமெனக் கூறும் மச்சேந்திர நாதர் முதலிய மானுட சித்தர்களாற் செய்யப்பட்ட கௌளம் யாமளம் முதலிய ஆகமங்கள், மேலுலகத்தில் வீற்றிருக்கும் வாமதேவி சந்தோஷிக்கும்படி மாமிசம், மத்தியம் மச்சம், ஸ்த்ரீபோகம், அபிநயம் எனக்கூறும் ஐந்தையும்,– (65)

நன்றாக நிவேதித்துப் பிழைக்கக் கடவாயென்று கூறும் உண்மையை இச் சந்தர்ப்பத்தில் எனக்கு விஸ்தாரமாக விளக்கியருள்க வென்று கேட்டுக்கொண்ட நன்மாணாக்கனது முகத்தை ஆசிரியர் பரிவுடன் பார்த்து, மைந்தனே! நீ யெடுத்துரைத்தது அசுத்தவாமகர்மமாம். அதனைச் செய்கின்றவரும் அசுத்தராவர். (66)

[*ஐந்தையும் பஞ்சதத்துவமென்றும், சாங்கம் ஐந்தென்று முரைப்பர்.]

அசுத்தவூ னினையா கார மாகவுண் ணிழிபுத் தேள்கட்
கிசைத்தபி ராணி கொன்றுண் பித்தலிற் பாவ மின்றென்
றசத்தியம் பேசா நூல்க ளறையினு மிழைத்தோர் பேறு
விசுத்தமி லாப்பி சாச கதியென விளம்ப லாமால்.

அசுத்த வூனை யாகாரமாகக் கொள்ளுந் தாழ்ந்த தேவதைகட்கு, விதிக்கப்பட்ட பிராணிகளைக் கொன்று நிவேதித்தலாற் பாவமில்லை யென்று பொய் கூறாத சத்தியசாஸ்திரங்கள் கூறினும், அவ்வாறு செய்தோரடையுங்கதி, பரிசுத்தமில்லாத பைசாசலோகப் பிராப்தியேயெனப் பகரலாம். (67)

தேவிபூ சையெனச் செய்தூன் றின்பவ ரனேக வித்தை
மேவினு ஞான வீட்டை மேவிடா ரசுத்த முண்ணு
மாவியாய்ப் பிசாசி ருக்கை யமருவ ரெனச்சித் தாந்த
மாவிய னூல்கள் கூறும் வழுவிலம் மார்க்க மேமேல்.

தேவிபூஜை யென்று ஒருவகையான பூஜைசெய்து, அவ்வழி யூனருந்துபவர், அக்கரவிலக்கணமுதல் அவத்தைப்பிரயோகம் வரையுள்ள அறுபத்துநான்கு கலைகளில் எவ்வளவு வல்லுந ராயினும், ஞானத்தாற் கிடைக்க விருக்கும் பரகதியையடைய மாட்டார். அசுத்த வுணவுகொள்ளும் பைசாசமாகிப் பைசாச வுலகத்தி லிருப்பரென்று சைவசித்தாந்தமெனு முடிவான ஞானத்தைக் கூறு மேலான நூல்கள் முறையிடும். குற்றமற்ற அம் மார்க்கமொன்றே எல்லாவற்றிற்கும் மேன்மார்க்க மாகும்.

[இவ்வழியாக வூனுண்போர், பூதசரீரம் விட்டுப் பூதசாரசரீரம் பெற்ற காலத்தும் பற்றுவழியே அவ்வூனா காரத்தையே யிச்சிக்குந் தன்மையால், அந்த ஆகாரமில்லாத சுவர்க்க பதவிகளில் ஒன்றிலேனுஞ் செல்ல அருகராகாரெனும் பொருளும்– "அசுத்த முண்ணு மாவியாய்ப் பிசாசிருக்கை யமருவர்" என்றதில் பெறப்படும்.] (68)

பிசிதமெ னூனுண் போரே பிசாசெனும் பேய்க ளென்று
மசுசிகொள் பிசித வூண ரெனப்படு மரக்க ரென்றும்
பொசிமுடை சேர்பு லாலுண் பவர்களே புலைய ரென்றும்
வசுமதி தனிற்றென் னூலும் வடமொழி நூலுங் கூறும்.

"பிசிதம்" எனும் பெயருள்ள ஊனுண்போரே "பிசாசு" எனும் பேயின்பெய ருற்றனரென்றும், அதனையுண்பவரே "பிசிதவூணர்" எனும் இராக்ஷதரின்பெய ருற்றனரென்றும், துர்க்கந்த வுதிரங் கசியும் புலாலாகிய புலையுண்பவரே "புலையர்" எனும் பெயருற்றன ரென்றும் இப் பூமியிலுள்ள ஸம்ஸ்க்ருத சாஸ்திரமும், தமிழ்நூலுங் கூறும். (69)

என்றனன் கேட்ட சீட னெந்தையே யசுத்த வாம
மொன்றுரைத் தலினாற் சுத்த முள்ளதோ வென்றான் மைந்தா
தன்றிற மறியாச் சுத்த சத்தியாந் தேவி யுண்டு
குன்றலி லவளை நல்ல குணமுளர் பூசித் துய்வர்.

என்று ஆசிரியர்—விவேகபூரணனார் கூறியருளினர். கேட்ட சீடன், என் பிதாவே! மேலே அசுத்தவாமமென்று பிரித்துக் கூறினமையின், சுத்தவாம மென வொன்றுண்டோ வென்று வினவினன். ஆசிரியர், மகனே! தன்பெருமை தானறியாத் தன்மையினளாகிய சுத்தசக்தியாகிய மஹாதேவியுண்டு. குறைவொன்றுமில்லா அந்த லோக நாயகியைச் சற்குண முள்ளோர் பூஜித்து வாழ்வர். (70)

அந்தமா தேவி தான்சி வாலயந் தோறு முள்ளா
ணிந்தையி லவட்குக் கள்ளூ னீக்கியே படைப்ப தோர்ந்தோர்
சுந்தர வவளை யில்லிற் றொழினுமவ் வாறே செய்வர்
செந்தெளி தேனும் பாலுஞ் சேர்த்தருத் துதலுஞ் செய்வர்.

அந்த மஹாதேவியாரே சிவாலயந்தோறும் மிருப்பவர். நிந்தையற்ற அவர்க்கு ஊனுங் கள்ளும் நீக்கியே சுத்த நிவேதனஞ் செய்வதை யறிந்தோர், அழகு சிறந்த அவரை வீடுகளிற் பூஜிக்கினும் அவ்வண்ணமே செய்வர். செவ்விய தேனையும் பாலையுஞ்சேர்த்து, இவ்விரண்டுமே சுத்த மதுமாமிசமென் நிவேதித்தலையும் அவர்க்குச் செய்வர். (71)

என்றுரைத் திட்டா னைய னெழின்மகன் பெரியோ யீது
நன்றெனு வுணர்ந்தேன் வேத நவிலுமா றாட்டை மாட்டைக்
கொன்றெரி யாகஞ் செய்து கொழுந்தசை யுணலும் பாவ
மொன்றிய கருமந் தானோ வுரையெனக் குரவன் சொல்வான்.

என்று ஆசிரியர் கூறினர். (மேல்), விசாரிக்கும் அழகு வாய்ந்த சீடன் அறிவிற் பெரியவரே! அருளிச் செய்த இவ்விஷயம் உசிதமானதென்றுணர்ந்தேன். வேதம் விதிப்பது போல ஆட்டையும் மாட்டையுங் கொன்று, அக்கினிமூளும்

யாகங்களைச் செய்து, கொழுவிய தசையை யுண்ணுதலும் பாவஞ்சேருங் கருமந்தானோ? கூறியருள வேண்டுமென; ஆசிரியர் கூறுவான் தொடங்கினர். (72)

இட்டியிற் சாம்பி ராணி யெழில்கிளர் சுவர்க்கஞ்சேருந்
தட்டுறு பாவ மில்லை யெனவற நூல்கள் சாற்றல்
கட்டுரை யேனு மந்தக் கருமநற் கருணை யாளர்க்
கெட்டுணை யேனுஞ் செய்சற் கருமமா யிருப்ப தில்லை.

யாதோ ரிஷ்டகாமியத்தை யடையு நிமித்தஞ் செய்யும் யாகத்திற் சாகும் பிராணி, அழகு பிரகாசிக்குஞ் சுவர்க்கலோக மடையுமாகலின், அதைக் கொல்வதாற் சற்கதிக்குத் தடையாகும் பாவ முண்டாகாதென (ஸ்ம்ருதிகள்=) தரும சாஸ்திரங்கள் கூறுதல் உறுதிமொழியாயினும், அவ் யாககருமம், சீவகாருண்ய முள்ளவர்க்கு எள்ளளவுஞ் செய்யத்தக்க சற்கருமமாக மதிக்கப் பட்டிருப்பதில்லை. (73)

தலையினுச் சியில்வன் னெஞ்சர் தடிநனி தாக்குண் டேனு
மலைவுறு பீசமான தவர்கரப் பிசைவுண் டேனு
முலைவுகொண் டழியவ் யாக வுயிர்மிக வருந்த லாலக்
கொலைமக மருளோர் செய்யொண் ணாதென லுறுதிக் கூற்றே.

தலையினுச்சியிலே வன்னெஞ்சர் கையிலுள்ள தடியடி மிகவுந் தாக்குண்டாயினும், அசைவொடுகூடிய பீஜங்கள் அவரது கரப் பிசைவுண்டாயினும் பிராண வேதனைப்பட்டு இறக்கும் அவ்யாக வுயிர்கள் அதிக வேதனைப் படலால், அக்கொலை யாகங்கள் தயாநிதிகளாகிய பெரியோர் செய்யத்தகுவன வல்லவென்று கூறும் வாக்கியம் உறுதி வாக்கியமே யாம். (74)

ஏனைய வுயிரைக் கொல்லு மிட்டியு மிரக்க மில்லா
மானவர் கரும மாமிம் மகங்களின் பயனுஞ் சின்னாள்
வானவ ருலகின் போக மாமிதை மதியார் தூய
ஞானமெய் வாழ்க்கை வேட்போர் நான்மறை முடிவு மீதே.

ஆடு மாடல்லாத மற்றவுயிர்களைக் கொன்று செய்யும் யஜ்ஞங்களும் இரக்கமற்ற மனுடர்செய்யுங் கருமமேயாம். இவ்வளவு கஷ்டப்பட்டுச் செய்யும் யஜ்ஞுஞ்களின் பயனும் சிலநாள் தேவலோகத்திலநுபவிக்கப்படும் பந்தமான போகமாம். இப்படிப்பட்ட அற்பசுகத்தை, ஞானத்தாலுண்டாகும் அழியா மோக்ஷவாழ்வை விரும்புஞ் சுத்தராகிய பெரியோர் விரும்பார்; நான்கு வேதங்களின் முடிவு மிதுவே.

[யஜ்ஞுபலன் பந்தமென்பதை– யஜுர்வேத நிராலம் போபநிஷத் "யஜ்ஞுவ்ரத தபோதாநவிதி விதாநஜ்ஞாந ஸங்கல்போ பந்த:" என்னும் ஆற்றான் அறிக.] (75)

வேள்வியோ ராயி ரந்தாம் வேட்டலிற் கொல்லா துண்ணு
மாள்வினை நலனென் றார்நல் லருட்பெரும் புலவர் மாண்பில்
வேள்வியி லூனுண் டேவ ரினும்புலான் மிசையார் செல்லு
நாள்விய னிலைபெற் றுய்வர் நல்லவேள் விகளு முண்டே.

ஜீவஹிம்ஸையுடன் கூடிய ஆயிரம் யாகங்களைச் செய்வதினும், ஒரு பிராணியைக் கொன்று அதனூனை யுண்ணா திருக்குஞ் சற்கருமம், பயனால் மேம்பட்டதென்று "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றனுயிர்செகுத் துண்ணாமை நன்று." என்னுந் திருக்குறள் வாயிலாக அருட்பெரும் புலவரான திருவள்ளுவதேவருங் கூறியருளினர். சிறப்பற்ற இந்த யாகங்களில், ஊனாகிய அவியை அவாவி யுண்ணுந் தன்மையுடைய தேவர்களிருக்கும் உலகங்களினும், இங்கே புலாலுண்ணாதார் தேஹவியோக மடையுங் காலத்தில் மேம்பட்டதாய உலகமடைந்து வாழ்வர். சொற்ற பசுபந்த யாகமல்லாத நல்லயாகங்களும் உள.

[சரீரமாகிய யாகசாலையிற் செய்யப்படு ஞான யாகமும் நல்லயாகமாம். விவரம், யஜுர்வேத கர்ப்போபநிஷத் முதலிய

உபநிடதங்களிற் காண்க. மேலைய திருக்குறளானது "அஹிம்ஸா பரமோ தர்மா" என்னுஞ் சுருதி வாக்கியத்தைத் தழுவி வந்ததாகும்.] (76)

அசுத்தமி லாவவ் வேள்வி யடங்கலு நல்லார் செய்தே
யசுத்தமி லுலகஞ் சேர்வ ரவற்றையவ் வுலகை வேண்டா
விசுத்தவுள் ளன்பி னோடு விமலனை நோக்கிச் செய்தோர்
விசுத்தமெய்ஞ் ஞான மேவி விமலனை யடைந்துய் வாரே.

ஜீவகாருண்யமுள்ள நல்லோர், அந்த நல்ல யாக மெல்லாஞ் செய்து, அசுத்தமில்லாத மேலுலகங்களையடைவர். அந்த நல்ல யாகங்களையும் அவற்றாலெய்தும் பதமுத்தி களையும் விரும்பாத பரிசுத்தமான வுள்ளன்புடன் அனாதி மலமுத்தனான மஹாதேவனை நோக்கி நிஷ்காம்யமாகச் செய்தோர், பரிசுத்த பதிஞானத்தைப் பெற்று அந்தப் பரமசிவ ஸாயுஜ்யமாகிய பரமுத்தியடைந்து வாழ்வர். (77)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

எனலு மாணவ கன்ற யாவுடை யிறைவ முன்னொரு கானுதற்
கனலு லாம்விழி யீசன் முன்விளர் காலி றைச்சி படைத்துழன்
மனதி னாலறி தற்கொ ணாநல மருவி னாரொரு திண்ணனா
ரெனவு ரைக்குமொர் சரிதை யின்பொரு ளிற்றெனப் புகலென்றனன்.

இவ்விதம் ஆசிரியர் கூறுதலும், மாணாக்கன், கருணாநிதி யாகிய குருவே! முன்னொரு காலத்தில் அக்கினி பிரகாசிக்கும் நெற்றிக்கண்ணராகிய ஈசனார் முன்பாக, பத்தியிற் சமானரகிதராகிய திண்ணனாரெனும் இயற்பெயர் வாய்ந்த கண்ணப்பதேவர், கொழுப்பொழுகுகின்ற (காட்டுப் பன்றி) இறைச்சியை நிவேதித்து, அலையுந் தன்மையதாகிய மனதினால் இத்தன்மைத் தென்றறி யொண்ணாத சிவகதியை அடைந்தனரெனக் கூறும் ஒப்பற்ற அந்தச் சரிதையினது தாற்பரியம் இன்னதெனக் கூறவேண்டு மென்றனன். (78)

மைந்த வத்திரு வாளர் வேடர்கண் மரபில் வந்தவ ரவர்நுகர்
செந்த சைக்கறி தன்னை யேபர சிவனு முண்டிடு வானெனச்
சிந்தை செய்ததை யேப டைத்தனர் சிறந்த வன்பி னகப்படு
மந்த வீசனு மதின்ம கிழ்ந்தன னக்கன் மம்விதி யாகுமோ.

மகனே! அந்த அகண்ட ஸாம்ராஜ்யத்திற் குரியோராகிய அக்கண்ணப்பனார் வேடவமிசத்திற் பிறந்தவராகையால், தாமுண்ணுஞ் செவ்விய மாமிசக் கறியையே பரமசிவனாரு முண்பவராதல் வேண்டுமெனத் தமது மனதிற் கருதினவராகி அவ்வூனையே படைத்தனர். அன்பின் வலைப்படும் அத் திருக்காளத் தியப்பரும் அக்காரியத்தில் உவப்புற்றனர். (ஆகையால்) அக்காரியமே யாவருஞ் செய்யத்தக்க காரியமாமோ? (79)

செறிந்த பத்தியி னால ருட்சிவ லிங்க மீதுபல் கற்களே
யெறிந்து மேனல முற்ற சாக்கியர் செய்கை யேதில தென்னினு
மறிந்த மக்க ளெலாரு மத்தை வழக்கெனக்கொள்வதில்லையென்
றறிந்த வாறுக ணப்பர் செய்கையு மாமெனத் தெரி வாயரோ.

மேலும் மேலும் ஓங்குற்ற பக்தியினால், அருள்வடிவாகிய சிவலிங்கத்தின் மீது பல கற்களையே யெறிந்து மேன்கதி யடைந்த சாக்கியநாயனாருடைய செய்கையானது அவரளவிற் குற்றமற்றதாயினும், அதனை, பந்தப்பட்டுள்ள எல்லா மனிதரும் விதியாகக் கொண்டு செய்வதில்லையென் றறிந்த வாறு கண்ணப்பனார் செய்கையும் ஆகுமென்றறிவாயாக. (80)

என்ற வாசிரி யன்மு கத்தினை யேர றாமக னோக்கியூன்
றின்று ளார்கள் பிசாச வெம்பதி சேர்வ ரென்று புகன்றவா
றன்று மாமிச முண்டு வந்தக ணப்ப ரப்பதி யெய்திடா
தின்ற ருக்கடி யெய்தி னாரென லென்ன நீதிசொல் கென்றனன்.

என்று கூறிய ஆசிரியர் முகத்தைப் பொறப்பகலாத சீடன் பார்த்து, தேவதைகட்குப் படைத்துத் தாமுந் தின்னும் வூனுண்வுடையோர், வெய்ய பைசாசலோக மடைவரென்று

முன்னே கூறியபடி, முற்காலத்தில் மாமிசமுண்டும் அதையே சிவத்திற்கு நிவேதித்துஞ் சந்தோஷித்த கண்ணப்ப தேவர், அந்தப் பைசாக லோகமடையாமே இனிய களிப்பெனப்படுஞ் சிவன் றிருவடி நீழலையடைந்தாரெனல் என்ன நியாயம்? கூற வேண்டுமென்றனன். (81)

கல்லெ றிந்தது குற்ற மேனும கண்ட வன்பி லதேநலம்
புல்ல நின்றது போலவ் வேடர் புரிந்த தீது மளப்பிலா
நல்ல வன்பி னொழிந்து மேனல நல்கு மாறிறை செய்தன
னல்ல நீரிது மற்றை யர்க்கமை யாதெ னக்குரு சொல்லினான்.

கல்லெறிந்தது குற்றமாயினும் அச்செய்கையிலுண்டாகிய அகண்ட அன்பினால், அக்காரியமே நற்காரியமாகிச் சிரேஷ்டமான கதியை அச்சாக்கிய நாயனா ரடையும்படி செய்தது போல, அவ்வேடர் கோனாகிய கண்ணப்பனார் செய்த கொடுங்காரியமும், முதன்மையான அன்புடன் செய்யப்பட்ட வழி, கொடுமையற்ற நற்காரியமாகி மேலான கதியைக் கொடுக்கும்படி மஹாதேவர் செய்தருளினர். பிறவித் துக்கத்தை யொழிப்பதாகிய அத்தகைய காரியமும், அதன்பயனும் மற்ற வூனருந்துவோர்க்கு இலபியா தென்று கூறியருளினர். (82)

ஆவ தேன்முடை யுண்ப வர்க்கரு ளன்பு றாதென முன்னரே
நீவ ழங்கிய் சொற்கு மாறுறு நெய்ப்பு லானுகர் திண்ணருக்
கோவ லில்சிவ வன்பு ஞானமு யர்ந்த தென்பதெ னாமகன்
றாவி லையன்மு னேசொ னானிறை சாற்று வானதை மாற்றுவான்.

அவ்வாறாமாயின், நிணத்தோடுகூடிய புலாலையுண்டு வந்த கண்ணப்பனார்க்கு, மாறாத சிவபக்தியிலுதிக்குஞ் சிவஞானம் சிறப்போடுண்டாயிற்றென்று இங்ஙனம் கூறுஞ் செய்தி, திருவருளைத் தரத்தக்க அன்பு புலாலுண் பவர்க்கு உண்டாகாதெனத் தாங்கள் *முன்னர்க் கூறியதற்கு

*40, 41—ஞ் செய்யுள்களிலறிக.

விரோதமாகு மென்று சீடன் குற்றமற்ற குரு முன்னிலையிற் கூறினன். அதுகேட்ட குரு வானவர், சீடன் கொண்ட அபிப் பிராயத்தை மாற்றும் பொருட்டு உரைக்க லாயினர். (83)

சிறியர் சேரியில் வில்வ முங்கிளர் சேற்றி லங்கழு நீருமே
நறிய வாக முளைக்கு மாறுமுனாளி ழைத்த தவத்தினான்
வெறியி லாவரு ளன்பவர்க்கு விளைந்த தாமது மற்றைய
பொறியி லூனுகர் நர்க்கு றாதுயர் புந்தி யாலறி புந்தியோய்.

பறைச்சேரியில் வில்வமரமும், பெருகிய சேற்றில் அழகிய செங்கழுநீரும் சுகந்தமுடையனவாகவுண்டாதல்போல, முற்போந்த பிறப்புக்களிற் செய்த தவபலத்தால், மயக்கமற்ற அருட்பக்தி அக்கண்ணப்பனாருக்கு உண்டாகியது. அது, மற்ற விவேக ஹீனர்களாகிய ஊனருந்துநர்க்கு உண்டாகாது. புத்தியுள்ளவனே! இதைச் செவ்விதான புத்திகொண்டு விசாரித்தறி. (84)

தம்முடம்பு பெருக்க வென்று தசைக்கு ழம்புக ளுண்டுலாம்
மம்ம ராரிக னெஞ்சி லோமணி மல்கு நல்விழி யைப்பறித்
தம்ம கேசுர னுக்கி டுந்தெளி வன்பு யர்ந்தக ணப்பனார்
தம்ம ருட்குண மேவு மென்று தனாது வாத நிறீ இனான்.

(தேஹாபிமான ஜீவாபிமானங்களால்) தம்முடைய சரீரம், குறைவறப் பெருக்க வேண்டுமென்று மாமிச மிட்டுச் சமைத்த குழம்பு முதலியவற்றை யுண்டுழலும் மயக்கறிவுடையார் வலியமனத்திலோ, அவ்வபிமானங்களின்றிக் கருமணி பிரகாசிக்கும் பிரதான அவயவ மாகிய விழியைப்பிடுங்கி அம்மஹாதேவருக்கிடுந் தெள்ளிய அன்பு மீக்கொண்ட கண்ணப்ப தேவர்து அருட்குண முண்டாகும்! உண்டாவ தில்லை யென்று தமது சித்தாந்தத்தை ஸ்தாபித்தார். (85)

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கேட்டவிட யப்பிரிய னின்னுமோ ரையமருள்
  கிளர்ஞான கும்பமுனிவ
னாட்டினூ னுண்டா னெனுஞ்சரித முண்மையை
  யறைந்தருள வேண்டுமெனலும்
வாட்டமில் விவேகபூ ரணனவிலு வானெடிய
  வார்கடலை யங்கைதனிலே
கூட்டியுண் டிட்டவம் முனிவன்வா தாவியென்
  கொறியுண்டு கோதுறுவனோ.

இதுகேட்ட விஷயப்பிரியனெனும் பெயரிய சீடன், இன்னமுமொரு சங்கையுண்டு. அஃதாவது கிருபை யோங்கிய ஞானம் வாய்ந்த அகத்தியமாமுனிவர் ஆட்டினூனை யருந்தினரென்று கூறுஞ் சரிதந்தான். அதனுண்மைக் கருத்தையுங் கூறியருளவேண்டுமென்று கூறலும், குறைவற்ற விவேகபூரணனெனும் பெயரிய குரு கூறலுற்றனர். நீடிய சமுத்திரத்தை அங்கையிற் சேர்த்து, ஆசமனஞ் செய்வதுபோல உட்கொண்ட அம்முனி சிரேஷ்டர், வாதாவியென்னும் ஓராட்டினையுண்டாலும் பாவமடைவரோ! (86)

வாதாவி யாமந்த வாட்டைவில் வலனரியும்
  வாளா லறுத்தவித்து
மேதாவி யோரென்ன வருமுனிவர் கட்கெலா
  மெய்யா வருத்தியெம்பி
வாதாவி வாவென் றழைத்தவுட னுண்டவர்
  வயிற்றைப் பிளந்தவன்வரும்
போதாவி போமவரை யிருவரு மருந்துவ
  ரெனப்பழைய நூல்புகறலால்.

(அஜாமுகியின் குமாரனுஞ் சூரபதுமன் மருகனுமாகிய) வில்வலன் எனும் அசுராதமன், ஆட்டுருவங்கொண்ட தன் தம்பியாகிய வாதாவியை அறியத்தக்க வாளாலே துண்டுதுண்டாக அறுத்து அடுப்பிலேற்றி யவித்துச் சமைத்து,

மேலான அறிவாளிகளென வரு முனிவர்களுக்கெல்லாம் ஈது ஆட்டு மாமிசமேயென்று உபசரித்தூட்டி, (அவர்கள் சயனித்திருக்கும்போது) என் தம்பி வாதாவியே! வாராயென அழைத்தவுடன், அவன், தன்னை மாமிசமாக உட்கொண்டவர் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளிப்பட்ட சமயம் பிராண னீங்கும் அம்முனிவர்களை, அண்ணன் தம்பிகளாகிய அவ்விரண் டசுரருந் தின்பரென்று புராணங் கூறுதலால்,—

["இல்வலன்" எனவுஞ் சிலர்கூறுப. கந்தபுராண அசுரகாண்டம் வில்வலன் வாதாவிப்படலம் 10–ம் பாட்டில் "மேயின விருமைந்தர் வில்வலன் வாதாவி – யாயதொர் பெயர்பெற்றார்" என வருமாறு இந்நூலாசிரியரும் "வில்வலன்" எனக் கூறினர்.] (87)

இக்கலி யுகத்தின்முன் னாயகா லங்களி
லியங்குயிர் வதைத்துண்டலிற்
றுக்கமுறு பாவமிலை யென்றெண்ணி முனிவர்சிலர்
சுடுதீயில் வேவித்தவூன்
பக்குவ நுகர்ந்தார்க ளெனலறிய லாமருள்
பழுத்தமன மற்றவவரின்
மிக்கவர்க ளாவரதை யுண்ணாத மெய்யரென
வுள்ளுதற் கையமிலையே.

இக்கலியுகத்திற்கு முற்போந்த யுகங்களிற் சரித்துத் திரியும் பிராணிகளைக் கொன்று தின்னுங் கருமத்தால் துக்க ஹேதுவாகிய பாவமுண்டாவதில்லை யென்று கருதின வராகிய சிலமுனிவர், சுடுங்குணமுள்ள அக்கினியிற் பசனஞ் செய்யப்பட்டுப் பக்குவமான வூனையுண்டன ரென்பதும் அறியலாம். ஜீவகாருண்ய முதிர்ச்சியுள்ள குணம் ஒருசிறிது மில்லாத அந்த முனிவரினும் அப்புலா லுண்ணாத காருண்ய குணமுனிவர் சிறந்தவராவ ரென்று கருதற்குச் சந்தேகமின்று. (88)

விதிவிலக் கில்லாத வூனுண்டன் மதுவுண்டன்
மென்சொலெழின் மாதணைதலிற்
புதியவொரு தோடமின் றென்றுபிர விர்த்திநூல்
புகலுமவை தள்ளுகவெனாப்
பதிநவி னிவிர்த்திநூல் சொல்லுமது வேமிக்க
பலனல்கு மென்றுமநுவி
னிதிநூ லுரைக்குமத னாலவ் வுகங்களிலு
நெய்ப்புல வுணாமையுயர்வாம்.

மநுஸ்ம்ருதி (5—ம் அத்தியாயம்) ஆனது, விதி விலக்கில்லாத புலாலுண்டல், கள்ளுண்டல், மதுர வசனமும் வனப்புமமைந்த மாதரைப்புணர்தலெனும் இவைகளாற் புதியபாவமொன்றுஞ் சேர்தலில்லை யென்று இலௌகிகப் பிரவிர்த்திநூல் சொல்லும்: மேற்கூறிய புலாலுண்டல் முதலியவற்றை நீக்கியிடுக வென்று ஈச்வரப்ரோக்தமான ஞானநூல் களெனப்படு நிவிர்த்திநூல் கூறும்: இவ்விரண்டனுள், நிவிர்த்தி மார்க்கமே அதிகபலனைத் தருமென்றுரைக்கும். இந்தப் பிரமாணத்தினால், அந்தயுகங் களிலு நிணமுள்ள ஊனுண்ணாமையே யுயர்ந்த வொழுக்க மாகக் கொள்ளப்பட்டி ருந்ததாகும். (89)

இதுநிற்க வொருநூல் புலாலுண்ண லேதமற்
றிலையெனச் சொலினுமுன்னோ
ரதுசொன்ன படியிழைத் தார்விடுத் தாரென
வறிந்திடினும் யாதொன்றனை
வதைசெயுங் காலது படுந்துயர்கள் கண்கண்ட
மாபவ மெனத் தெரிதலாற்
புதைகொண்ட வெவருமவ் வுயிர்வதைக் கஞ்சலுயர்
புண்ணிய மெனற்கையமோ.

இந்த நியாய மிப்படியிருக்க; புலாலுண்ணல் பாவ மேயென ஒருசார் நூல்களும், பாவமாகாதென மற்றொரு சார் நூல்களுங் கூறினாலுமென்னை? அவ் விருவகை நூல்களின்படி

சிலபெரியர் ஊனுண்டு வந்தனரென்றும், மற்றுஞ் சிலபெரியர் அதனை யொழித்திருந்தன ரென்றும் நாம் அறிந்தாலு மென்னை? யாதொருபிராணியை வதை செய்கையில் அந்தப் பிராணி படுந் துக்கங்களை யோசிக்குங் கால், அத்தொழில் பிரத்தியக்ஷப் பெரும்பாவமெனத் தெரிதலினால், தேஹி களாகிய எவரும் பிராணஹிம்ஸைக்கு அஞ்சி அந்தப் புலாலுணவை நீக்கியிருத்தல் புண்ணியமென்று கூறுதற்குச் சந்தேகமுளதோ? இல்லை. (90)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்ன வையன் முன்ன நின்ற வேரு யர்ந்த நன்மக
னன்ன ருற்ற தென்பு லத்தி னர்க்கு நல்ல மாமிசந்
தன்னை முன்னு கங்க ளிற்செய் தார்க ளென்று தன்மநூல்
பன்னு முண்மை தன்னை யும்ப ணித்தல் வேண்டு மென்றனன்.

என்று ஆசிரியர் கூற; அவர்க்கெதிரினின்ற அழகு சிறந்துள்ள சீடன், நன்மை நிரம்பியுள்ள தென்புலமடைந்த பிதிரர்களுக்குப் பிரீதியாக நல்ல மாமிசத்தை முந்துற்ற யுகங்களிற் படைத்தார்க ளென்று ஸ்ம்ருதிகள் கூறும். அந்தக் கருமத் தினுண்மைக் கருத்தையும் அருளிச்செய்ய வேண்டு மென்று கூறினன். (91)

இவ்வு கத்தி லூன ருந்தி டாத தென்பு லத்தவர்
தெவ்வில் வத்து வுண்டு மாதி ருத்தி கோடல் போலவே
யவ்வு கத்து ளாரு நல்ல துண்டி ருக்க வையமின்
றெவ்வி தத்தர் செய்கை யோவஃ தேதம் வேறு பேசுதி.

இந்தக் கலியுகத்தில் ஊனுண்ணாத பிதிரர்கள், நிவிர்த்தி மார்க்க விரோதமில்லாத பதார்த்தங்களை யுண்டு மிக்க திருப்தியடைதல் போலவே அந்த யுகத்துப் பிதிரர்களும், சுத்த பதார்த்தங்களை யுண்டு சந்தோஷித்திருக்கத் தடை யில்லை. அஃது எவ்விதத் தன்மையுடையர் செய்கையோ! அது பாவமே. வேறேதாவது சந்தேகமுளதாயிற் கூறுக. (92)

என்று நாத னோதி னானவ் வேசின் மைந்தன் மேலும்வெண்
குன்ற வீச னாரு ரைத்த கூற்றின் வண்ண மோர்மகற்
கொன்று தீயில் வேக வைத்த ருத்து கின்ற கொள்கையி
னின்ற தந்தை தாயர் தந்நி யாய மென்கொ லென்றனன்.

என்று குரு கூறினர். அதன்மேலும், அக்குற்ற மற்ற சீடன், வெள்ளியங்கிரியில் வீற்றிருக்கும் மஹா தேவரானவர் தமக்கு வேண்டிய ஆஹாரம் ஈதாகுமெனவருளிச்செய்த நியமத்தின் படி ஒப்பற்ற தங்கள் மகனைக் கொன்று தீயிற் பசனஞ்செய்து, விருந்தினராய் வந்த அம் மஹாதேவருக்குப் படைக்கு நியமத்தினின்ற தந்தை தாயராகிய சிறுத்தொண்ட தேவரும் அவர் மனைவியாருங் கொண்டிருந்த உள்ளக்கருத் தென்னை? கூற வேண்டுமென்றனன். (93)

போரில் வல்ல ராய டைந்த பொன்கொ டந்த நாயனார்
நாரு லாம கேசுரர்க்கு நாளு மன்ன மூட்டுமன்
போரு மீச னார்வி டாத வுண்மை சோதிக் கின்றபோ
தாரு மன்பி னானி கழ்ந்த தன்னர் செய்கை யென்றனன்.

போர்த்தொழில் வல்லராய் அத் தொழில்வழியிற் பெற்ற திரவியங்களைக் கொண்டு அச்சிறுத்தொண்ட தேவர், சிவபக்தி மீக்கொண்ட மாகேசுரர்களுக்கு எந்நாளும் அன்னம் படைத்துவந்த அந்த அன்பின் பெருக்கத்தை யறிந்த பரமேசுவரர், அவரைவிட்டு நீங்காத அவ்வன்பின் உறுதிப்பாட்டைப் பரீக்ஷிக்குங் காலத்திலே உள்ளத்திற் பொருந்திய பக்தியினால் நடந்தது அவர்கள்காரிய மென்றனர்.

["விடாத வுண்மை சோதிக்கின்றபோது" என்பதற்கு, வாள்முனை வழிச் சம்பாதித்த திரவியங்கொண்டு செய்யப் படுஞ் சற்கரும பக்தியை, அவ் வாள்முனை வழியாகவே பரீக்ஷிக்கத் தொடங்கும்போதெனப் பொருள் கோடலும் பொருந்தும்.] (94)

இவ்வி தம்வி வேக பூர ணன்வி ளம்ப லும்மக
னவ்வி தங்கொ லைக்கு ளாய வக்கு ழந்தை யங்ஙனே
யெவ்வி தக்க வற்சி கொண்டி றந்த தோவ தைச்செயு
மவ்வி ரண்டு பேரு மவ்வ தைக்கு டன்ப டாததென்.

நனிவி ளக்க வென்ன வைய னாச மற்ற வீசனார்
சொனவி னைக்கு ளாம வர்க்கொர் துன்பு திப்ப தில்லையன்
றினிதி றந்த சேயி னைப்பி ரான்சொல் வண்ண மீன்றவர்
கனிவு கொண்ட ழைத்த போது கண்களிக்க வம்மகன்.

ஓடி வந்த வற்பு தத்தை யூகி யாம லேனையோர்
கூடி யேகொல் கின்ற கொள்கை போல வெண்ணி னாயதைத்
தேடி வந்த வீச ரோடு நால்வ ரன்று சென்றதுங்
கேடி லுன்னு ளேயு ணர்ந்து பேசெ னக்கி ளத்தினான்.

இவ்விதமாக ஆசிரியர் – விவேகபூரணனார் விடை கூறலும், சீடன், அவ்வண்ணங் கொலைக்குள்ளாகிய அக்குழந்தையானது அங்ஙனமே எத்தன்மையதாகியதுக்க மனுபவித்து இறந்திருக்குமோ! அத்தகைய கொலையைச் செய்த அத் தந்தை தாயர் அக்கொலைப்பாவத்தை யடையாத தென்னை? (95)

அடியேனுக்கு நன்றாக விளங்கக் கூறவேண்டுமென்ன; ஆசிரியர், ஈசனாராணைப்படி அக்காரியத்திற்கு உடன்பட்டு நின்ற அவர்களுக்கு எவ்விதத் துன்பமுந் தோன்றாது. மேலும், யாதொரு துன்புமில்லாது இறந்த குழந்தையை ஈன்றெடுத்தவ ராகிய அவ்விருவரும் பெரிய பெருமானது அனுஞ்ஞைப்படி உடனே யுருக்கத்துட னழைத்தபோது அவர்களுடைய கண்கள் களிப்படையும்படி, அவ்வாண்பிள்ளை,– (96)

உயிர்பெற்று அவர்களெதிரி லோடி வந்த அற்புத நிகழ்ச்சியை யோசியாமல், மற்றமனிதர் கூடிக் கொண்டு செய்யுங் கொடுங் கொலையைப் போல அதனையுமெண்

ணினை. அக்காரியார்த்தம் அக்குழந்தையைத் தேடி வந்த பரமேசுவரருடன் சிறுத்தொண்ட தேவரும், அவர் தேவி யாராகிய திருவெண்காட்டு நங்கையாரும், அவ்விருவர் புதல்வனாகிய சீராளனும், தாதி சந்தனநங்கையு மெனப்படும் அந்நால்வரும் அத்தினமே சென்றடைந்த ஆன்மலாபத்தையும் தருக்கத்தில் தலைப்பட்டுள்ள உன் மனத்துளே விசாரித்தறிந்து கூறுதி யெனக் கூறியருளினர். (97)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கிளத்திய வாசிரி யன்றிரு முன்னே
    கேடறு சீடன யம்படு மெய்ம்மைக்
களித்திரி சங்கும கன்முதன் மன்னர்
    கானக வேட்டையி லேயுயிர் கொன்று
களித்தன ரென்றுபு கன்றிடு முண்மை
    கழறுதி யென்னவி டைக்குரு வந்த
வளித்திரு மன்னர்க ளாள்பதி யுள்ளே
    யாயப சும்புல ழித்தும னேக.

மைந்தர்க ளுக்கிடை யூறும்வி ளைத்த
    வன்மிரு கங்களை யேவதை செய்தார்
வெந்தனு மன்னர்க ளுக்கது நீதி
    வேலையஃ தெவ்வித மென்றிடின் மேலோர்
நிந்தைசெய் பாவிக ளைச்சம னார்தந்
    நீதியி னானர கத்திடு மாறே
யந்தர மாதியி லர்வரு ளீச
    னயர்தொழி லுள்ளுமிவ்வாறுள தென்றான்.

இவ்வாறு கூறிய ஆசாரிய சன்னிதானத்தில், தர்க்கசி ரேஷ்டம் வாய்ந்த சீடனானவன், மஹாயோகங்களை யநுபவித்த திரிசங்கு மஹாராஜன் குமாரனாகிய ஹரிச்சந்திர மஹாராஜன் முதலிய அரசர்கள் காட்டிலாடும் வேட்டையிற் பிராணிகளைக் கொல்லுந் தொழிலிற் சந்தோஷித்தனரெனுஞ்

செய்தியின் உண்மைக் கருத்தையுங் கூறல்வேண்டுமென; விடை தருவதில் வல்லராகிய குருவாவார், அந்தக் காருண்ய செல்வமுள்ள அரசர்கள், தங்கள் ஆளுகைக்குட்பட்ட நாட்டிலுள்ள பயிர்களை யழித்தும், அனேகமாகிய,— (98)

மனிதர்களுக்குக் கெடுதிசெய்தும் வந்த கொடிய மிருகங்களையே கொன்றார்கள். அது, வெம்மை செய்யத் தக்க வில்லேந்திய அரசர்களுக்கு விதிக்கப்பட்ட விதிமார்க்கத்திற் சேர்ந்ததேயாம். அஃதெவ்வாற்றாலென்னிலோ, ஜீவகாருண்ய வொழுக்கமுள்ள பெரியோரை நிந்திக்கும் பாவிகளை யமதர்மராஜர் தமக்கென்றேற்படுத்தப்பட்ட விதிமார்க்கத்தின் படி நரகத்திற்றள்ளுவது போலாகும். ஆதிமத்யாந்த ரஹிதனாகியும் பரம கருணாநிதியாகியும் இராநின்ற பரமேசன் (தன்மை முன்னிலை படர்க்கையென்னும் மூவிடத்துஞ் செய்கிருத்தியங்களில், தன்மையிற்) செய்கிருத்தியங்களிலும் இத்தகைய காரிய முளதாகுமென்று கூறியருளினர். (99)

கலிநிலைத்துறை.

என்றநீதியைக் கேட்டவ னுய்யுயி ரெதையுங்
கொன்று ணாநினை யொத்தவ ரொன்றனைக் கொல்ல
வென்று மற்றொரு வல்லுயி ரெழுந்திடக் காணி
னன்று செய்தொழி லெவனென நற்குரு வறைவான்.

இப்படி யருளிச்செய்த நியாயத்தைக் கேட்ட சீடன், வாழுகின்ற எச்சீவனையுங். கொன்றுதின்னாத தங்களை யொத்த மஹாத்மாக்கள், யாதொரு காரணார்த்தம் ஒரு சீவனை மற்றொரு வன்மையுள்ள ஜீவன் கொல்ல வேண்டுமென்று எழுதலைக் காணுங்காற் செய்யுங்காரிய மென்னை யென்று கேட்க; நல்லாசிரியர் கூறுவாராயினர். (100)

அந்த வேளையி லவ்விரண் டற்குமொ ரல்லல்
வந்தி டாதுவி லக்குத னலமது வறிதே
லெந்த வாவிபொல் லாங்குள தோவதை யிறையைச்
சிந்தை செய்துகொன் றிடல்கட னன்னணஞ் செய்த.

அற்ப தோடமற் றொன்றனைக் காத்தவொ ரறத்தா
லொற்க மாமறம் விஞ்சிடு மவ்வித முஞற்றா
தற்ப மாநினைந் தேகினு மங்ஙனம் வாளா
நிற்கி னும்பவ மாமெனச் சொற்றன னெறியோன்.

அப்படிப்பட்ட சமயத்தில் அவ்விரு பிராணிகட்கும் ஒரு துன்பமும் வாராதபடி விலக்குதல் உத்தமம். அக்காரியங் கஷ்டசாத்தியமாயின், எந்தச் சீவன் பொல்லாங் கிழைக்குஞ் சுபாவமுடையதோ அந்தச் சீவனை, ஈசுவரனைத் தியானஞ் செய்து கொல்லுதல் கடமையாம். அப்படிக் கொலை செய்ததனாலுண்டாகிய,— (101)

அற்பதோஷமானது மற்றொன்றைக் காத்தலினால் விளைந்த புண்ணியத்தாலொழியும். துஷ்டஜந்துவைக் கொலை செய்ததா லுண்டாகு பாவம், நிரபராதியாகிய பிராணியைக் காத்தலால் விளைந்த புண்ணியத்தை விடக் குறைந்ததே யாதலின் புண்ணியமே மிகுதியாகும். அவ்வண்ணஞ் செய்யாது அவைகளை யற்பப் பிராணிகளாக நினைந்து அங்கிருந்து சென்றாலும், அங்கேயே ஒரு முயற்சியுமின்றி நின்றாலும் பாவமாகு மெனத் தரும மார்க்கப் பிரவர்த்த கராகிய குரு கூறினர். (102)

ஒப்பி னேனரு ளோய்வரு முயிர்களி லொன்றுந்
தப்பி டாவணம் வலைகளை வளைத்தவை தங்கு
மப்பு வாழுயிர் முதலிய பிடித்தனு தினமுஞ்
செப்ப மாகவுய் வோர்கதி சொல்கெனச் சீடன்.

இந்த நியாயமெனக்கு அங்கீகாரந்தான். ஜீவ காருண்ய மூர்த்தியே! தினந்தோறுந் தமக்கெதிர்ப்படுகின்ற பிராணிகளி

லொன்றேனும் தப்பிப் பிழைக்காவண்ணம் வலைகளை வளைத்து அவைகளி லகப்படுகின்ற நீர்வாசி களாகிய பிராணி முதலியவைகளைப் பிடித்து மனக்கிலேச மின்றிச் சீவனஞ் செய்து வருவோரடையுங் கதியைக் கூறியருள்க வென்று சீடன் வினவ; (103)

புத்தி சால்புதல் வாசொன தொழினனி புரிவோர்
சுத்த மில்வலை ஞருமிழி வேடர்சு மடரை
யொத்து ளார்களு மேயவ ரொல்லையி லிழைத்த
குத்தி ரப்பவத் தாலிழி குலத்தினி லுதித்தார்.

(அங்ஙனம்), நிரம்பிய புத்தியுள்ள மைந்தனே! உன்னாற் குறிக்கப்பட்ட தொழிலையே அதிகமாகச் செய்வோர், துராசாரமுடைய செம்படவரும், இழிகுல வேடரும், கீழ் மக்களையொத்த இதரமனிதர்களுமே. அவர்கள், முற்சன் மங்களிற் செய்த அகிர்த்தியங்களால் இச்சன்மத்தி லிழிகுலத்தி லுதித்தார்கள். (104)

பரிவி லாதுயிர் வதைத்தருந் திடுபவர் பார்ப்பார்
மரபில் வந்தவ ரேனும்வெந் நரகிடை வருந்திப்
பிரிவி லாதுயிர்கொன்றருந் திழிகுலம் பிறப்பர்
புரிவி னத்தொழில் விட்டவர் பினுமதிற் பொருந்தார்.

இரக்கமின்றிப் பிராணிகளைக் கொன்று தின்போர், பிராமண வமிசத்திற் பிறந்தோராயினுங் கொடிய நரகத்தில் வீழ்ந்து (நெடுங்காலம்) வருந்திப் பின்பு அந்தப் பாவ சேடத்திற்காக நாடோறும் உயிர்வதைத் துண்ணுங் கீழ்க் குலத்திற் பிறப்பர். ஜீவகாருண்யத்தால் அத்தொழிலை இப் போது விட்டவர் மறித்தும் அக்குலத்திற் பிறவாதவ ராவர். (105)

அறிதி யென்றருட் குருசொல வம்மக னாயிற்
பறியர் செய்தொழில் செய்தவக் குலவதி பக்தர்
நறிய வான்கதி பெற்றதென் னோவென நாதன்
பொறியொ டேயது கேட்டியென் றன்பொடு புகல்வான்.

யாங் கூறியதை யூகித்தறிவாயாக வென்று தயாளுவாகிய குரு கூற; அச்சீடன், அப்படியாகில், செம்படவர் செய்கின்ற தொழிலைச் செய்துவந்த அக்குலத்து நாகை—அதிபத்ததேவர் நல்ல சிவகதி பெற்றதென்னோவென; ஆசாரியர், நல்லறிவோடு அவ்விடயத்தைக் கேட்பாயாகவென்று அன்போடு கூறுவாரா யினர். (106)

அலைசெய் மாகடன் மீன்களி லனுதினந் தமது
வலையி லேபடு மீன்களுண் முதல்வரு மீனைக்
கலையி ளம்பிறை யணிபவற் கெனவிடு கரும
நிலையி னின்றனர் நித்தலு மவ்வதி பத்தர்.

சிவபத்தருள்ளே தலைவராகிய அவ்வதிபத்ததேவர், அலைகளைப் பெருக்கும் பெருங்கடலிலே தினந்தோறு மிடப்படுந் தமது வலையிலகப்படு மச்சங்களில், முதலில் வரும் ஒரு பெருமச்சத்தைக் கலைகளோடுகூடிய பாலசந்திரனைத் தரித்த பெரிய பெருமானுக்காகக் கடவதென அக்கடலிலேயே விட்டுவரு நியமமாகிய கருமத்தைத் தினந்தோறுஞ் செய்துவந்தனர். (107)

அப்பெ ருந்தரு மந்தின மவர்தொழில் வழிச்சேர்
தப்ப னைத்தையு நீக்கிமெய் யருணெறி தந்தே
யொப்பி லீசுர தரிசனங் காட்டியின் னுவகை
யப்பு மாழ்ந்திடச் செய்ததென் றான்ரு ளாசான்.

(பசு புண்ணிய மல்லாத) அச்சிறந்த பதிபுண்ணியமானது, அவரது ஜீவனோபாய வாயிலாக வுண்டான பாவமெல்லாம் ஒழித்து, உண்மையான அருண் மார்க்கத்தை யவர்க்குக் கொடுத்து, ஸமாநரஹிதராகிய பரமேசுரரது தரிசனத்தைச் செய்வித்து, சிவானந்த சாகரத்திலும், அவரை யழுத்திற்றென்று அருளாளராகிய ஆசிரியர் கூறினர். (108)

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

ஆயி னவ்வதி பத்தர தருந்தொழில் போல
மாயி ரும்புவி மக்களெ லாஞ்செய லாமே
தீயி னுங்கொடி துயிர்க்கொலை யென்றொரு தீர்வை
நீயி யம்புத லென்னெனுஞ் சீடனை நெறியோன்.

பார்த்தி ரக்கமி லாய்வலை மீன்படுத் தொன்றைக்
கார்க்க டல்விடு தொழிலினுங் கல்லெறி கரும
நேர்த்தி யுஞ்சுல பமுமென நிலத்தினர் செய்தே
பூர்த்தி யின்புற லாமெனப் புலம்பிடின் மேலாம்.

அப்படியாயின், அவ்வதிபத்ததேவர் செய்த அருங் காரியத்தைப்போலப் பெரும்புவியிலுள்ள மனிதர் யாவருஞ் செய்யுங் காரியமும் ஏற்புடையதாகுமே. ஜீவவதை நெருப்பினுங் கொடிதென வொரு கோட்பாட்டைத் தாங்கள் விதிப்பதென்னையென்று கடாவிய சீடனை, நல்லொழுக்க முள்ள ஆசிரியர், — (109)

பார்த்து, இரக்க மில்லாத வன்னெஞ்சனே! சமுத்திரத்தில் வலைவீசி அதனிலகப்படும் (மீன்களை யெல்லா மெடுத்துக் கொள்வதற்காக) ஒரு மீனை யீசனுக்கென வெடுத்துக் கருநிறமுடைய கடலில் விடு நியாயமாகிய கருமத்தினும், சாக்கியநாயனாரைப் போன்று (தெருவில் வாளாகிடக்கும்) கல்லெடுத்தெறியுங் கருமம், நேர்த்தியுஞ் சுலபமுமாமெனக் கொண்டு, இவ்வுலகத்தினர் அக்கல்லெறி கருமைத்தையே செய்து, பூரணானந்தத்தைப் பெறலாமென நீ கூறித் தொலைத்தால் அஃது இக்கேள்வியினும் மேலானதாகுமே. (110)

என்ன வம்மகன் கல்லெறிந் திறைவனை யேத்த
லிந்நி லத்திடை வழக்கிலை யாகலி னிசையே
னென்ன நற்குரு வப்படி மீன்விடு மிதையு
மிந்நி லத்திடை வழக்கிலை யெனவறி யென்றான்.

என்றுரைக்க; அச்சீடன், கல்லாலடித்து ஈசனை வழிபடல் இப்பூமியில் ஒருவகை வழிபாடாகக் கேட்கப்படவில்லை.

ஆகலின், அவ்வாறு கூறேனென; அது கேட்ட நற்குணமுள்ள குரு, அப்படியே மீன்விடுவதெனும் இக்காரியமும் ஒருவகை வழிபாடெனக் கேட்டதில்லை யென்றறிவாயாக வென்று கூறினர். (111)

ஐய னேயறிந் தேனிது போலம ரடல்சேர்
பொய்யி லாச்சிவ கணமெனும் பல்வகைப் பூத
மொய்யெ லாந்தசை யுண்ணுமென் றேசிலர் மொழிதல்
வைய மீதுள தந்நிசந் தன்னையும் வழுத்தாய்.

ஐயரே! அறிந்து கொண்டேன். இப்படியே போர்வலி வாய்ந்து, உண்மையே யுரைக்குந் தகையுள்ள சிவகணமெனும் பலவகைப் பூதக்கூட்டமெல்லாம் மாமிசத்தைப் புசிக்குமென்று இவ்வுலகிற் சிலர் கூறுதலுண்டு. அதனுண்மையையுங் கூறுவீராக.

["வழுத்தல்" என்பது துதித்தலென நிகண்டுகளிற் பொருள்படு மாயினும், இங்ஙனஞ் சொல்லலெனும் பொருட்டு. இப் பொருட்டாகப் பெரியபுராணத்திற் சாக்கி நாயனார் புராண முதற் செய்யுளிலே "மறுவில் சரண் பெற்றதிற மறிந்தபடி வழுத்துவாம்" என வருதல் போலச் சூதசங்கிதை முத்திநிலை யுரைத்த வத்தியாயத்துப் *16*—ம் பாட்டில் "மனத்திடை நினைத்ததென் வழுத்து வாயென்றான்" எனவும், பஞ்சாதிகாரவிளக்கத்து *37*—ஞ் செய்யுளில் "வழுத்தியகே வலத்துடனா ணவமாயும்" எனவும் வருவன காண்க.] (112)

என்னு மைந்தனை மெய்க்குரு நோக்கிநல் லீசன்
மன்னு மாண்புடைக் கயிலையங் கிரிநிலை வதியு
நன்ன ரக்கணந் தசைநுக ராவதை நசைஇத்
தின்னும் பேய்க்கண மங்கிலை வேறெனத் தெரித்தான்.

என்று கூறிய சீடனை, உண்மைக் குருவானவர் பார்த்து, நன்மையையே சொரூபமாகக் கொண்ட பரமேச னெழுந்

தருளியிருக்கும் மகத்தான தெய்வீக முடைய கைலாய மலையில் நிலையாக வாழும் அந்த நல்ல பிரமதகணங்கள் ஊனுண்ணா. அவ்வூனை விரும்பித் தின்னும் பேய்க் கூட்டம் அந்தக் கைலாச பருவதத்திலில்லை. அக்கணங்களும் வேறென்றுரைத் தருளினர். (113)

தெரித்த வாசிரி யன்பதம் வணங்கியச் சீடன்
பிரித்த றிந்துகொள் ளார்பிதற் றென்றதை யறிந்தேன்
விரித்த வூனுக ராதவ ரும்முயிர் விளிய
வருத்து கின்றன ரேயவர் மார்க்கமெற் றென்றான்.

இவ்வாறுரைத்தருளிய ஆசிரியர்பாதத்தை அச்சீடன் வணங்கி, பிரமதகணங்களின்ன ஆகாரமுடையன, பேய்க் கணங்களின்ன ஆஹாரமுடையன வென்று பிரித்தறிய மாட்டாதாருடைய பிதற்றுதலே அக்கூற்றாமென்று இப்பொழு தறிந்தேன். மேலே கூறப்பட்ட மாமிசத்தைப் புசியாதாரும் பிராணிகளை யுயிர்போம்படி ஹிம்ஸிக்கின்றனரே, அவர் கோட்டுபாடு தான் எத்தன்மையுடைய தென்று வினாவினன். (114)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நல்வினை யாலே யன்னோர் நற்குலந் தனிலே வந்துங்
கொல்வினை யாள ரானார் குறுமதி யாலே யீர
மொல்கிய வவர்க ளிங்கே யுயிரறச் சைவ ராகார்
பல்வகை யிலைகாய் பீசம் பழநுகர் விலங்கை யொப்பார்.

நல்வினைப்பயனால் அத்தன்மையுடையார் நற்குலத்திற் பிறந்தும் அற்ப புத்தியாற் கொலைத்தொழிலுடையரரயினர். இரக்கமற்ற அத்தன்மையினர், இவ்வுலகில் ஜீவதர்ம வொழுக்கமுடைய சைவராகார். பலவகைப்பட்ட இலை, காய், விதை, கிழங்கு, கனியாகிய இவைகளைத்தின்னு மிருகங் களுக்குச் சமமாவர். (115)

["பீசம்" என்றதனாற் கிழங்குங் கொள்ளப்பட்டது.]

உயிர்களை வதைப்போர் தம்மை யுயர்சைவர் பார்ப்பாரென்ற
லயினக காகந் தன்னை யன்னமென் பதனை யொக்குங்
குயிலரு நிலத்தி லெவ்வெக் குலத்தின ரெனினு மெல்லா
வுயிரிலுந் தயவுள் ளோரந் தணரென வுரைக்கு மேனூல்.

ஊனுண்ணாதவராய் உயிர்வதை செய்கின்றவர்களை, அவ்வுண்ணாமை நோக்கி உயர்ந்த சைவரென்றும் பிராமணரென்றுங் கூறுதல், அன்னப்பக்ஷி போல நடக்குங் கூரியநகத்தோடு கூடிய வுருவுள்ள கருங்காக்கையை அந்நடைநோக்கி அன்னமென்றழைத்த லொக்கும். அளவிட்டுரைத்தற் கரிதாயிருக்கும் இந்நிலவுலகில் எவ்வெக் குலத்தினராயினும், எல்லாச் சீவராசிகளிடத்தும் அழகிய தண்ணளியெனுங் கிருபையுடையோரே அந்தணராவரென்று மேலான சாஸ்திரம் விளம்பும்.

["மேனூல்" என்றது "அந்தண ரென்போரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்—செந்தண்மை பூண்டொழுகலான்". என்றுரைக்குந் திருக்குறளாகுமென்க.] (116)

என்றசற் குருவைச் சீட னிறைஞ்சியிஃ தோரார் செய்கை
யென்றினி தறிந்தே னஃதோர்ந்திருப்பருங் கொல்வ தென்னை
யென்றன னஞ்ஞான் றாசா னெம்பெரு மானாங் கந்தன்
மன்றலம் பதங்க டாழ்ந்து மகன்முகம் பார்த்துச் சொல்வான்.

என்றுகூறிய சற்குருவைச் சீடன் வணங்கி, யான் வினவிய விடயம், இப்போது கூறிய வுண்மையை அறியார் செய்கையேயாகுமென்று நன்றாயறிந்தேன். அவ்வுண்மையை யுணர்ந்தோருங் கொலைசெய்யுங் காரணமென்னை யென வினவினன். அங்ஙனம் ஆசாரியர், எங்கள் ஆத்மநாயகனாகிய குமார சற்குருவின் தெய்வீகமணமும் அழகுமுடைய பாத தாமரைகளை மானசிகமாக வணங்கிச் சீடன் முகத்தைப் பார்த்துக் கூறுவாராயினர். (117)

இம்மைமேன் மறுமை யெய்து மெனுஞ்சொலை நம்பாப் பண்புஞ்
செம்மைசேர் நூல்வி சாரஞ் செய்திடாக் குறைவுந் துன்பி
னம்மைநே ரெவைக்கும் வாதை நணுகுமென் றெண்ணா நெஞ்சு
மெம்மனு டருக்குண் டோவன் னவர்கொலைக் கஞ்சா ரென்றான்.

இம்மையென்னும் இவ்வுலக வாழ்க்கை நீங்கியவுடன் மறுமையென்ப தெய்துமென்னும் பிரமாண வாக்கியங்களை நம்பாத்தன்மையும், உண்மைப் பொருள்க ளடங்கிய சாஸ்திர விசாரஞ் செய்யாக் குறையும், கொலைத்துன் படைகையில் நம்முடம்பொத்த வுடம்புடைய மற்றைப் பிராணிகளுக்கும் வாதையுண்டாகுமென் றெண்ணாத வன்னெஞ்சும் எம் மனிதருக்குள்ளனவோ அத்தன்மையோர், கொலை செய்வ தற்கு அஞ்சாரென்று கூறினர். (118)

இவ்வுரை கேட்ட சீட னெழிற்செவி யாதி யைந்துந்
தெவ்வறச் சிலபி ராணிக் கிருப்பினுஞ் சிறுமை மேன்மை
யிவ்வித மெனத்தேர் மாந்த ராங்கொலோ விவற்றைக் கொல்ல
லெவ்விதங் கொலையா மென்போ ரெதிர்ப்பினை மறுத்தோ தென்ன.

இவ்வாசகத்தைக் கேட்ட சீடன், அழகிய செவி முதலிய பஞ்சேந்திரியமும் மனிதருக் கிருக்குமாறு சில பிராணிகட் கிருந்தாலும், அவை, தாழ்ந்தவையின்னன உயர்ந்தவை யின்னன எனவறியு மறிவுள்ள மநுஷ்ய ஜந்மமாகுமோ? ஆகாவாகலின், இத்தன்மைய பிராணிகளைக் கொல்லுதல், எக்காரணத்தாற் கொலைப்பாவமாகும்? (மனிதரைக் கொல்வதன்றோ கொலை) என்போர் ஆக்ஷேபத்திற்குச் சமாதானங் கூறல் வேண்டு மென்ன; (119)

உயர்குரு சொல்வா னிவ்வா றோதலும் பாவம் பாவந்
தயவறு கொலைஞ ராமச் சழக்கர்க ளிருக்கு நாட்டிற்
குயிலவொர் வாயி லாமற் கோள்வெலும் வலியி லாம
லயிலிரைக் கலையு மந்த வாவிக ளெவ்வா றுய்யும்.

உயர்வுடைய குரு கூறுவாராயினர். இவ்வாறு கூறுதலும் பாவகாரியமே! பாவகாரியமே!! காருண்ய மற்ற கொலைஞ ராகிய அக்குற்ற முடையாரிருக்கு நாட்டில், தங்களுக்குள்ள குறைவைத் தெரிவித்துக் கொள்ள வாயும், பகைஞரைவெல்ல வலியுமில்லாதனவாகி, உண்ணு மிரைக் காக அலையும் அந்தப் பிராணிகள் எப்படி வாழும்! (120)

அனைத்துயிர்க் குரிய தந்தை யானவோர் கடவு ணீதி
தினைத்துணை யேனும் பொய்யாத் திறமுள ததனி னீர்மை
யினைத்தென வறியா மாந்த ரேனைய வுயிரைக் கோறல்
வினைத்துயர்க் கொலையின் றென்றல் விவேகர்சம் மதமாங்கொல்லோ.

சகலப்பிராணிகட்கு முரிய பொதுத்தந்தையான ஒப்பற்ற கடவுளின் சட்டமானது தினையளவேனும் பொய்த்துப் போகாத திறமுடையதாகும். அதன்தன்மையிப்படிப்பட்ட தென அறியா மனிதர், மற்றைப் பிராணிகளைக் கொலை செய்தல், துக்காநுபவத்திற்குக் காரணமாகிய கொலைப்பாவ மாகாதென்பது விவேகிகள் அங்கீகரிக்கத்தக்க விஷய மாகுமோ? (121)

உயர்திணை யெனப்பி றந்தோ ரஃறிணை யாக வோது
முயிர்களைத் தாழ்வா யெண்ணி யூறுசெய் தொழிப்பா ராயி
னியநனி தருநாக் கூற்று மிவர்களைத் தாழ்வா யெண்ணித்
துயருறக் கொல்லு மஃதுந் துகளுறு கொலையா காதே.

உயர்ந்த ஜாதியெனப் பிறந்தோர் இழிந்த ஜாதி யெனப்படும் பிராணிகளை அலக்ஷியப்படுத்தி ஹிம்ஸித்து ஒழிப்பராயின், மிகவுந் திருத்தமாகப் பேசு நாவையுடைய யமதர்மனும் இவர்களையும் அலக்ஷியம் பண்ணித் துக்கிக்கும்படி கொல்வன். அக்கொலையும் குற்றமுள்ள கொலையாகாது. (122)

தன்னையே தான்கொன் றாலுங் கொலையெனச் சாற்று நீதி
யென்னிசா நிலத்துண் டாயி னேனைய பிராணி கொல்லுங்
கன்மமா கொலையி லாது கழிவது முண்டோ கொன்னே
நன்மையே கருது நெஞ்சோய் நவிலுது மினுமோர் நீதி.

தன்னைத் தானே கொன்றாலும் அது தற்கொலையெனப் படும் பாவமாகுமெனப் பகருநியாயம் பகலும் இரவுமாயுள்ள இந்நிலவுலகத்துண்டன்றோ? ஆவதேல், மற்றைப் பிராணிகளைக் கொல்லுந்தொழில் பெரிய கொலைப்பாவ மாகாமே வீண்போகுமோ? நன்னெறியை ஆராயும் மனமுள்ள மகனே! வேறுமோர் நியாயமுங் கூறுவாம். (123)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஏழைவிட்ட விழிநீர்வள் வாளென வியம்பு மாறு பெரிதாமது
பீழையிட்டவனையே யறுக்குமது போலவே பிழைசெயாதவவ்
வேழை கட்குமுய ரேழையா யிசையிசைத் திடாவுயிரமுங்கணீர்
மாழையுற் றுவதைசெய்த பாவியை வதைக்குமெங் கடவுள் வலியினால்.

ஏழையழுத கண்ணீர் கூரிய வாளொக்கு மெனப் பெரியர்கூறு நீதிப்படி, ஒன்றானுந் தடுக்கப்படாத அக்கண்ணீரெனும் வாளாயுதமானது அவ்வேழைகளுக்குத் துக்கங்கொடுத்தவனை யறுக்கும். அதுபோல, நிரபராதிகளான முற்கூறிய ஏழைமனிதர்களினும் மிக்க ஏழைகளாகிப் பேசுந்திறமற்ற பிராணிகள் அழுங்கண்ணீரெனும் வாள், அறிவின்மையால் அவைகளை ஹிம்ஸித்துக் கொன்ற பாவியை எம்முடைய கடவுள் ஆக்கினையினாற் கொல்லும்.

[அந்தநீதி:— "அல்லற்பட் டாற்றா தழுதகண்ணீரன்றே — செல்வத்தைத் தேய்க்கும் படை." என்னுந் திருக்குறளானும் பெறுதும். "அழுங்கண்ணீர்" என்றது துக்கத்தின்மேல் நின்றது.] (124)

இன்றியாதொரு பிராணியைக் கொலையிழைக் கினவ்வுயிர் முளைத்தரோ
கொன்ற பாவியினையே கொலும் பெரியகோ வெனும் பரமனீதியா
லன்றதற் கணுகுபாவ மில்லைமுனி யாணிமாண்ட வியனோருயிர்
குன் றுமாறுவினை செய்தியைந்த துயர்கொண்டதைப் பழைய நூல் சொலும்.

இப்பிறப்பில் ஒருவன், ஒரு பிராணியைக் கொலை செய்வானாயின், அரசர்களுக்கு அரசனாகிய பரமேசுரனது ஆணையால், அந்தப் பிராணியே தன்னைக் கொன்ற பாவியை மறுபிறப்பிற் கொல்லும். அப்பொழுது அதனை யடையும் பாவமு மில்லை. ஆணிமாண்டவியரெனும் முனிவர், (முற்பிறப்பிற் சிறு வயதில்) தும்பி யென்னு மொரு சிறுபிராணியைப் பிடித்து, அது பதைபதைத்து உயிரிழக்கும்படி முள்ளினது நுனியிலிருத்தி விளையாடி, அக்குற்றத்திற்கேற்ற தண்டனை நிமித்தம் (மறுபிறப்பில் யமதர்மனது தூண்டுதலின்படி ஒரூரிற் களவு செய்தார்களோடு சேர்க்கப்பட்டவராகி, அவர்கள் அவ்வூரசனால் தண்டிக்கப்படும்போது, தாமுங் கழுமுனையிலேற்றப்பட்டாராய்த்) துன்பமநுப வித்ததைப் புராதனேதிஹாசமாகிய வடமொழிப் பாரதம் (ஆதி வம்சாவதாரணபர்வம்) கூறும்.

["கொன்ற பாவியினையே கொல்லும்" என்னு நியாயம்,— "புழுவுந் தசையும் வெண்ணிணமும் பொதிந்த குரம்பை வீக்குதற்குக்—கழியூ னுகர்ந்தோர் கொடுநரகிற் கற்ப காலங் கிடந்தழுந்தி — விழைவின் முன்னர்த் தானுகர்ந்த விலங்குமவர்தம் மெய்த் தசையை—யழிவெம் பசியாற் பறித்தருந்து மென்னும் பான்மை யறிந்தேயோ." என்னுங் காசிகாண்டச் செய்யுளானும் பெறுதும்.] (125)

அனகனாகிய பராசரன் புதல்வராறு பேர் சரவணப் பொய்கை
தனிலிருந்த வெழின்மீன் பிடித்து விளையாடுகின்ற வினைதவறென
மனம் வருந்தியி தினீயிரும் மயிலையாகவே மறிக வென்றன
னென விளம்புநனி கந்தனாடல் களியம்புகின்ற வொர்புராணமே.

மாசற்றவராகிய பராசரமுனிவரின் ஆறுபுத்திரர்களும், இமயகிரியிலுள்ள சரவணப்பொய்கையிலிருந்த அழகிய மச்சங்களைப் பிடித்து விளையாடுகின்ற காரியத்தைக் கண்ணுற்ற அம்முனிவர், இது பாவமாகுமேயென்று மனவருத்தமுற்று, இப்பொய்கையின்கண் நீங்களும் மச்சங்களாகிக் கிடக்கக் கடவீர்களெனச் சபித்தனரென்று ஸ்ரீ ஸ்கந்தக்கடவுளின் திருவிளையாடல்களை மிகவுங் கூறாநின்ற மஹாஸ்காந்தபுராணங் கூறும். (126)

இவை களொத்த பலவேது வானரரலாத சீவனெதையுங் கொலல்
சவையுமொப்புகிற கொலைய தாகுமிது தானுயிர்க் கிடர்தரும்பவ
நவைகளுட் பசுவெனுயிருடம்பி லிடர்நல்கவுள்ளத தனாலிதை
நுவணை நூல்களுமொரைந்து பாதகமுளொன் றெனா நுவலுமென்றனன்.

இவை போன்ற பல நியாயங்களால், மனிதரல்லாத எந்தப் பிராணியைக் கொலை செய்தலும் பண்டித சமூகத்திற் பாவமென் றங்கீகரிக்கப்படுங் கொலையேயாகும். இப்பாவந் தான், ஜீவனுக்குப் பவத்துன்பங்களை விளைக்கும் அனந்த பாவபேதங்களுள், பசுவெனுமுயிரிலும் உடம்பிலு நின்று துக்கத்தைக் கொடுக்குந் தன்மையுடையது. ஆதலால், நுட்பமான தர்மசாஸ்திரங்களும் இக்கொலைப்பாவத்தைப் பஞ்சமஹாபாதகங்களுள் ஒன்றெனக் கூறுமென்று ஆசிரியருரைத்தனர். (127)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கலைப்பான்மைசிறந்தகுருவிவ்வாறு புகலமகன்கழறியுள்ள
கொலைப்பாவம்புரியாதநின்போன்றவிரதமுளர்குருதியுண்ணுந்
தலைப்பேனைவயிற்றில்வருகிருமியினைவளர்ப்பாரோசவட்டுவாரோ
நிலைப்பானவருளுடையாய்நவிலெனநல்லறிவுடையநெறியோன்சொல்வான்.

அறுபத்துநான்கு கலைகளிலும் பாண்டித்தியமமைந்த குருவானவர் இவ்வாறு கூற; சீடனானவன், மேலே கூறப்பட்ட

கொலைப் பாவத்தை யெவ்விதத்தினுஞ் செய்யாத தங்களைப்போன்ற கொல்லாவிரதியர் உதிரத்தையுண்ணுந் தலைப்பேனையும் வயிற்றிற்பிறக்குங் கிருமிகளையும் சுயேச்சையாய் வளரும்படி விட்டிருப்பரோ? கொல்லுவரோ? நிலையான காருண்ய மூர்த்தியே! சொல்லியருள வேண்டுமென; நல்லறிவோடு கூடிய வொழுக்கமுள்ள ஆசிரியர் சொல்லத் தொடங்கினர்.

["வயிற்றில் வரு கிருமி" எனவே பிற வுறுப்புக்களிலுறு கிருமிகளும் இனம்பற்றிக் கொள்ளப்படும்.] (128)

தாயினுயர்கருணையிறைசிருட்டியிலவ்வீருயிருஞ்சனிக்குமேகு
மாயினுமவ்வுயிர்நசிக்கப்புரிகருமத்தாற்பாவமணுகுமஃதே
வீயவெனின்முனநவின்றபடியீசனடியர்பிதிர்விண்வாழ்தேவ
ராயவிவர்களைப் பூசித்தமுதருத்தல்வேண்டுமினுமறைதுங்கேண்மோ.

அவ்விருவகைப் பிராணிகளும், தாயினும் விசேடித்த கருணாநிதியாகிய பரமபதியின் சிருஷ்டியிலுதிக்கும்; பின்பு மரிக்கும். அவ்வாறாயினும் அந்தப் பிராணிகள் செத்தொழியும் படி பிறர்செய்யுந் தொழிலாற் பாவஞ்சேரும். அந்தப்பாவம் ஒழியவேண்டுமாயின், முற்கூறியபடி பரமேசுரன், அவனடி யவர், பிதிரர், சுவர்க்கத்தில் வாழுந்தேவர் ஆகிய இவர்களை விதிப்படி பூஜித்து அமுதூட்ட வேண்டும். இன்னும் இதுபற்றிக் கூறுதுங் கேட்பாயாக. (129)

கடுக்காய்கத் தூரிமஞ்சண் மிளகுநிம்ப
விதைநெல்லிக் காயி லாவின்
மடிப்பாலை வார்த்தரைத்துப் பதமாகக்
காய்ச்சிமண மாறு முன்னே
யெடுத்தேசென் னியிற்றேய்த்து முழுகிவரிற்
றலைப்பேனுண் டாகா தென்றும்
முடிக்கேறு பிணிகளிலை மழித்தாலு
மக்கரும்பேன் முளையா தன்றே.

கடுக்காய், கஸ்தூரிமஞ்சள், மிளகு, வேம்பின்வித்து, நெல்லிக்காய் ஆகிய இவைகளைப் பசுவின்பால் விட்ட ரைத்துப் பதமாகக் காய்ச்சி மணம்போய்விடுமுன் அதவாது சூடிருக்கும்போதே யெடுத்துத் தலையிற் றேய்த்து முழுகிவரின், தலையிற் பேனுண்டாகாது. எக்காலத்துஞ் சிரசைப்பற்றிடும் வியாதிகளனைத்தும் உண்டாகா. முண்டிதஞ்செய்யினும் அக்கருநிறப்பேன் உதியாது.

[பஞ்சகற்ப மெனப்படும் கடுக்காய் முதல் நெல்லிக்காய் வரையுள்ள ஐந்தனுள் மிளகு, மற்றை நான்கினளவினின்றும் ஐந்து பங்கு அதிகமாக வுபயோகிக்கப்படத்தக்கது.] (130)

கிருமிசனித்திடற் கேதுவாந்துவரையா திவிதை சில பைங்கீரை
யுருசியென வுண்ணாமலிருப்பினதுவுதியாதென் றுணர்தியென்று
குருசொலின னிவைகேட்ட சீடனருட் குருவே கொல்லாத நல்லோ
ரிருமைநடை தரலிருத்தல் படுத்தலிற் சில்லு யிர்
மடித்திடாரோவென்றான்.

வயிற்றுக்கிருமிக ளுதித்திடற்குக் காரணமாகிய துவரை முதலிய வித்து வர்க்கங்களையும், சில பசிய இலைக்கறி களையும் அவற்றின் உருசிக்காக வுண்ணாமலிருப்பின் அந்தக்கிருமி யுதியாதென் றுணர் வாயாக வென்று குரு கூறினர். இவைகளைச் செவிக்கொண்ட சீடன், காருண்ய சீலராகிய குருவே! கொல்லாவிரதிகளாகிய நல்லோர், போதல், வருதல், இருத்தல், படுத்தன் முதலிய தொழில்களைச் செய்யுங்கால், (எறும்பு, புழு, சிதல், சீலைப்பேன், உலங்கு, மூட்டைப் பூச்சி முதலிய) சில பிராணிகளை அபுத்தி பூர்வமாகக் கொல்லாரோ வென்று கேட்டனன். (131)

கொல்லாத விரதர்*புரிவினைகளிலுங்கொல்லாமை பேணுவாரந்
நல்லார் களொருகாற்றம்விழிக் கெட்டாதோருயிர் தானலியக்காணிற்
பொல்லாதகொலைக்கு நானாளானேனீசுரனே பொறுத்தா ளென்னுஞ்
சொல்லானற்றூயவராவார றியாதிறக்குமுயிர்த்தோடமெல்லாம்.

மேனவின்றவீசுர பூசனையாதிநால்வகையின் விலகுமென்று
ஞானகுரு நவின்றனனம் மாணவகன் குருவதனநளின நோக்கித்
தானடுதறான் பாவம்பிறர்கொன்றுசமைத்த வூன்றானே செத்த
மீனமுதலியவூன்களுண்பதிலுந்தோடமுண்டோவிடை கொடென்றான்.

கொல்லாவிரதிகள், அந்தக் காரியங்களைச் செய்யும் போதும் அவ்விரதத்தை யநுஷ்டிப்பார்கள். அந்நல்லவர்கள் ஒருவேளை தங்கள் கண்ணுக்கெட்டாமல் ஒரு பிராணி நசிக்கக் காண்பார்களாயின், சருவேசுரா! இப்பொல்லாத கொலைப் பாவத்திற்கு அறியாமையால் நான் ஆளானேன்: என் குற்றத்தைப் பொறுத்து என்னைக் காத்தருள வேண்டு மென்னும் பிரார்த்தனையால் மிக்க சுத்தராவர். அபுத்திபூர்வ மாக நேரிட்ட கொலைப்பாவ மனைத்தும்,— (132)

மேற்கூறிய ஈசுரபூஜை முதலிய நான்கு வகையாற் கழியுமென்று ஞானாசாரியர் கூறியருளினர். (மேல்), அந்தச்சீடன், குருவினது அன்றலர்ந்த தாமரையொத்த முகத்தைப் பார்த்து, தானே கொல்வதுதான் பாவம்; பிறர் கொன்று அவராற் சமைக்கப்பட்டிருக்கும் ஊனையும், தானே மரணமான மச்சம் முதலியவற்றின் மாமிசத்தையும் உண்பதிலும் பாவமுண்டோ? விடையிறுக்க வேண்டு மென்றான். (133)

[*"புரிவினைகளிலுங் கொல்லாமை பேணுவார்" என்று பொதுப்படக் கூறினமையால், உபயோகிக்கத் தக்க இலை, மலர், காய், கனி முதலிய வற்றிலும் புழு முதலிய சிறு பிராணிகளிருக்குமென ஆராய்ந்து கண்டு அவைகளைக் கொல்லாமலெடுத்து விடுவரென்பதுங் கொள்க.]

ஆசிரியனஙனவில்வானூனுண்போர் காரணமாயாவி கொல்வோர்
காசினியிலுளராதலால்லுயிரைக் கொல்லுபவர்களைப் போலுண்ணு
மாசையொன்றையுடையவரும்பாவிகளேயாகுவர்தானாகச்செத்த
வேசுயிரினூனருந்துதலிற்பாவமிலையெனினுமசுத்தமேயும்.

ஆசிரியர் அங்ஙனங் கூறுவாராயினர்,– ஊனுண்பவர் நிமித்தமாகப் பிராணிகளைக் கொல்வோர் பூமியிலிருப்ப ராதலின், பிராணிகளைக் கொல்பவர்களைப் போலவே ஊன்றின்னவேண்டு மென்னும் ஆசை மாத்திரமுடை யோரும் பாவிகளேயாவர். தானாகச் செத்த பிராணியின் குற்றமான வூனுண்டக்காற் பாவமில்லை யென்றாலும் புறக்கருவிகட்கும் அகக் கருவிகட்கும் அசுத்தம் உண்டாகும்.

[தின்பவர் காரணமாகவே உயிரைக்கொல்பவ ருலகிலுளரெனும் இந்நியாயம்.– "தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும் – விலைப் பொருட்டா லூன்றருவாரில்." என்னுந் திருக்குறளானும் பெறுதும். "அசுத்த மேயும்" என்றது, "நாம் ஊனுண்ண, யாதொரு பிராணி தானே சாவாதா" என்றெண்ணும் மறநெஞ்சுண்டாகும்: அவ்வழிக் குற்றம் பொருந்துமென்பதை யுணர்த்துவதுமாம்.] (134)

அவ்வசுத்தவழி நோயுண்டாமாதலாலது வுமருந்தொண்ணாதா
லிவ்வுலகருடல் வேகச்சுடுகாடிங்கிருப்பதுபோலிழிந்தவூன்சேர்
தெவ்வரதுவயிறு சுடுகாடாகவிருக்குமெனத் தெரிவிவேகர்
சைவரிகழூனையனுதினந்தின்று நித்திய சூதகராவாரோ.

அவ்வசுத்தங் காரணமாக நோயுண்டா மாதலால், தானே செத்த பிராணியின தூனையும் அருந்தல் தகாத காரியமே. மரணத்துட்பட்ட இவ்வுலகின ருடம்பைத் தகனஞ்செய்யச் சுடுகாடென்னுமிடம் இங்கே யிருப்பது போலப் பிராணிகளின் ஈனப்பிரேதங்கள் சேருமிடமாகிய அவற்றின் சத்துருக்களின் வயிறே அவற்றின் மசானமாகு மென்றறிந்த விவேகிகள் சைவத்

திருவாளர் நிஷேதித் தொழித்த ஊனைப் பிரதிதினமுந்தின்று அபரக்கிரியைகளா லொழிக்கப்படாத நித்தியப் பிரேதசூதக ராவரோ! ஆகார்.

[பிரேதத்தைத் தீண்டுவதுந் தீட்டாகலின், பிராணிகளின் பிரேதங்களைப் பிரதிதினமுந் தின்போரை "நித்தியசூதகர்" என்றன ரென்பதுமாம்.] (135)

என்றனனாசிரியன்தன்மேற் சீடன்சிலவுயிர்களீனுமுட்டை
யென்றதிலாருயிரில்லையிழவில்லையாகலினிங்கதனையென்றும்
நன்றெனவுண்டிடினென் கொலெனவின வப்புன் புலாறனிலு நன்றா
மொன்றுசொலவிடமுண்டோவிலையசுத்தமாகு
மெனவுரைத்தானையன்.

என்று ஆசிரியர் கூறினர். அதற்குமேல், சீடனானவன், சில பிராணிகளிடுகின்ற முட்டையிற் பிராணனில்லை. அதைச் சேதிப்பதனாற் பிரேதசூதகமுமில்லை. ஆகையால், இங்கே அம்முட்டையை யெப்பொழுதுஞ் சுத்த பதார்த்தமென வுண்டால் என்ன தோஷமென்று கேட்க; (அங்ஙனம்), இழிவாகிய ஊனிலுஞ் சுத்த பதார்த்தமாவதொன்றுண் டெனற்கு வழியுண்டோ? இல்லை யாகலின், அம்முட்டையும் அசுத்த பதார்த்தமே யாகுமென்று குரு கூறினர். (136)

ஆவதெனின்மீனிருக்குநீரருந்துதலுமசுத்தமாகலாமே
தேவனருணினைவுடையோயதுவு முதவாதெனத்திர்ப்பாயோ வென்னு
நாவுடையமகன் முகத்தைக்குருநோக்கியெஞ்ஞான் றுநறிய தண்ணீர்
தூவில்பல பொருட்குமழுக்கொழித்துநலந்தருகின்ற தூயதாகும்.

அதுவும் அசுத்தபதார்த்த மாவதென்றால், மீன் சஞ்சரிக்கின்ற நீரைப் பானஞ்செய்வதும் அசுத்தமாகலாமே, பரமேசுர கிருபையை எக்காலத்தும் மறவாத ஆசாரியரே! அந்நீருந் தான் அருந்தத் தகாதென்று தீர்மானிப்பீரோ வென்னும் நாவன்மைவாய்ந்த சீடன் முகத்தைக் குருவானவர்

பார்த்து, எப்பொழுதுஞ் சுத்தோதகமானது சுத்தமற்ற பல வஸ்துக்களிலுமுள்ள அழுக்கை யொழித்து அவைகட்குப் பரிசுத்தத்தை யுண்டாக்கும் வாலிதாந் தன்மை யுடையதாகும்.

[யாதோரசுத்த நீக்குதற்பொருட்டு நீரைப்புரோக்ஷிக்கு நியமமும் அந்நீர் தூயதென்பதைக் காட்டும்.] (137)

ஆகலின் மீன்வசித்திடு நீரசுத்தமடையாததனையருந்தலாநன்
கேகிடுநீரூறிடுநீர்களுக்குமிழி விலையிவற்று ளெடுக்கு நீரில்
வேகநடைமீனேறினதனையருந்தாதகற்றல்விவேகர்செய்கை
யாகுமெனவிடையிறுத்தானதன்மேலுமகன்வினவவாரம்பித்தான்.

ஆகலின், மச்சங்கள் சஞ்சரிக்கு நீர் அசுத்தத் தன்மை யடையாது. அதனை யருந்தலுக்கும் ஆக்ஷேபனையின்று. நன்றாக ஓடுநீர் ஊற்றுநீர்கட்கும் அசுத்தமில்லை. (ஆயினும்), இந்நீர்களுள், பாத்திரங்களிலெடுக்கப்படு நீரில் விரைந்து செல்லு மீன் வருமாயின், அந்நீரைமாத்திரம் உபயோகப் படுத் தாமல் நீக்குதல் விவேகிகள் ஒழுக்கமாமென்று ஆசிரியர் கூறியருளினர். அதன்மேலும், சீடன், கேட்கத் தொடங்கினன்,— (138)

தாவரங்கட்குயிருண்டோவிலையோசொல்கென்றனனத் தருணமாசா
னாவலிமிக்குறுபுதல்வவுயிருளதென்றானாயினவின்றவந்தத்
தாவரத்தின்மலரரும்புகாய்கிழங்குதழையாதிகொய்து தின்னுஞ்
சீவர்களுக்குறுபாவமிலைகொலோவெனக்குதர்க்கசீடன்கேட்டான்.

தாவரங்களாகிய மரம், செடி, புல், பூண்டு முதலியவற்றிற்கு உயிருண்டோ? இல்லையோ? அருளிச்செய்ய வேண்டுமென் றனன். அப்பொழுது ஆசிரியர், நாவன்மை மிகவுற்ற மகனே! அவைகளில் உயிருள தென்றனர். உளதேல், சொல்லப்பட்ட அவைகளின் மலர், அரும்பு, காய், கிழங்கு, தழை முதலிய வற்றை அறுத்துத் தின்னும் ஜீவர்களுக்குப் பாவமடைவ தில்லையோவென்று குதர்க்கபுத்தியுள்ள சீடன் கேட்டனன். (139)

கேட்டமகன்றனைப்புதல்வவெனவிளித்துஞானகுருகிளத்து
வானீள்
கோட்டுமரம்புல்லிவைதொட்டிடலறியுமோரறிவாங்குயின்ற
வொன்றோ
டூட்டுசுவையையுமறியுமிப்பிமனவாதியிவற்றோடுநாற்றங்
கூட்டினொருமூன்றாமவ்வுயிரெறும்புசிதலெனவுங்குறிக்கலாமால்.

இவ்வாறு கேட்ட மாணாக்கனை ஞானாசாரியர் மைந்தனே! என வழைத்துப் பின்வருமாறு கூறலாயினர். நீண்ட கிளைகளுடன் கூடிய மரம் புல் ஆகிய இவை; பரிசமறியுந் தன்மையுள்ள ஓரறிவுயிராகும். இப்போது கூறிய பரிசத்துடன் ஊட்டப்படுஞ் சுவையையுமறியுந் தன்மையுள்ள இப் பியினமும், சங்கினமும் ஈரறிவுயிராகும். இவ்விரண்டுணர்ச்சி யுடன் வாசனை யுணர்ச்சியையுங் கூட்டினால் அறிவு மூன்றாகும். அம் மூவறிவுயிர் எறும்பு கறையானெனவு நிச்சயிக் கலாம்.

["சிதலு மெறும்பு மூவறி வினவே". எனத் தொல்காப்பியத்திலும், "புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர். முரணந் தாதிநா வறிவொடீ ரறிவுயிர். சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்." என நன்னூலிலுங் கூறப்பட்டபடியே எறும்பும், கறையானெனுஞ் சிதலும் உடம்பு நா மூக்கென்பனவுடைய மூவறிவுயிரெனவே கூறப்பட்டன. எறும்பிற்குக் கண்ணுமுண்டெனச் சிலர் கூறுகின்றனர். (Encylopedia Britanica 11th Edition) என்சைகிளோபீடியா பிரிட்டானிகா என்னு நூற் 11—ம் பதிப்பில் எறும்புக்குக் கண்ணுண்டென்னும் விவரங் கூறப்படவில்லை; கறையானுக் குக் கண்ணின்றென்பது கூறப்பட்டது.] (140)

அம்மூன்றோடொளிவிழியுமுடையவுயிர் தும்பிகளுமளியுமாகு
மிம்மாசினான்கொடொலிக்காதுமுளவுயிர்பறவையிருவிலங்கோ
டம்மேனிமனுடர்களுமாமனுடர்க்காய்மனமுமதிகமாமென்
றெம்மேதையினருமறிவாரிவற்றுளோரறிவாயிருக்கும்யாவும்.

சரமில்லாவசரமெனவாமாதலாற்குருதிதசைகண்மேவா
விரசமுள்ளவுயிராகிநடையோட்டம்படுத்தெழுதலிலவாய்நிற்கு
மரமுதலியவற்றின்மலராதி கொயினவைக்க திகவாதையில்லை
பரர்கொய்தகிளைதழையும்பினுமுளைக்கவவற்றினிடம்
பார்க்கலாமால்.

அம்மூவறிவுடன் உருவத்தை யறியும் ஒளியோடு கூடிய விழியுமுள்ள நான்கறிவுயிர், தும்பிகளும் வண்டுகளுமாகும். இக்குற்றமற்ற நான்கறிவுடன் ஒலியறியுங்காதுமுள்ள ஐயறிவுயிர், பக்ஷிகளும், பேருருவ மிருகங்களோடு அழகிய தேகமுள்ள மனிதர்களுமாகும். ஐயறிவுயிராகு மனிதர்க்கு நன்று தீது ஆய்ந்துகொள்ளத் தக்க மனமென்னும் ஓரறிவும் அதிகமாகு மென மேலான அறிவுடையர் யாவரும் அறிவர். இப்படி வகுக்கப் பட்டவைகளுள் ஓரறிவுயிராயிருக்கும் யாவும்,—(141)

சரித்தலுக்குரிய சரத்தன்மையில்லாத அசரமெனக் கூறப்படுமாகையால், உதிர மாமிச முதலிய தாதுக்கள் பொருந்தாத இரசம் அல்லது பாலெ னப்படுவதுள்ள உயிர்களாகி நடை, ஓட்டம், படுத்தல், எழுதன் முதலிய செயல்களில்லனவாய் நிற்கும். அந்த மரமுதலியவற்றின் பூ முதலியவைகளைக் கொய்தால் அவையற்றிற்கு அதிக வருத்தமில்லை. இதரர்களறுத்த கிளை தழைகளுக்குப் பிரதியாக வேறு கிளை தழைகளும் உண்டாதலை அவற்றின் கண்ணே காணலாகும். (142)

முதிருகிரைக்கருமயிரைவாங்கு பொழுதொருதுயருமுளையா
தேய்ப்ப

வுதிர்பருவத்திலைமலர்கள்பழமுதலியனகொயினவ்வுயிர்க்குவாதை
யதுசிறிதுமுதியாதுவேறு பொருள்கொய்யினதுசிறிதுண்டாகு
மதன்வழியின்வருபவமுமிலையீசுரார்ப்பணத்திற்கவையாமாயின்.

வளர்ந்தநகம், வளர்ந்த கருமயிர் இவைகளைக்களையும் பொழுது மனிதர்க்கு ஒரு வருத்தமு முண்டாகாதிருத்தலொத்து உதிரும் பருவமுள்ள இலைகளை மலர்களைப் பழமுதலியவை களைக் கொய்தால் அவ்வோரறிவுயிர்க்குச் சிறிதேனும் வருத்தமுண்டாவதில்லை. இவற்றிற்கு வேறாயுள்ள மற்றைப் பதார்த்தங்களையறுத்தெடுத்தால் அவ்வுயிர்கட்கு வருத்தஞ் சிறிதுண்டாகும், அவ்வருத்தத்தின் வழியிலே வரத்தக்க பாவமுமில்லை; அப்பதார்த்தங்கள் ஈச்வரார்ப்பணத்திற் க்காகுமாயின்.

[உண்ணத்தகு பதார்த்த மெதுவும், உயிர்க்குயிராய்த் தன்னுள் அந்தரியாமியாயிருக்கும் ஈசுரனுக்கு அர்ப்பண மாகாதவழி யுண்ணுதல் கூடாதென்பதும் இங்ஙனம் பெற்றாம். முத்துச்சிப்பியின் முத்தெடுத்தலும், தேன் கூட்டிற் றேனெடுத் தலும், சங்கும், நீற்றிற்குப யோகமாகு கிளிஞ்சில் முதலியனவும் இங்கே கூறப்பட்ட ஈசுரார்ப்பணத்திற் சேரற்பாலன வென்பதும், பிறர் பொருட்டென்னின் அவற்றாலெய்து தோஷங்கள் பின்னுரைக்கப்படு பரிகாரத்தாற் றீரற்பாலன வென்பதும் ஓர்க. பிறவும் இன்ன.] (143)

ஈசுரனுக்கர்ப்பணமாம்பொருளுயிருமேன்கதியையெய்துமந்த
வீசுரனுக்கர்ப்பணமாகாதவழிவருபாவமிறக்குமாறவ்
வீசுரனுக்கவனடியர்க்குரியபணிபுரிந்துணவையினிதீவோர்க
ளீசுரனுக்கடியரெனவாழ்வார்களூனிங்ஙனமிடலொண்ணாதே.

ஈசுவரார்ப்பணஞ் செய்யப்பட்ட பதார்த்தவுயிரும் மேலான கதியையடையும். அப்படி யீசுவரார்ப்பண மாகாத வழி விளைந்த பாவமொழியுமாறு அவ்வீசுவரனுக்கும், அவனடியவர்க்கும் உரிய தொண்டுகளைச் செய்து அவர்களுக்கு அமுதூட்டு வோர், ஈசுவரனுக்கடியரெனப் புகழுமாறு வாழ்வர். இங்ஙனம், கந்தமூலாதிகளை நிவேதிப்பது போல ஊனையும் நிவேதித்தல் கூடாது. (144)

சிவஞான தேசிகம்:

தனக்கேனும்பிறர்க்கேனுமுபயோகமில்லாமற்றருவிற்புல்லில்
வனக்கேடில்செடிகொடியிலெதையேனுமறுத்தழிக்கு
மாசுளானை
மனக்கோணனிமிர்க்குமருளுளர்தடுத்துநன்மதியும்வழங்கவேண்டு
மெனக்கோளில் குருவருளிச்செய்தனனஞ்ஞான்றுமகனிது
நன்றென்றான்.

தனக்காவது பிறர்க்காவது ஒரு பிரயோஜனமுமின்றி மரங்களிலேனும், புற்களிலேனும், காட்டிலுள்ள கேடற்ற செடிகளிலேனும், கொடிகளிலேனும் எதையாவது நாசஞ் செய்யும் பாவியை, மனத்தின் சுபாவதுர்க்குணமான கோணலை நிமிர்க்கத்தக்க ஜீவகாருண்யமுள்ள நல்லோர், இப்படிச் செய்யேலெனத் தடுத்து நற்புத்தியும் போதிக்க வேண்டுமென்று குற்றமற்ற ஆசிரியர் கூறியருளினர். கேட்டசீடனும் இது ஞாயமேயென அங்கீகரித்தனன். (145)

நன்றென்றமகன்மேலுங்குருவணங்கிப்புன்னுனியுநறுக்கல்பாவ
மென்றின்றுசொனதுவிதியாமாயினாவுரித்துண்புலையரேனும்
பொன் றயங்குசடையீ சற்கன்புடையராயினவர்புரையினந்தே
வென்றன்றுதிருநாவுக்கரையருரைப்பாரோ மெய்யியம்புகென்ன.

அப்பாவிலுள *புலையரேனுமெனுஞ் சொற்கடையிலணைந்த
வும்மை
தப்பாமலிழிவுசிறப்பாகுமதுவீசனருட்டாசரெல்லா
மெப்போதும்புலவுண்ணாரெனும்பொருளைத்தருமன்பையேற்றுநாளு
முப்பாழுங்கடக்கநினைசுதவறிதியென்றுகுருமொழிந்துநின்றான்.

இப்படி யங்கீகரித்த சீடன், அதன் மேலும் ஆசிரியரை வணங்கி, புல்லினது நுனியும் நறுக்குதல் பாவமாகுமென்று தாங்கள் இன்று கூறியது விதியாகுமாயின், பசுவை யுரித்துண்ணும் புலையராயினும் அவர், பொன் போற் பிரகாசிக்கும் ஜடாமகுடத்தைத் தாங்கிய பரமேசுரனுக்கு அன்புடையராயின் நாம் வணங்குங் குற்றமற்ற தெய்வமாவ

ரென்று அக்காலத்தில், திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுவரோ? அதனுண்மையை விளக்க வேண்டுமென்று கேட்க, — (146)

அந்தத் திருப்பாசுரத்திலுள்ள "புலையரேனும்" என்னுஞ் சொற்றொடரின் ஈற்றில் வந்திருக்கும் 'உம்மை' யானது, இழிவு சிறப்புப் பொருளைத் தருவதாகும். பரமேசுவரனுடைய அடியராகிய ஜீவகாருண்யமுள்ள பெரியோர் யாவரும் எக்காலத்தும் புலாலுண்ணாரென்னும் அருத்தத்தையுங் கொடுக்கும். எந்நாளும் பரமேசுவர அன்பினை விசேடப் படுத்தும். இந்த அருத்தத்தைச் சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயையெனப்படு மூன்று டாழையுங்கடந்து செல்லக்கருதும்மகனே! அறிவாயாக என்று ஆசிரியர் கூறி நின்றனர்.

[* "புலையரேனும்" என்னுஞ் சொற்றொடரமையப் பெற்ற திருப்பாசுரம். — "சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து தரணி யொடு வானாளத் தருவரேனும் — மங்குவா ரவர்செல்வ மதிப்போ மல்லோம் மாதேவர்க் கேகாந்தரல்ல ராகில் — அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யோரா யாவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் — கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகி லவர் கண்டீர் யாம் வணங்குங் கடவு ளாரே" என வருவதென்க.] (147)

நின்றகுருநோக்கிமகன்புலைப்புசிப்பினுயிர்க்
கொலையினேரும்பாவம்
பொன்றவயர்பரிகார நூனவிலவில்லைகொலோபுகறியென்ன
வின்றயைகொள்குருபுதல்வவேசில்பராசரமிருதியிருமாமீன்கள்
கொன்றதற்கும்பறவைநகருயிர்க்கொலைக்கும்பரிகாரங்குயிலுமென்றான்.

இவ்வாறு கூறிநின்ற குருவைச் சீடன் பார்த்து, புலாலைப் புசித்தலாலும் உயிர்க்கொலை செய்தலாலும் உண்டாகும் பாவமொழியச் செய்யவேண்டிய பிராயச் சித்தங்களைச்

சாஸ்திரங்கள் கூறவில்லையோ? கூறவேண்டுமென்ன; இனிய தயாநிதியாகிய குருவானவர், புதல்வனே! குற்றமற்ற பராசரஸ்ம்ருதி (பிராயச்சித்தகாண்டம் 3—ம் அத்தியாயம்) ஆனது பெரிய மிருகங்களையும் மச்சங்களையும் கொன்றதற் கும், பக்ஷிகளையும் ஊருமுயிர்களையும் கொலை செய்ததற்கும் பரிகாரங்கள் கூறுமென் றியம்பினர்.

[பரிகாரநூல் பலவிருப்பினும், இக்கலியுகத்திற்கு முக்கிய நூல் பராசரஸ்ம்ருதியாகலின், அஃதிங்குக் காட்டப்பட்டது.] (148)

ஆயினந்தவாவிகளைக்கொன்றுகொன்றுதின்றுதின்றேயற நூல்கூறு
நேயமுள்ள பரிகாரம்புரிதனெறியாகாதோநெறியோயென்னும்
வாயுடையமகனையிறைநனிநோக்கியறைகின்றான்மறமிஃதென்னா
வாயுணர்விலாதுசெய்தபாதகந்தான் பரிகாரத்தக லுமல்லால்.

தன்னளவிற்சகிக்கொணாவினைவழியில்வருநெடியசழக்குநீங்கு
மின்னபவமிதினீங்குமெனத்தெரிந்துமனமார விழைக்கும்பாவ
மென்னபரிகாரமிழைத்தாலுமொழியாததுவுமேகுமென்று
சொன்னவுரையுண்டெனினுமதுபெரியசந்தேகஞ்சுதனேயென்றும்.

அப்படியாயின், அந்தப் பிராணிகளைக் கொன்று கொன்று திருப்பதியாகத் தின்று தின்றுகொண்டே வந்து அந்தத் தர்மசாஸ்திரங்கூறும் பிரியமுள்ள பரிகாரத்தைச் செய்தல் நன்மார்க்கமாகாதோ? ஒழுக்கமுள்ள ஆசிரியரே! என்னும் வாயுடையசீடனை, ஆசிரியர்—விவேகபூரணனார் நன்றாகப் பார்த்துக் கூறலாயினர். இதுபாவமாகுமேயென அறியு மறிவில்லாமல் அதாவது அபுத்தி பூர்வகமாகச்செய்த பாவந்தான் பிராயச்சித்தத்தாலொழியும். அன்றியும்,— (149)

தனக்குச் சகிக்க முடியாவழித் தான்செய்த காரிங்களால் நேரிட்ட கொடும்பாவமு நீங்கும். இன்ன பாவம் இன்ன பிராயச்சித்தத்தால் நீங்குமென்று ஏற்கனவே யறிந்துகொண்டு

பின் புத்திபூர்வகமாகச் செய்யுங் காரியங்களாலுண்டாகும் பாவம், எப்படிப் பட்ட பிராயச்சித்தஞ்செய்தாலு நீங்காது. அத்தகைய பாவமும் நீங்குமென்று கூறிய அருத்தவாத வாக்கியங்களுமிருந்தாலும் பிள்ளாய்! அவ்விஷயம் எக்காலத்தும் பெரிய ஸந்தேஹாஸ்பதமே. (150)

நல்லவர்கள் பரிகார முண்டெனவொர்
    பவஞ்செயார் நவைதீர் நூல்கள்
சொல்லுபரி காரநனி நடந்ததற்கும்
    பாவமது தொலைந்த தற்கு
மெல்லையிது தானெனவிங் கெவர்தீர்ப்ப
    ராகலினுண் ணிரைக்காக் கொல்லும்
புல்லறிவை யொழித்தருளின் மார்க்கமுற
    னலமெனவப் புனிதன் சொன்னான்.

நல்லோர்கள், பரிகாரமிருக்கின்றதே யென்னுந் துணிவுடன் ஒரு பாவத்தைச் செய்யார்கள். பாவக் கழுவாயுரைக்கு நூல்கள் கூறுகின்றபிராயச் சித்தங்கள் குறைவற நடத்தப்பட்டன வென்பதற்கும், அவற்றா லொழியவேண்டிய பாவங்களொழிந்தன வென்பதற்கும் அளவு அதாவது அறிகுறியிதுதானென இவ்வுலகின்கண்எவர் வரையறுத்துக் கூறுவர். கூறாராகலின், புசிக்கு முணவுக்காகக் கொலை செய்யத் தூண்டும் அவிவேகத்தை யொழித்துச் சீவகாருண்ணிய வழியினிற்றல் உசிதமாமென அந்தப் பரிசுத்த ஆசிரியர் கூறியருளினர். (151)

பறைந்தநெறியுணர்ந்தசுதன்கொல்லுவதுமுண்பதுவும் பாவமென்றே
யறிந்தவெனக்கின்னுமொருசந்தேகமுண்டதுதானறிவினாலே
சிறந்தபெரியவர்கள்ளூனருந்திடினும்வேறுபிழை
    செய்திட்டாலுங்
கறங்குகறையடையார்களௌனநூல்கள்கழறுமுறைகளிலே
    யென்றான்.

இப்போது கூறப்பட்ட மார்க்கத்தை யறிந்த சீடன், கொல்வதுங் கொன்றதைத் தின்பதும் பாவமேயெனவறிந்த என்மாட் டிதன்மேலு மொருசந்தேகமுண்டாயிருக்கின்றது. அஃதாவது "அறிவின்மேம்பட்ட பெரியோர்கள் கள்ளுண்டாலும், ஊனுண்டாலும், வேறு குற்றங்களைச் செய்தாலும் துக்காநுபவத்திற்குரிய பாவம் அடையார்கள்" என்று சில நூல்கள் கூறுகின்ற வாக்கியங்களின் விஷயத்திலென்றான்.

[இப்படிப்பட்ட விஷயம்.—சிவஞானசித்தியார் 8—ஞ் சூத்திரத்து 33—ஞ் செய்யுளில் "மாசதனிற் றூய்மையினின் வறுமை வாழ்வின் வருத்தத்திற் றிருத்தத்தின் மைதுனத்திற் சினத்தின் — ஆசையினின் வெறுப்பினிவை யல்லாது மெல்லா மடைந்தாலு ஞானிகடா மரனடியை யகலார்" எனவருவதினும் அறியப் படும்.] (152)

அவ்வையமறுக்கவெனக்குருமகனைநோக்கியந்தவறிவுளார்க
ளெவ்வழியும்பிழைசெய்யாரெனும்பொருளைத்தருமுனுரையேய்ந்தவும்மை
தெவ்விலவரருளழுந்துங்காற் *பாலர்பேயர்பித்தர் திறமுமாவ
ரவ்வமையமெதையேனுஞ்செயினவர்கள்செய்கையெனவது
வாகாதே.

(பின்பு அந்தச்சீடன்), அச்சந்தேகத்தை யொழித்தருள வேண்டுமென்ன; குருவானவர் சீடனைநோக்கி, நீ கூறிய அறிவுடையோர்கள், எவ்விதத்தினுங் குற்றமான காரியங்களைச் செய்யார்களெனும் பொருளை உன் வாக்கியத்திற் பொருந்திய "உம்மை" யானது தரும். (அகம்புறமாகிய ஈரிடத்தும்) பகைமையற்ற அவர்கள், திருவருள் வயப்பட்டு நிற்குங்காலத்தே பாலர், பேயர், பித்தர் தன்மையையும் உடையராவர். அந்தத் தருணத்தில் (நன்று தீதெனப்படும் இருவினையுள் ஊழின்படி) எது செய்ய நேரிடினும் அஃது

அவருள்ளே யாவேசித்திருக்குந் திருவருளின் செய்கையென வாகுமேயன்றி அவர் செய்கையெனவாகாது.

[*"பாலர் பேயர்பித்தர் திறமுமாவர்" என்றது மண்டல ப்ராஹ்மணோபநிஷத்தில் "ஸதத்ஜ்ஞோபாலோந்மத்த பிசாசவஜ் ஜடவ்ருத்யாலோக மாசரேன" எனவரு (சுருதிப்) பிரமாணமா யிருக்கின்றது.] (153)

கொல்லாமற்கொன்றதையுமுண்ணாமலிருப்பவர்க்குக்கூற்று மஞ்சும்
பொல்லா தபிணிகளஞ்சுமறிவுவிஞ்சுமாகலின்முற்புகன்றமேலோ
ரெல்லாரும்பணிகடவுளாவரவரிடத்தில்வழுப்போலவேதும்
நல்லார்கள்காணினிகழாதுகொளற்கவ்வாறுநவிலுநூல்கள்.

கொல்லாமலுங் கொல்லப்பட்டதைத் தின்னாமலு மிருப்பவர்க்கு, (எல்லோரையும் அச்சுறுத்தி யுயிர்கவருங்) கூற்றுவனும் அஞ்சுவன். கொடிய நோய்களும் அஞ்சும். அறிவுவிருத்தியாகும். ஆகலின், முற்கூறப்பட்ட கொன் றுண்ணா மேலோர், யாவரும் வணங்குந் தெய்வமாவர். அவரிடத்தில் உலகினர்களாற் குற்றமாக மதிக்கப்பட்ட சிலகாரியங்கள் ஏகதேசங்காணப்படினும், நாம் கடைத்தேற வேண்டுமெனுங் கருத்துடையோர் இகழாமல் அவரை வழிபடற்காகவே சில நூல்களவ்வாறு கூறும்.

["கூற்றுமஞ்சும் பொல்லாத பிணிகளஞ்சும்" என்றது, கொல்லாவிரதிகள் பிற பாவங்களைச் செய்திருந்தாலும் அவற்றிற்குரிய தண்டனையை யமதருமன் செய்ய நினைக்கும்போது, உயிரொன்றனையும் வருத்தாத தருமமுள்ள இவரது உயிரை யானெவ்வாறு வருத்தல் கூடும்? வழியில்லையே யென்று இம்மையினும் மறுமையினும் பின்னிடைவன்: அவனதாணையிலுள்ள கொடு நோய்களும்

அவ்வாறே யாதற்பாலன என்பதைக் காட்டுகின்றது. அதனால் யமனாணை செல்வதற்கு ஆதாரம், ஜீவயாதனை யேயாமென்க.] (154)

உவர் நீரிலுறைமீனுக்கந்தவுவரேறாதவுண்மையேபோ
லவர் நீருமாமவரைப்போனடித்துத்தனது செயலாசையாலே
யெவருனுங்கள்ளுமருந்திடுவார்கொலவர் நரகையெய் தறிண்ணந்
தவறேது மின்னெறியினடப்பவர்களேயறிவுசார்வாரென்றான்.

உப்புநீரில் வாழ்கின்ற மீனுக்கு, அவ்வுப்பு ஏறாதவுண்மை போல மேற்குறித்த பெரியோர் தன்மையுமாம். உலகினரில் அவரைப்போல நடித்துச் சீவபோதத்தடிப்புடன் மிகுந்த ஆவலோடு முற்கூறிய ஊனையுங்கள்ளையும் அருந்துந ரெவரோ அவர் நரகமடைதல் சத்தியம். எவ்வகைக்குற்றமுஞ் சாராதவழியில் நடப்பவர்களே மெய்ஞ்ஞானத்தை யடைவார் களென்றார். (155)

கலிவிருத்தம்.

அசுவங்கரி தாசேரமொ டாடாமுத லான
வுசிதங்கிளர் மிருகங்களை யுங்குக்குட மாதி
யசையுஞ்சிறை விகிரங்களை யும்மாள்வினை களினன்
கிசையும்படி செய்தேயிரை யீயார்கதி யென்னாம்.

குதிரை, யானை, ஒட்டகம், ஆடு, மாடு முதலிய சிறந்த மிருகங்களையும், அசையுஞ் சிறகுகளோடு கூடிய கோழி முதலிய பறவைகளையும் தங்களுக்காக வேண்டிய காரியங் களில் நன்றாக வுபயோகப்படுத்திக்கொண்டு, வயிறார அவைகளுக்கு இரைகொடாதபாவிகள் கதியாதாகும்? (156)

செய்யாவினை செய்யும்படி செய்வார்கதி யென்னா
மையாநனி யறையாயெனு மணிமாமக னுணரப்
பொய்யாமுனி புகல்வானிரை போடாதவ ரேனோர்
மையாருட னமனார்தரு வறுமைப்பய னுகர்வார்.

செய்ய ஏலாத வேலைகளைச் செய்யும்படி அவைகளைப் பலாத்காரஞ் செய்பவர் கதி யாதாகும்? குருவே! நன்கு நவிலவேண்டுமெனக் கேட்ட விசாரணை செய்யும் அழகு மீக்கொள் சீடனறியும்படி சத்தியந் தவறாத குருவானவர் கூறுவான் றொடங்கினர். அப்படியிரை யிடாதவர்களும், அதிக வேலைவாங்கினவர்களும் கரியதேகமுடைய யமதருமனார் அந்தப் பாவங்கட்கு ஏற்றபடி கொடுக்குந் தரித்திரத்தை யநுபவிப்பார்கள். (157)

கூட்டிற்சில வுயிர்விட்டவை கொள்ளுஞ்சுக மெல்லா
மோட்டற்பரு மேதண்டனை யுறுவார்சுக மங்ங
னாட்டப்படு மாயிற்பிழை யிலையென்று நவின்றான்
கேட்டிட்டவ னன்பாரடி கேளென்று விளித்தே.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பத்த ரியோக ரெல்லாரும் பகர்ந்த பூத தயவுடைய
சித்த முடையர் தாமோசெப் புதிநன் கென்னத் தேசிகனற்
புத்தி யுடையாய் பூததயை பொருந்தி னவர்க்கே யீச்சுவர
பத்தி பொருந்து மதன்மேலே பாச வைராக் கியமுண்டாம்.

சில ஜந்துக்களைக் கூட்டிலடைத்து, அவைகள் சுயேச்சையாயிருந்து அநுபவிக்குஞ் சுகமெல்லாங் கெடுக்கின்ற புத்திஹீனரும் யமதண்டனைக் குள்ளாவர். அங்ஙனமே அவைகள் சுகமாயிருக்குமாறு செய்யப்படுமாயிற் பாவமில்லையென்று கூறினர். இவைகேட்ட சீடன், அன்புள்ள அடிகளே! என்று ஆசிரியரை யழைத்து.— (158)

பத்தர் யோகிகள் முதலிய பெரியர் யாவரும், தாங்கள் கூறிய ஜீவகாருண்யத்துடன் கூடிய சித்தமுடையர் தாமோ? நன்றாக விளக்கவேண்டுமென்ன; தேசிகரானவர், நல்ல புத்தியுடையவனே! பூததயை பொருந்தினோர் யாரோ அவருக்கே

ஈசுவரபத்தியுண்டாகும். அந்த ஈசுவரபத்தி வந்த பின்புதான் பாசவைராக்கிய முண்டாகும். (159)

அந்த வைராக் கியமுற்றா லரிய பிரம ஞானமுறும்
பந்த மறுக்கு மதனாலே பரமுத் தியுறு மெனவோர்ந்த
புந்தி யுடைய வவரந்தப் பூத தயவை யுடையரெனற்
கெந்த விடத்து மையமுண்டோ வெனலுஞ் சீடனிது சொல்வான்.

அந்தப் பாசவைராக்கிய முண்டாயின், அரிய பிரமஞான முண்டாகும். பாசமோசனஞ் செய்யவல்ல அந்தப் பிரமஞானத்தினாற் பரமுத்தி பொருந்து மென்றறிந்த புத்திமான்களாகிய அன்னோர், அந்தத் தயையுடையரென்று கூறற்கு எந்த இடத்துஞ் சந்தேகமுண்டோவென்று கூறியிடலும், சீடன் பின்வருமா றுரைக்கலாயினன். (160)

அறைந்த பத்திக் காதார மாக வுள்ள பூததயை
குறைந்த வழியி னிற்பவர்தாங் குயிற்று மறங்க ளவர்க்கின்ப
நிறைந்த கதியை நல்காவோ நிமல குருவே யோதென்று
பறைந்த சீடன் றனைத்தந்தை பார்த்திவ் வாறு பகர்கின்றான்.

மேலே கூறிய ஈசுவரபத்திக்கு ஆதாரமாகவுள்ள பூததயை குறைவாகவமைந்த மார்க்கங்களி லிருப்போர் செய்யுந் தருமங்கள், அவர்களுக்குப் பூரணானந்த கதியைக் கொடாவோ? பரிசுத்தமான தேசிகரே! கூறவேண்டுமென்று கேட்ட சீடனைக் குருவாவார் நோக்கிப் பின்வருமாறு பகரலாயினர். (161)

கொலையும் புலையுந் தவிராத கோளர் புரிநல் லறங்களெலா
மலையுங் கடலிற் பெருங்காய மாமி லந்தான் கரைத்திடல்போ
னிலையின் றுலையு முயிர்க்குறுதி நேடு பவரு மக்கொடிய
புலையுங் கொலையு நீக்கியறம் புரியா நீர்தா னென்னேயோ.

கொலையையும் (புலாலாகிய) புலையையும் ஒழிக்காத பாதகர் செய்யும் நல்ல தருமங்களெல்லாம், அலைகின்ற

கடலிற் கரைக்கப்பட்ட பெருங்காயமும் புளியும் போல நிலையாமலழியும். தங்களான்மாவுக்குச் சுகத்தைத் தேடு பவரும் அந்த மாபாதகச் செய்கைகளாகிய கொலையையும் புலையையும் நீக்கித் தருமத்தைச் செய்யாத தன்மைதா னென்னை! (162)

பனியா முயிர்த்து ரோகமெனப் பகர்வெங் கொலையும் புலையுமகா
சனியாய் நிற்கு மறங்கெடுக்கச் சைவ னீதா னலனெனவோர்
முனியாய் நிற்கு மிக்கொடிய முரணை யொழியா ரூனுகர
நினையா விலங்கி னுங்கடையா நின்று கழியத் தடையுண்டோ.

துன்பமாம் உயிர்த்துரோகமெனப்படுஞ் கொடிய கொலையும், புலையும் தருமத்தை நாசஞ்செய்யப் பெரிய சனியாய்நிற்கும். "நீ சைவன் அல்லன்" என்று இழித்துக் கூறுமாறு முனிந்துதள்ள ஒரு முனியாயு நிற்கும். இக்கொடுமையாகிய உயிர்த்துரோகத்தை யொழியாதார், மாம்ஸத்தைப் புசிக்க நினையாத (ஆடு, மாடு, ஒட்டகம், கர்த்தபம், குரங்கு முதலிய) மிருகங்களிலுங் கடைப்பட்டவர் களாகி யிருந்து மரணமாக யாதுதடை? ஏதுமில்லை. (163)

புலவே நுகரு நாரைபுல்லுண் பொன்மான் விடக்கூ னுடல் விழையா
நலமே யணுகிக் கதியடைந்த ஞாயந் தெரிந்து மிம்மனுடர்
நிலமே லுயிர்கொன் றுண்கரும நீக்கா நிலையென் னிதைவிடவோர்
பலமே யிலரெப் பற்றொழிவார் பரம தவமென் புரிவாரே.

மாமிசமே யுண்ணும் நாரையானது, மாம்ஸாஹாரத்தை விரும்பாத நலம் பொருந்தியும், புல்லையே தின்னும் அழகுள்ள மான்களானவை, ஊனுண்பார் விரும்புகின்ற புலாலுடம் பெனத் தங்களுடம்பை விரும்பாத நன்மை பொருந்தியு நற்கதியையடைந்த சரிதமெல்லாம் இம்மனிதர்கள் அறிந் திருந்தும் இவ்வுலகிற்பிராணிகளைக் கொன்று தின்னுங் காரியத்தை யொழியாதிருத்தல் என் கருதியோ! இந்த

ஆஹாரத்தை நீக்க ஒரு வல்லமை யற்றவர், அகப்பற்றுப் புறப்பற்றுக்களிலெதனை நீக்கும் வைராக்கிய முடையராவர்! மேலான தவங்களி லெதைத்தான் செய்ய வல்லுநராவர்!

நாரை ஊனுண்ணாமல் நற்கதியடைந்த விவரம்:— மதுரைத் திருவிளையாடலிற் காண்க. மான்கள் நற்கதியடைந்த விவரம்:— குருத்ருஹன் என்னுமொரு வேடன், தான் கொன்றுதின்னத் தக்க மிருகமொன்றுங் காணாமற் பகற்காலமெல்லாங் காட்டிலலைந்து மாலைக் காலமான வுடன் ஒரு தடாகக் கரையிலுள்ள வில்வ விருக்ஷத்திலேறி மிருகங்களின் வரவு பார்த்திருந்தனன். அப்போது அங்ஙன நீரருந்தவந்த பெண்மானொன்றை அவன் கொல்வதற்காக வில்லிலம்பைப் பூட்டினன். அதுகண்ட அம்மான், நீ என்னை ஆஹாரமாகக் கொள்ளற்கு நானியைந்தேன். ஆயினும் எனக்குக் குட்டிகளிருக்கின்றன. அவைகட்குப் பாலருத்தி விட்டு இங்கே வருவேனென்று தக்க நியாயப் பிரமாணங் கூறி அவனிடம் விடைபெற்றுச் சென்றது. அதன்பின், அம்மானின் மூத்த பெண்மானானது அங்கே வந்து அவனம்பிற்கிலக்காயது. அதுவுமவ்வாறே கூறி அவனிடம் விடைபெற்றுச் சென்றது. அதன்பின், அவ்விரண்டு மான்களின் ஆணாகிய பெருத்த கலைமானும் அவனம் பிற்கிலக்காயது. அதுவும் என் குட்டிகளை யென்பிணைகள்பா லொப்புவித்து விட்டு இங்கேவந்து உனக்கிரையாவேனெனத் தக்க பிரமாணங்கூறி அவனிடம் விடைபெற்றுச் சென்றது. பின்பு, அம்மூன்றுஞ் சந்தித்து நிகழ்ந்தவற்றைக் கலந்துபேசித் தங்கள் குட்டிகளைச் சிலமான்களிடம் விடுத்து வேடன் முன்னர் வந்து, "இனி நீ யெங்களை யிரையாக்கிக் கொள்க" என்று கூறி நின்றன. அவ்வேடன், இம்மிருகங்களுக்குள்ள சத்தியமும், ஊனுடல்வெறுப்பும், பரோபகாரமும் எனக்கில்லாதொழிந் தனவே

யென்றுள்கி அவைகளைக் கொல்லாமல், தூயசிந்தையனாய் நிற்கையில், அன்று சிவராத்திரி யாதலாற் கருணைக் கடலாகிய சிவபெருமானார் பிரசன்னராகி "நீ ஒரு நகர்காப்போனாய் வாழ்க" என்றாசீர்வதித்தருளியபடி அவனுமாயினன். அவனே இராமரைப் பூஜித்த குஹன். அந்தமான்களும், அவற்றைப் பின்றொடர்ந்து வந்த குட்டிகளும் அங்ஙனமே மிருகவுருநீங்கித் திவ்ய தேஹம்பெற்று அங்குவந்திறங்கிய தேவ விமானத்தி லேறிச் சுவர்க்கஞ் சேர்ந்தன. இச்சரிதவிரிவை, சைவபுராணத்து ஞானசங்கிதை 74—ம் அத்தியாயத்திற் காண்க.] (164)

ஏறு பிணிக்கு மிழவினுக்கு மேது வான புலாலுடலுக்
கூறி லுணவீ தெனவூனுண் ணுணர்வில் லாதா ரெவ்வரிய
பேறு பெறுவ ருணர்வுடையாய் பேசு நீயே யென்றனனக்
காறில் கருணைக் குருவதன கமல நோக்கி மகனவில்வான்.

நாளுக்குநாள் விருத்தியடையும் வியாதிக்கும், சாக் காட்டுக்குங் காரணமாகவிருக்கும் மாம்ஸதேஹ போஷிப்புக்கு இடையூறில்லாத ஆஹாரம் ஈதென்று ஊனைப் புசிக்கும் அறிவிலிகள் எப்பேற்றைத்தான் பெறுதற்கு அருகராவர்! புத்தியுடையவனே! நீயே கூறுவாயாக வென்றுரைத்தனர். இப்படியுரைத்த அளவற்ற கிருபாநிதி யாகிய ஆசிரியரது தாமரை போன்ற முகத்தை நோக்கிச் சீடன் கூறுவா னாயினன். (165)

ஊனுண் பவர்தன் மம்பலியா தொழியு மென்னிற் பரசமய
ஞான முடையார் பெரியரென ஞாலம் புகழ விருந்தாரென்
றீனமறநாங் கேட்டிடலென் னியம்பு கென்ன மகனேகேண்
ஞான நெறிபுல் லியவுடனந் நலருங்கொன்றூ னுணவியையார்.

புலால் புசிப்போர் செய்யுந் தருமங்கள் பலங்கொடாமல் வீணாகுமென்றுகூறில், புலாலுண்ணும் அன்னிய சமயிகள் ஞானத்தையடைந்து பெரியோரென உலகத்தார் புகழ்ந்து பேச விருந்தனரென்று குறைவற நாம் கேள்விப்பட்டிருத்தற்கு ஞாயமென்னை ? சொல்ல வேண்டுமென்ன; மைந்தனே ! கேள், ஞானாநுஷ்டானத்தை யடைந்தவுடன் அப்பெரியோரும் பிராணிகளைக் கொன்று அவற்றின் ஊனைப் புசிக்கச் சம்மதியார். (166)

அவ்வா றின்றிக் கொன்று நுக ரகமே யுடையர்க் கோர்ஞான
மிவ்வா ருலகிற் காணினுமஃ திழிவில் சாத்து விகமிறையு
மொவ்வா விழுக்கு ஞானமென வுணர லாமே லாயுளதேல்
வெவ்வா தின்றிக் கல்லெறிந்த விரதர்க் குற்ற திறமெனவாம்.

அப்படியின்றிக் கொன்று தின்னும் விருப்பமுடையவர்க்கு ஒரு ஞானமுண்டாயிருக்க இந் நீளுலகிற் காணப்படினும் அதனை, சுத்த சாத்துவிகாமிச மொரு சிறிதும் பொருந்தாத ஈனஞான மென்றுணரலாம். அவ்வாறன்றி உயர்ந்த ஞானமாயிருப்பின், அஃது எவ்வித ஆக்ஷேபனையுமின்றிக் "கல்லெறிவிரதம்" பூண்ட சாக்கியநாயனார்க் குதித்ததை யொத்த ஏகதேசத்தது எனவாகும்.

["இழிவில் சாத்துவிகமிறையும்" எனவே, மாமிசாகாரம் தாமதகுணத்தையே விளைக்குமென்பது போதரும்.] (167)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றருளாசான வின்றனன தன்மே லெழின் மகனென் குருநாதா
கொன் றுணவேண்டா வெனுமருண் முறைகள் கூறிடுமொழுங்
கினுட்சிலவிங்
கொன் றிடவருளாயெனலுமவ்வையனுளமகிழ்ந்திதன் முனமேயுன்
வன்றொடர்வினவற்கருள்விடைகளிலேவந்தனசிலவினுங் கேட்டி.

என்று அருண்மூர்த்தியாகிய ஆசிரியர் கூறினர். அதன்மேல், வனப்பு வாய்ந்த மாணாக்கன், என்குரு நாதரே! "கொன்றுதின்னற்க" என்று கூறுஞ் சீவகாருண்ணிய சாத்திரங்களுரைக்கும் விதிகளிற் சிலவற்றை யிங்ஙனம் பொருந்துமாறு கூறியருளவேண்டுமென்று விண்ணப்பித்தவளவிலே, அவ்வாசிரியரும், நன்றுகடாயினையென மனமகிழ்ந்து, இதற்கு முன்னரே நீ கேட்ட வன்மைசான்ற வினாக்களுக்கு யாங் கூறிய விடைகளில் அத்தகைய விதிகள் சில வந்துள்ளன. (ஆயினும்), இன்னுஞ் சில எடுத்துக்காட்டுதும் கேட்பாயாக,— (168)

ஆவியாமெதற்கும்யாதொருதுன்பீயாதநல்வாழ்வுடையோர்க்கே
தாவிலாவருடான்றரப்படுமென்றுசாற்றினனுயர்சிவனென்னுந்
தேவிகாலோத்தரங்கிளிமொழிவாய்த்திருவுடையுமையவடனக்கா
லோவுமோபாவமிருமையுஞ்சுகமின்றுயிர்க்கொலைஞர்க்கெனுங்காந்தம்.

"உயிரென்பபடு மெதற்கும் எவ்விதத் துன்பமுங் கொடாத நல்ல வாழ்வுடையோர்க்கே கேடில்லாத நமது திருவருட் பிரசாதங் கொடுக்கப்படும்" என்று பரம்பொருளாகிய சிவபெருமானார் கிளிமொழியொத்த இனியமொழி களைத்தருஉந் திருவாயையுடைய ஸ்ரீஉமாதேவியார்க்குக் கூறியருளினரென்று தேவிகாலோத்தரம் ("அளியமர் குழலாய்" என்றற்றொடக்கத்து 56— ஞ் செய்யுள்) கூறும். கந்தபுராணம் (காசிபனுபதேசபடலம் "பல்லுயிர் தன்னையு மாய்த்து" என்றற்றொடக்கத்து 21—ஞ் செய்யுள்) "பல உயிரையுங் கொல்பவர்க்குப் பாவமொழியுமோ! இம்மையினும் மறுமையினும் அவர்களுக்குச் சுகமே கிடைப்பதில்லை" என்று கூறும். (169)

மகிமைசொல்சாண்டிலியநல்வராகம்வழங்கிடுமகிமிசையியம
மகிமிசையென்னுமுயிர்வதைசெய்யாவருட்குணமானதுபொருந்திச்
சுகிர்தமல்கியமநிலைதனினிற்போன்றூயவனெனுஞ்சிவகீதை
விகிர்தமிலாமுன்மநுவருளோடுவிளம்பியவறஞ்சிலவறைதும்.

நல்ல (யோகஞான) மகிமைகளைக் கூறுகின்ற (அதர்வணவேத) சாண்டில்யோபநிஷத் (1—ம் அத்தியாயமும், யஜுர்வேத) வராஹோபநிஷத் (5—ம் அத்தியாயமும்) இயம நிலையில் "அகிமிசை" என்னும் விரதத்தைச் சொல்லும். "அகிமிசையென்னும் உயிர்வதை செய்யாத காருண்ணியத் தன்மையானதைப் பொருந்திப் புண்ணியம் பெருகத்தக்க இயமநிலையி னிற்பவனே சுத்தமானவன்" என்று (பாத்ம புராண) சிவகீதை (பக்தியோக அத்தியாயம்) பகரும். விபரீத மில்லாத ஸ்வாயம்புமநு கருணையோடு கழறிய தருமங்களிற் சிலவற்றை இனிக் கூறுவேம்.

["அஹிம்ஸா" என்னும் வடசொல் "அகிமிசை" என வாயிற்று. அஹிம்ஸா = ஹிம்ஸை செய்யாமை.] (170)

மறைகளையோதல்சுசியுறவிருத்தன்மாசறுசெபதவஞ்செய்த
லிறையருள்படைக்குமுயிர்களைவருத்தாதிருத்தலின்முற்பிறப் புணரோர்
நிறையறிவுண்டாமென்றிடுநான்காநிகழொருகூறதுதானே
பொறையறுகொக்கேபோலருளிலர்க்குப்புன லுநல்கேலெனப் புகலும்.

"வேதாத்தியயனஞ் செய்தல், ஆசாரத்தோடிருத்தல், குற்றமற்ற ஜெபதபங்களைச் செய்தல், பரமேசுவரனது அருட்சத்தியாற் படைக்கப்பட்ட பிராணிகளை ஹிம்ஸியா திருத்தலெனும் இத் தர்மாநுஷ்டானங்களால் முன் ஜன்மங் களை யறிந்துகொள்ளத்தக்க ஒரு பூரண ஞான முண்டாகும்" என்று மநுஸ்ம்ருதியின் நான்காம் அத்தியாயம் (பொதுவிதி 148—ஞ் சுலோகம்) சொல்லும். அவ்வத்தியாயமே (192—ஞ் சுலோகத்தில்) "மீன்றின்ன வேண்டுமென்னுங் கருத்தாலே ஹிம்ஸையிலேயே புத்தியைச் செலுத்திக் கொண்டிருக்கிற கொக்கைப்போலக் காருண்யமில்லா திருக்கும் உயிர்க் கொலைஞர்க்கு நாவறட்சிக் காகப் பருகுந்தண்ணீருங் கொடாதே" என்றுகூறும். (171)

தன்சுகத்தினுக்காமான்முதனல்லசந்துவைவருத்துகின்றவன்றா
னின்சுகத்தினையிம்மையினுமற்றதினுமெய்திலனென
நனியியம்பும்
நன்சுகத்தருமநவின்றிடுமைந்தாங்கூறுபின்னடைதருபிராணி
யின்சுகக்கேடாயிமிசைசெய்யாதானிதமொடுய்கின்றனனென்னும்.

"தனது சுகத்திற்காக, மான் முதலிய நிரபராதிகளாகிய ஜந்துக்களை வருத்தப்படுத்துகின்றவன், தான் அனுபவிக்க வேண்டிய இனியசுகத்தை யிம்மையினும் மறுமையினும் அடையான்" என்று நல்ல சுகஹேதுவாகிய தருமங்களைக் கூறுகின்ற ஐந்தாமத்தியாயம் (45—ஞ் சுலோகம்) நன்றாக வுரைக்கும். மேலும், "சரிக்குஞ் செயலுடைப் பிராணிகளின் சுகக்கேடாக ஹிம்ஸையைச் செய்யாதவனெவனோ அவனே சுகத்தோடு உஜ்ஜீவிப்பவனாவன்" என்று மேலைய அத்தியாயம் (46—ஞ் சுலோகம்) கூறும். (172)

உயிர்வதையாமலூன்வரமாட்டாதுயிர்செகுத்திடுவினையாலே
செயிரறுசுவர்க்கலோகுமெய்தாதலான்முடைசேர்விடக்கொழித்தே
யயில்கவென்றோதுமலகையைப்போலூனருந்துதனீத்தவனிந்த
வெயில்விரியுலகினோயிலனாகவிளங்குவனென்னுமக்கூறே.

அவ்வத்தியாயம் (48 — ஞ் சுலோகம்) "உயிர்வதை செய்யாமல் ஊன் கிடைக்காது. உயிர்வதை செய்யுங் காரியத்தாற் குற்றமற்ற சுவர்க்கபதவியுங் கிட்டாது ஆகையால், துர்க்கந்தமுள்ள மாம்ஸத்தை நீக்கியே புசிப்பாயாக" என்றுரைக்கும். (50 — ஞ் சுலோகம்) "பைசாசத்தைப்போல மாம்ஸத்தைப் புசிக்குங் கெட்டவழக்கத்தை நீக்கினவன், இந்தச் சூரியகிரணம் வீசுமுலகின்கண் நோயில்லா வாழ்வுடைய்னாக விளங்குவன்" என்றுரைக்கும். (173)

செந்துவையிமிசைசெயவிதிப்பவனுஞ்செய்பவனுங்கரவாளா
லந்தநெய்யிறைச்சியறுத்தெடுப்பவனுமதைவிலைசெய்திடுபவனு
நிந்தையின்றதனைவாங்குகின்றவனுநெருப்பினிற்பதம்பணுமவனும்
பந்தியிற்படைக்குமவனுமுண்பவனும்பாதகரென்னுமக்கூறே.

அவ்வத்தியாயம் (51 – ஞ் சுலோகம்) "பிராணியை ஹிம்ஸை செய்யும்படி விதிப்பவனும், விதித்தபடி செய்பவனும், கரத்திற்பிடித்த சுரிகையினால் அக்கொழுப்புடன் கூடிய இறைச்சியை யறுத்தெடுப்பவனும், அதனை விற்பவனும், நிந்தனையின்றி அதனை வாங்குகின்றவனும், நெருப்பில் அதனைப் பாகஞ்செய்பவனும், உண்பவர் பந்தியி லதனைப் படைப்பவனும், அதனை யுண்பவனும் பாதகராவர்" என்றுரைக்கும். (174)

ஊனுணவொழித்தோனுறுபலனெதுவோவதையுயர்பழங்கிழங்கன்ன
மேநுகர்முனியுமடைகிலனெனுமம்மெய்புகல்கூறருளெழிலார்
ஞானபராசரன்சொனமிருதிநலவிலங்கைக்கொலும்வலைஞன்
மீனடுவினைஞன்பறவைகள்வதைப்போன்விளைவணை
நெற்களந்தனிலே.

இரப்பவர்க்கியாதவனெனுமின்னோரேசினிற்சமமுளரென்னுங்
கரப்பறுமோரூர்தனிற்சவங்கிடந்தாற்கனற்றிடுகாறுமவ்வூரி
லுரப்பருள்சோறுநீருமுண்ணொண்ணாவுண்டிடின்மாமிசமுண்ட
நிரப்புறுங்குருதிகுடித்தவொர்தோடமுநேருமென்றோதிடுங்கருடம்.

உண்மை கூறும் அவ்வத்தியாயம் (54—ஞ் சுலோகம்) "ஊனுணவை நீக்கினவன் அடையும் பலனெதுவோ அதை, உயர்ந்த பழங்கள், கிழங்குகள் அன்னமென்பவைகளையே புசிக்கும் முனிவனுமடையான்" என்று புகலும். அருளும் அழகும் வாய்ந்த ஞானியாகிய பராசரமுனிவ ரருளிச்செய்த பராசரஸ்ம்ருதி (ஆசாரகாண்டம் 2—ம் அத்தியாயம்) "நிரபராதி களான மிருகங்களை வலைவைத்துப் பிடித்துக் கொல்பவனும், மச்சங்களை வதைப்பவனும், பறவைகளை வதைப்பவனும், விளைந்த கதிர்கள் சேர்கின்ற நெற்களத்திலே,— (175)

வந்திரப்பவர்க்குக் களப்பிச்சை யிடாதவனுமாகிய இவர்கள் குற்றத்திற் சமானமுடையராவர்" என்று கூறும்.

களவற்ற "ஒரூரிற் பிணங்கிடந்தால் அது தகனஞ் செய்யப்படுமளவும் அவ்வூரில், மனிதர்க்குத் தேஹதிடந்தருஞ் சோறும் நீருமுண்ணப் படுவனவல்ல. அவையற்றை யுண்டக் கால் மாமிசம் புசித்த தோஷம் பொருந்தும். உதிரங்குடித்த தோஷமுஞ் சம்பவிக்கும்" என்று கருடபுராணம் *(23—ம் அத்தியாயம்)* இயம்பும். (176)

உயரறமுப்பத்திரண்டனுள்விலங்குக்குணவிடல்விலை கொடுத்துயிரைத்
தயவொடுகாத்தலெனவிரண்டுரைக்குந்தருமமதோதிடுநூல்க
ணயமுறுதீக்கைபெற்றவன்களைகண்ணாகியநறுஞ்சிவநிந்தை
யுயிரடலாதிவிடுகவென்றோதுமொருபெருஞ்சம்புவினூலே.

ஆதுலர்க்குச் சாலைமுதல் க்ன்னிகாதானம் இறுதியாகக் கூறப்பட்ட முப்பத்திரண்டு உயர்ந்த தருமங்களுள், மிருகங் களுக்கு ஆஹார்ரங்கொடுத்தல், கொல்லக் கொண்டுபோகப்படும் பிராணிகளை விலைகொடுத்து வாங்கிக் கிருபையுடன் காத்தல் என விரண்டு தருமத்தைத் தருமங் கூறுநூல்கள் கூறும். "நன்மையுள்ள சிவதீக்ஷையைப் பெற்றுக்கொண்டவன், ஆதரவாகிய சிவபெருமானை நிந்தித்தலையும், பிராணிகளைக் கொல்லுதன் முதலிய செய்கைகளையும் விடக்கடவன்" என்று சர்வான்மசம் புவினது (சித்தாந்தப் பிரகாசிகையெனும்) ஒருநூல் கூறும். (177)

நோன்பெனல்கொன்றுண்ணாமையென்றோதுநூனமிலௌவை யினூறான்
வான்படர்ஞானப்பட்டினத்தடிகண்மற்றையமாண்பினர்பலரு
மூன்புசியேல்கொல்லேலெனவுரைத்தவுரைபலவென்றறியிதனைத்
தான்பகராநூனூலலபுகலாச்சாமியுஞ்சற்குருவல்லன்.

"நோன்பென்பது கொன்றுதின்னாமை" என்று ஔவையா ரருளிய (கொன்றைவேந்தனெனுங்) குறைவற்ற நீதிநூல்கூறும். சிறப்பின் மேம்பட்ட ஞானத்தையடைந்த பட்டினத்தடிகளும்,

மற்றைப் பெரியோர் பலரும் "புலாலைப் புசியாதை, கொலை செய்யாதை" என்று கூறிய வாக்கியங்கள் பலவுள வென் றறிவாயாக. இக்கொல்லா விரதத்தைக் கூறாதநூல், பெரியோர் பேணு நூலாகமாட்டாது. அவ்விரதத்தை யுபதேசியாத குருவுஞ் சற்குருவாகான்.

[பட்டினத்தடிகள் வாக்கியம்.— "கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு—கல்லாமல்" என்பதனாலும், மற்றைப் பெரியோர்வாக்கியம்.— "நல்ல நினைப்பொழிய நாள்களி லாருயிரைக் — கொல்ல நினைப்பனவுங் குற்றமு மற்றொழியச் — செல்வ வயற் கழனித் தென்திரு வாரூர்புக் — கெல்லை மிதித்தடியே னென்றுகொ லெய்துவதே." என்னுஞ் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கானும், "கொல்லா விரதியர் நேர் நின்ற முக்கட் குருமணியே" என்னுந் தாயுமானாருரையானும், பிறவற்றானும் பெறப்படும்.] (178)

கலிவிருத்தம்.

என்று சொல்லிய வேசில்கண் ணாளன்முன்
னின்ற சீட னிணம்பொசி யூனுகர்
கின்ற வாயர்க்கு நோய்களுங் கிட்டுமோ
வென்று கேட்டன னேசிலி கூறுவான்.

என்று கூறிய நிர்த்தோஷ நேத்ரமுள்ள ஆசிரியரெதிரினின்ற சீடன், நிணம்பொசியும் புலாலைப்புசிக்கும் வாயுடையார்க்கு வியாதிகளுமெய்துமோ? என்று வினவினன். அங்ஙனம், குற்றமற்ற ஆசிரியர் கூறலாயினர். (179)

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கிட்டிடுமே செம்மறியி னூனுண் டான்முன்
கிளராத நோயெல்லா மன்றி நாளு
மொட்டிடுமே செந்நிறமார் கரப்பன் மிக்க
வுயராத குறும்பள்ளை யிறைச்சி யுண்ணி
னட்டமிலா வாதமிகு முருசி யோவு
நவிலரிய திரிதோட கபகோபந்தான்
விட்டகலா தெழுமலச ரோகந் தானே
விஞ்சியனு தினந்துன்ப மீயு மன்னோ.

செம்மறியாட்டினிறைச்சி யுண்டால், முன்னே பெருகாத நோயெல்லாம் வந்து பொருந்தும். அல்லாமலும், தினந்தோறுஞ் செங்கரப்பனெனும் வியாதி சேரும். மிகவும் வளராத குறும்பள்ளைபாட்டிறைச்சி யுண்டாற் குறையாத வாதரோகம் அதிகரிக்கும்: நாவுருசிகுறையும்: கூறற்கருமையாகிய திரிதோஷகபகோபம் விட்டு நீங்காமலுதிக்கும்: அலசரோகமுந் தினந்தோறு மதிகரித்துத் துக்கத்தைக் கொடுக்கும். (180)

கோலிகிளர் குறும்பாட்டி னூனுண் டக்காற்
குறைவிலெறும் பேறுநமைக் கிரந்தி வாத
சாலமிகும் விதைவாயு சனிக்கு மானின்
றசையுண்ணிற் பித்தமிகு நயன காசம்
மேலிடும்வெங் கடமான திறைச்சி யுண்ணின்
மேவிடுமே குடலைவளை நோய்கண் மூரிக்
காலுடைய கவைப்பன்றி விடக்கை யுண்ணிற்
கடிரணம்வல் லிருமலுயர் கபநோய் தோன்றும்.

உரோமங்கள் பிரகாசிக்குங் குறும்பாட்டிறைச்சி புசித்தாற் குறைவில்லாத எறும்புகண் மொய்க்கு நமைக்கிரந்தியும் வாதக்கூட்டங்களும் அதிகரிக்கும்: அண்டவாத முண்டாகும். மானிறைச்சி புசித்தாற் பித்தம் அதிகரிக்கும்: நயனகாசம் விருத்தியாகும். வெய்ய கடமானிறைச்சி புசித்தாற் குடலை வளைத்துப் பிடிக்கும் பிணிகளுண்டாகும். பலத்த

கால்களுள்ள காட்டுப்பன்றியிறைச்சி புசித்தாற் கடிரணமும், இருமலை விருத்திசெய்யுங் கபரோகமு முண்டாகும். (181)

ஊருணனி திரிபன்றி முள்ளம் பன்றி
யூனுண்ணின் வாதபித்த தொந்தந் தோன்றுஞ்
சேருமதி பலவீனம் புண்க ளுண்டாஞ்
சிலேட்டுமமுண் டாநெஞ்சிற் றுயரே சூழுஞ்
சீருயரு மருந்துகளின் குணமெல் லாஞ்சாந்
திடவுருவத் தோடுதிரி தருநன் மாட்டி
லீருதிர விறைச்சியுணின் மறநெஞ் சுண்டா
மினியில்லா நோயனைத்து மெழும்பு மாலோ.

ஊரினுள்ளே மிகவுந் திரிகின்ற ஊர்ப்பன்றியிறைச்சி, முள்ளம்பன்றியிறைச்சி யென்பவற்றை யுண்ணில் வாதபித்த தொந்தரோகமுண்டாகும்: அதிபலஹீனமெய்தும்: புண்களுண் டாகும்: சிலேஷ்ம ரோகமுண்டாகும்: நெஞ்சினோயேயதிகரிக் கும்: நலமிக்க மருந்துகளின் பிரயோஜன மெல்லாங் கெடும். காத்ர தேஹத்துடன் றிரிகின்ற நல்ல மாட்டில் ஈர்த் தெடுக்கு மிரத்தத்தோடு கூடிய இறைச்சி யுண்ணிற் பாபசிந்தை யுண்டாகும்: வாராத பிணியெல்லாம் வரும். (182)

சிறையுடைய கோழியினூ னுண்ணிற் பித்தந்
தேகவிளைப் போடவுட தக்கே டோங்குங்
கறையுடைய கொழுப்பிரண முண்டா நீண்ட
கழுத்தொடுசெல் வான்கோழி யூன்றா னுண்ணின்
மிறையுடைய கரப்பனுறுஞ் சிலேட்டு மந்தான்
விஞ்சிடுநீர் நீந்துகின்ற வாத்தூ னுண்ணி
னறையுடைய வாயுருசிக் கேடுண் டாகு
மரிகிரந்தி ரணங்கோழை யனைத்து மேவும்.

சிறகுகளையுடைய கோழியிறைச்சி யுண்ணிற் பித்தமும், தேகம் தினே தினே மெலிதலும், மருந்துகளின் குணங் கெடுதலும் அதிகப்படும்: களங்கமுற்றுக் கொழுத்திருக்கும் இரணங்களுண்டாகும். நீண்ட கழுத்துடன் நடந்து திரிகின்ற

வான்கோழியிறைச்சி யுண்ணில் வலிமையுள்ள கரப்பனெனு நோயெய்தும். சிலேஷ்மரோகமு மதிகரிக்கும். நீரினீந்துகின்ற வாத்திறைச்சி யுண்ணில், நல்ல நாவுருசிக்கேடு சம்பவிக்கும். அரிகிரந்திரணமும், கோழைகளு மெய்தும். (183)

குருகான தாராவி னூனுண் டக்காற்
குறுஞ்சிரங்கு சிலேட்டுமம்வெங் கடுவ னுண்டா
மிருகாலு நீள்கொக்கி னூனுண் ணிற்கீ
ழெனுமேக முண்டாகுஞ் கருங்கொக் குண்ணி
னொருகாலுங் குறையாநீ ரேற்ற முன்னே
யுதியாத க்ரப்பனெலா முதிக்குந் துன்பந்
தருகாசுப் புண்ணுண்டாங் கோழி முட்டை
தானுண்ணின் வாதபயித் தியங்க டோன்றும்.

விளர்த்த தாராவினூன் உண்டாற் சிறு சிரங்குகள், சிலேஷ்மவியாதி, கொடிய கடுவனெனு நோய் ஆகிய இவைக ளுண்டாகும். நீண்ட இரண்டுகாலுடைய கொக்கினூன் உண்டாற் கீழ்மேகமுண்டாகும். கருங் கொக்கினூன் உண்டால் எக்காலத்துங் குறையாத நீரேற்றமும், முன்னே யுண்டாகாத கரப்பன் வியாதி பேதமனைத்துமுண்டாகும்: துன்பந்தருவ தாய்க் காசளவு பெருகும் புண்களுண்டாகும். கோழி முட்டையுண்டால் வாத பைத்தியங்க்ளுண்டாகும். (184)

பெருத்தவுரு வுடைநாரை யூனுண் ணிற்சீழ்
பெருகுகரப் பன்றோன்று நாணா ளுந்தான்
வருத்துகிற கபமுண்டாம் வாத மோங்கு
மலர்மேகம் வன்கிரந்தி யாவும் விஞ்சும்
பருத்தவுரு வுளகூழைக் கடாவூ னுண்ணிற்
படர்வாத கரப்பனும்வெம் புண்ணுந் தோன்றுந்
திருத்தவுரு வுளசிறகி யுண்ணின் வாத
சிலேட்டுமங்க ளதிகரிக்குந் தினமு மாதோ.

பெருத்த தேகமுடைய நாரைமாமிசம் புசிக்கிற் சீழ்பெருகு கரப்பனுண்டாகும்: நாடோறுந் துன்பஞ் செய்கின்ற கபவியாதி

யுண்டாகும்: வாதமதிகரிக்கும்: மலர்மேகமுங் கொடிய கிரந்தி யனைத்தும் மிகும். பருத்ததேக முள்ள கூழைக்கடாமாமிசம் புசிக்கில், தேகத்திற் பரவும் வாதகரப்பனுங் கொடிய புண்ணு முண்டாகும். திருத்தமான வுருவமுடைச் சிறகிமாமிசம் புசிக்கிற் பிரதிதினமும் வாதமுஞ் சிலேஷ்மமு மதிகரிக்கும். (185)

பூமருவு கின்றமனைப் புறாவை யுண்ணிற்
பொரிகரப்ப னொடுசருமச் சொறியு முண்டா
நேமமுடை யவுடதநற் குணமெல் லாம்போ
நீர்க்காக வூனுண்ணிற் றினவு தோன்றுந்
தாமதமி லாமலரைக் கடுவன் றோன்றுஞ்
சலக்குறவை மீனுண்ணி னரோசி கப்பே
ராமயமல் கிடுமன்றி மலத்தைக் கட்டோ
ரரும்பிணியு மோவாம லெழும்பு மாலோ.

அழகு பொருந்துகின்ற மாடப்புறாவினூன் உண்டாற் பொரிகரப்பனுஞ் சருமச் சொறியு முண்டாகும்: நியமமாகக் கொள்ளப்படு மருந்துகளின் நற்குண மெல்லாங் கெடும். நீர்க்காக்கையினூன் உண்டால், நமையுண்டாகும்: அதி சீக்கிரத்தில் அரைக்கடுவ னென்னும் வியாதியுண்டாகும். நீரில்வாழுங் குறவைமீனூன் உண்டால் அரோசிகரோக மதிகரிக்கும். அன்றியும், மலக்கட் டுண்டாக்குமொரு பெரியநோயு நீங்காமலுதிக்கும்.

[கடுவன் = குரங்கு; அதுபோலப் பற்றும்பிணி கடுவ னெனப்பட்டது.] (186)

நீராரு மிறாலூனை யுண்ணின் வாயு
நிகரின்றி யெழும்புமனன் மந்தந் தோன்றுந்
தீராத தினவுதிக்குங் கெண்டை யுண்ணிற்
றிளைத்திடுமே குன்மமெலா மன்றி முன்னே
சேராம லொழிந்தபிணி யாவுந் தோன்றுந்
திமிர்வாத மோங்கியிடுஞ் சிறிய மூஞ்சி
யாராவி னூனுண்ணிற் சிலேட்டு மச்சூ
ரக்கினிமந் தங்கரப்பன் வாயூற் றுண்டாம்.

நீரிற் சஞ்சரிக்கும் இறாலூனைத் தின்றால் வாயுவெனு நோய் நிகரில்லாமலெழும்பும்: அக்கினிமந்த முண்டாகும்: நீங்காத அரிப்புதிக்கும். கெண்டையூனைத் தின்றாற் குன்மபேத மெல்லாம் பெருகும். அன்றியும், முன்னே தன்னைவிட்டு நீங்கிய நோயனைத்து முண்டாகும்: திமிர்வாத மதிகரிக்கும். சிறியமுஞ்சியுடைய ஆராவினூனைத் தின்றாற் சிலேஷ்மரோகமும் அக்கினிமந்தமுங் கரப்பனும் வாய்நீரூறலு முண்டாகும். (187)

காய்வுற்ற வெங்கச்சற் கருவா டுண்ணிற்
கபபித்த மெழுமுளுவை யுணிற்க ரப்ப
னோய்பற்றும் வாளையெனு மீனூ னைத்தா
னுகரினடல் வாயுவெழுஞ் சேலென் கெண்டை
மாய்வற்ற குடர்வாதக் குத்துண் டாக்கும்
வாதப்ர மேகரணந் தோன்றச் செய்யுந்
தேய்வற்ற கடற்கெளிறு சிலேட்டு மத்தைச்
செயுங்கடுவ னொடுபுண்ணுஞ் செறிய வாக்கும்.

மிகவும் உலர்ந்திருக்குங் கச்சற்கருவாடு தின்றாற் கபபித்த முண்டாகும். உளுவைமீனூன் றின்றாற் கரப்பன் வியாதிபிடிக்கும். வாளைமீன்மாமிசந்தின்றால் வலிய வாயு ரோகமுண்டாகும். சேற்கெண்டை யூனானது (உண்பவர்க்குக்) குடல்வாதக் குத்தலை யுண்டாக்கும்: வாதப்பிரமேகரணத்தை யுண்டு செய்யும். குறைதலில்லாத கடலிற் பிடிக்கப்படுங் கெளிற்றூனானது சிலேஷ்மரோகத்தை யுண்டுசெய்யும்: கடுவன்வியாதியோடு புண்ணு நெருங்குமாறு அவற்றை யுண்டாக்கும். (188)

கொள்ளியெனுங் கருவாடு வனப்பைப் போக்கிக்
கொடுத்திடுமி ரணங்கிரந்தி கரப்ப னாதி
முள்ளுயருந் திரிகைவா தாதிக் கச்சூர்
முழுதுமளித் திடுமடவை மீன்வா தத்தை

யுள்ளபடி தருங்கடுவன் முளைமூ லங்க
ளுயர்பித்த மாந்திரவா தங்க ணல்கும்
வெள்ளமுறை யுல்லமெனு மீனூன் பேதி
விரணமுகை வெங்காணாக் கடியுண் டாக்கும்.

கொள்ளிக்கருவாடானது தேகத்தி னழகை மாற்றி, இரணங் கிரந்தி கரப்பன் முதலிய வியாதிகளைக் கொடுக்கும். முள் உயர்ந்திருக்குந் திரிகைமீனானது வாதாதிக்கநோய் முழுதுந் தரும். மடவைமீனானது வாத ரோகத்தை யுள்ளபடி கொடுக்கும். மேலும், கடுவன் வியாதியையும், முளை மூலங்களையும், அதிபித்த ரோக ஆந்திரவாத ரோகங்களையுந் தரும். நீரில்வாழு கின்ற உல்லமெனுமீன் றசையானது பேதி, இரணக் கூட்டம், கொடிய காணாக்கடியெனும் வியாதி யென்ப வற்றை யுண்டு செய்யும்.

[திரிகை வடிவொத்திருக்கு மீன் "திரிகை" என்னும் பெயர் பெற்றது. இஃதிக்காலத்தில், "திருக்கை" என வழங்கப் படுகின்றது.] (189)

கற்றலையென் மீன்வயிற்று ளிரைதல் காட்டிக்
கழியாத கழிதலெலாங் கழியச் செய்யு
நற்றலையில் கருவெளவான் மீனூன் வாதை
நல்கதிக மூத்திரமுங் கிரந்தி நோயு
முற்றலையச் செய்யுஞ்செங் கரப்ப னல்கு
முருநீண்ட நெய்த்தோலி யெனுமீன் வாத
முற்றலையே செய்துபயித் தியமுண் டாக்கு
முரணான வக்கினிமந் தமுமே செய்யும்.

தலையிற் கல்லையுடைய கற்றலையெனு மீனானது வயிற்றிலிரைதலுண்டாக்கி, முன்னில்லாத பலவகைப் பேதிகளை யுண்டாக்கும். நல்ல தலையில்லாத கருவெளவால் மீன்றசையானது வருத்தந் தருகின்ற வெகு மூத்திரமெனும் வியாதியையுங் கிரந்திரோகத்தையு மடைந்து அலையும்படி

செய்யும். செங்கரப்பன் வியாதியையும் கொடுக்கும். நீண்ட வுருவமுள்ள நெய்த்தோலியெனு மீனானது வாதரோக முதிர்ச்சியைச் செய்து பைத்தியத்தை யுண்டுபண்ணும். வலிதான அக்கினி மந்தத்தையு முண்டாக்கும். (190)

அரவனைய வுருமலங்கென் மீனூன் புண்ணு
மரோசிகமுங் கோழையுநல் லுடம்பின் மேலே
பரவுதவ ளைச் சொறியுங் கடுவ னோயும்
பலித்திடவே செயுங்கூவ மீனூன் மம்மர்
விரவொருநோய் பீலிகநோய் வாத குன்மம்
விளைவிக்கும் விரிமடுவின் மீனூன் வாதை
தரவணவு சிலேட்டுமமும் வயிற்று நோயுந்
தடையறுசுக் கிலப்பிரமே கமுமுண் டாக்கும்.

அரவம்போன்ற வுருவமுள்ள மலங்குமீன்றசை யானது இரணமும், அரோசிகமும், கோழையும், நன்றா்யிருந்த தேஹத்திற் பரவுந் தவளைச் சொறியும், கடுவன் வியாதியும் பலிக்கும்படி செய்யும். கிணற்றுமீன்றசையானது மயக்கங் கலந்த ஒரு விதநோயையும், பீலிக ரோகத்தையும், வாதகுன்மத்தையும் விருத்தியாகுமாறு செய்யும். அகன்ற மடுவிற்சஞ்சரிக்கு மீன்றசையானது வாதையுண்டாக்கப் பொருந்துவதாகிய சிலேஷ்மரோகத்தையும், வயிற்று நோயையும், தடையின்றித் தானே வெளிப்படுஞ் சுக்கிலப் பிரமேக ரோகத்தையு முண்டாக்கும். (191)

கடலிடைவாழ் ஞண்டினதூன் வாத கோபங்
கடுவனெனும் பிணிசருமச் சொறிபல் காலு
மிடர்தரவே யெழுகுருதிக் கிராணி யாதி
யிரும்பிணிக ளீயும்வய னண்டூன் வெம்மை
தொடருமகா பித்தசினந் தனையே தூண்டுஞ்
சோரியிலா நத்தையினூன் மந்தஞ் செய்யும்
படருணர்வோ யேனைய்வூன் களுமிவ் வாறே
பலநோயுஞ் செயுஞ்சொல்லிற் பெருகு மன்றே.

கடலிற் சஞ்சரிக்கு நண்டின்மாமிசம் வாதகோபம், கடுவ னென்னும் வியாதி, சருமச்சொறி, நெடுங்காலமாகத் துக்கத்தை யுண்டாக்கவரும் இரத்தக் கிராணி முதலிய பெரு வியாதிகளைக் கொடுக்கும். வயல்நண்டின் மாமிசம் அதிக வுஷ்ணமுள்ள மஹாபித்த கோபத்தை யுண்டாக்கும். உதிரமற்ற நத்தையின் மாமிசம் மந்தத்தை யுண்டாக்கும். பரவுமுணர்வு டையவனே! மற்ற மாமிசங்களும் இப்படியே பல வியாதி களையு முண்டு பண்ணும். அவ்வற்றை விரித்துக் கூறப்புகில் இவ்வியாசம் அளவுகடந்து பெருகும். (192)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இங்குநா முரைத்த யாவு மேசிறொன் மருத்து வர்க்குஞ்
சங்கையின் றறிந்து ளோர்க்குஞ் சம்மத மாகு மென்று
புங்கவன் புகன்றா னக்காற் புதல்வனு மெழுந்து தந்தாய்
வெங்கொலை புரித லுண்டன் மிகுபவ மெனநன் கோர்ந்தேன்.

இங்ஙனம், நாங் கூறியவெல்லாம், குற்றமற்ற புராதன வைத்தியர்களுக்கும், ஐயமின்றி யநுபவவாயிலாக அறிந்திருப் பவர்களுக்குஞ் சம்மதமானவைகளே யாமென்று ஆசாரியர் கூறினர். அப்பொழுது சீடனானவன், எழுந்து நின்று என் ஆசாரிய மூர்த்தியே! கொடிய கொலைத்தொழிலும், புலாலுண்டலும் பெரும் பாவச் செயல்களாமென்று நன்றாக அறிந்தேன். (193)

இந்தநாள் காறு மிங்கே யிவ்வுயி ரறத்தை யோரா
தெந்தையே பலவு யிர்க்கு மெமனென விருந்தே னினச்
சிந்தையா லூனு முண்டேன் செய்தவ மிழந்தே னிந்த
நிந்தைசேர் பாவம் போக்கு நெறியினி யருள்வா யென்றான்.

என் குருமூர்த்தியே! இந்நாள்வரையும் இப்பூமியில், தாங்கள் கூறிய இந்தச் சீவதருமத்தை யறியாது பல பிராணிகளுக்கும்

இயமன் போலிருந்தேன். அற்பபுத்தியால் மாம்ஸமும் புசித்தேன். செய்துவந்த தவங்களையும் வீணாக்கினேன். தர்மசாஸ்திரங்களாலும் பெரியோராலும் நிந்திக்கப்படும் இவ்விரண்டு பெரும்பாவங்களையும் ஒழிக்குமார்க்கத்தை, இனி, எனக்கு அநுக்கிரகிக்க வேண்டுமென்றனன். (194)

2–வது, மூடர்வாத தும்ஸம்

1. சாஸ்திரமூடன் வாதமும், வித்யாரண்யராகிய விவேகபூரணகுரு மறுப்பும்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றவன் சொலலுஞ் சூழ விருந்தவர் களிலே யெல்லா
மொன்றென விசாரஞ் செய்த வொருவனங் கெழுந்து லோகம்
நன்றிழி வுணருஞ் சீவ னற்பர மூன்றும் பொய்யா
மொன்றெனும் பிரமந் தானே யுளதென வுரைக்கு மேனூல்.

இவ்விதமாகச் சீடன் விண்ணப்பித்திடலும், அங்கே கூடி அவனைச் சூழ்ந்திருந்தவர்க்ளில், பிரமப் பொருளாகிய ஜக ஜீவ பரங்களாகிய அனைத்தும் ஏகபதார்த்தமேயாகும்: அதைத்தவிர இரண்டாவது பொருளில்லையெனுந் தனது விசாரத்திற்றேறிய கோட்பாட்டைக் கொண்டிருந்த சாஸ்திரமூட னெனப்படுவா னொருவன் அவ்விடத்தெழுந்து நின்று, இந்த ஜகம், நன்மை தீமைகளையறியுமறிவுடைய ஜீவன், சர்வ சுபலக்ஷணங்களு மமைந்த பரம் ஆகிய மூன்றும் மித்தையாகும்: ஏகமாகிய பிரமமொன்றே சத்திய மென அத்தியான்மிக நூல்களாகிய உபநிடதங்கள் கூறும். (195)

ஆகலிற் கொலைசெய் வோனு மக்கொலைப் படுவ தொன்று
மாகமண் களினு மில்லை வதையுமின் றூனுண் போர்க
டேகமு முளமு நோவச் செய்வது மிலையென் றான்மேன்
மோகமில் வித்யா ரண்ய முனிவரன் முறுவ லித்து.

சாத்திர மூடா விந்தத் தரணியிற் றோன்றி நல்ல
சீர்த்திகொண் மாந்தர் தம்மைச் செகுத்தருந் தாப்பி ரிக்கா
நாத்திகர் முனருன் ஞான நவிலவ ருனைக்கொல் போது
பூர்த்தியா முண்மை காண்பாய் போவென வவனு மோய்ந்தான்.

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

ஆகையால், கொலை செய்பவனும், அப்படிக் கொலை செய்யப் படுவதாகிய ஒரு பிராணியும் ஆக இரண்டு பதார்த்தம் விண்ணுலகிலும் மண்ணுலகிலுமில்லை. (அதனால்), ஜீவவதை யென்பதுமில்லை. மாமிச முண்பவர்களுடைய சரீரமும் மனமும் வருந்தும்படி தண்டிக்கும் இயமனுளனென்பதும் பொய்யென்று கோஷித்தான். அதற்குமேல், மோஹங்களை யொழித்த வித்யாரண்யரெனும் முனிசிரேஷ்டர் மந்தஹாஸ முடையராய், — (196)

சாஸ்திரமூடா! இந்தப் பூமியில் மற்றை மனிதரைப் போலவே பிறந்து நற்கீர்த்திபெறத்தக்க மனிதரையுங் கொன்று தின்னுங் காப்பிரிகளென்னும் ஆப்பிரிக்காக் கண்டத்து நாஸ்திகர் முன்பாக உனது ஞானத்தை யுரை: அவருன்னை ஆஹார நிமித்தம் வதைக்கும்போது உன் ஞானத்தின் பூரணலாபத்தையுணர்வாய்: அங்கே செல்கவென்று கூற; அந்த மூடனும் அதற்கு மேலொன்று முரைக்க அசக்தனா யிருந்தனன். (197)

2. கற்றமூடன் வாதமும், குரு மறுப்பும்.

ஒய்ந்ததன் பினரே யந்த வொருபரப் பிரம போதம்
வாய்ந்தவான் மாவு முண்டு மரணமி லதனைக் கொல்ல
வேய்ந்தவல் லமையுள் ளோர்யா ரிலையத னாலிவ் வாறே
யாய்ந்தறுத் துணல்கொல் பாவ மாவதின் றெனவே பேசும்.

கற்றமூ டனைப்பார்த் தத்தன் கலியுணர் நீயு நாமுன்
சொற்றவா றாப்பி ரிக்காத் துட்டர்க ளிடஞ்செல் வாயே
லற்றமி லுறுதி தேர்வா யறைந்துகொல் புலிகண் டாலு
மிற்றென வுணர்வாயுன் றீர்வி னை*யென வவனு நின்றான்.

இப்படி அவன் அசக்தனாயிருந்த பின்னர், அனைத்துந் தானேயாகிய அந்த ஏக பரப்பிரமத்தின் ஞானத்தாற் பிரகாசிக்கும் ஜீவான்மா வெனப்படுவது மொன்றுண்டு.

மரணமற்றதாகிய அதனைக் கொல்லப் பொருந்திய வல்லமையுள்ளவர் யாவர்? ஒருவருமில்லையாகலின், இவ்வித ஆராய்ச்சி செய்து பிராணிகளின் தேஹத்தைச் சேதித் துண்ணுதல் கொலைப்பாவ மாவ தில்லையென்று கூறிய, — (198)

கற்றமூடனை அவ்வாசிரியர் நோக்கி, வஞ்சக நாடகமறிந்த நீயும், நாம் முன்னர்க் கூறியபடியே ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள துஷ்டர்களிடத்துப் போவாயாகில், உன் ஞானத்தின் பூரணலாபத்தை யறிவாய்: அடித்துக் கொல்லும் புலியை நீ சந்தித்தாலும் உன்ஞானமுடிவின் நுட்பம் இன்னதென அறிவாயென்று கூற; அந்தமூடனும் பேச் சொழிந்து நின்று விட்டான்.

[*ஐ — நுட்பம்] (199)

3. ஆனந்தமூடன் வாதமும், குரு மறுப்பும்.

மாணவர் நகைத்தார் மேலிவ் வாதரிங் குரைத்த வெல்லாம்
வீணினி துரைப்பல் கேண்மின் விவேகிகாள் புற்பூ டாதி
காணுயிர் களைமா டாதி யுயிர்களுங் கறையா னாதி
சேணுறா வுயிரைக் கோழி முதலிய வுயிருந் தின்ன.

படைத்தவ னோக்க மிந்தப் பழஞ்சைவர் பிதற்று வாயை
யடைத்திட வுளதே யாத லானமக் கினிய வூன்கள்
கிடைத்திட வதைத்த லாலோர் கேடுமெய் தாதா னந்த
முடைத்தசை யாமென் றான்கண் மூடியா னந்தமூடன்.

அவனின்று விட்டமை நோக்கிய மாட்சிமையுடையார் பலரும் (அங்ஙனம்) சிரித்தனர். அதன் மேல், ஆனந்தமூட னானவன், இந்தவாதிகள் கூறியனவெல்லாம் அப்பிரயோஜன மானவைகளே. யானொரு பொருத்தமான நியாயஞ் சொல்வேன், விவேகிகளே! கேட்பீர்களாக. புல், பூண்டு முதலியன வாகக் காணப்படும் (உயிர்களை மாடு) முதலிய (பிராணிகளும், கறையான் முதலிய) உயர்வற்ற பிராணிகளைக் கோழி முதலிய பிராணிகளுந் தின்னும்படி,— (200)

சிருஷ்டித்தவன் உள்ளக் குறிப்பானது, இந்தப் பழஞ்சைவர் தம்மனம் போனபடி பிதற்றும் வாயை அடைக்குங் கபாடமாயுள்ளது. ஆதலால், நமக்குப் பிரியமாகிய இறைச்சிகள் கிடைக்குமாறு கொலை செய்தலால் ஒரு கெடுதியும் வாராது. (அதனால், நாம் நன்றாக மென்று மென்று தின்னும் போது) நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கவுள்ளது முடைமணத்தோடு கூடிய மாமிசமேயாமென்று அவ் வானந்தக்குறி தோன்றக் கண்களை யிமையினாலே மூடிக் கொண்டு சொல்லினன். (201)

அந்தவோர் மூடன் வாயை யடக்கிட நினைத்த வைய
னெந்தையா மீச னோக்க மிற்றென வோர்ந்த நெஞ்சோ
யந்தமா டாதி சேயை யன்னையை யுடன்பி றப்பைச்
சொந்தமாப் புணரு மந்தத் தொழில்புரி வாயோ நீயும்.

அந்தவொரு மூடன்வாயை யடக்கும்படி நினைத்த ஆசிரியர், எம்பரமபிதாவாகிய பரமேசுவரனது திருவுள்ளக் குறிப்பு இத்தன்மையதென வறிந்த நெஞ்சுடையானே! அந்த மாடு முதலிய பிராணிகள், பிள்ளையையும், தாயையும், உடன் பிறப்பையும் உரிமையோடு புணர்ச்சி செய்யும். அச்செய்கை யுஞ் சிருஷ்டித்தவன் ஏற்பாடுதானென்று நீயும் அம்முறை யிலாத் தொழிலைச் செய்வாயோ? (202)

உயர்வறு மிருக மாதி யுயிர்களி னியற்கை காட்டி
யுயர்வுறு மனுடர் கொள்ளு முயர்நலம் விலக்கு நீதா
னுயர்வுள மனுடனோநன் குறையென வவனும் வெள்கி
யுயர்வற விருந்தா னஞ்ஞான் றொருவனங் கெழீஇ நின்று.

பகுத்தறி யறிவு, நாணம், நகை, கண்ணீர்வார அழுத லின்மையால் இழிந்த மிருக முதலியவற்றின் சுபாவத்தைத் திருஷ்டாந்தமாக்க் காட்டி, அவை யுடைமையா லுயர்ந்த மனிதர் அங்கீகரிக்கும் ஆசாரத்தை விலக்குகின்ற நீ அம்

மநுஷ்யனாவையோ? நன்றாக யோசித்துக் கூறுவாயாக வென்று கூற; அந்த மூடனு நாணித் தனது கெம்பீரமடங்கி யிருந்தனன். அப்பொழுது மற்றொருவன் எழுந்து நின்று,— (203)

4. வம்பாராய்ச்சி மூடன் வாதமும், குரு மறுப்பும்.

ஒற்கமின் றெலும்பி றைச்சி யுலைத்துநைத் திழுத்துண் ணற்கே
மற்கதழ் வுடைய மாந்தர் வாயினிற் கடிய கூர்த்த
பற்கணான் கினையு மந்தப் பரன்படைத் தனனென் றானந்
நற்குண வித்யா ரண்ய னவில்வா னவனை நோக்கி.

(மாமிசமுண்ணும் விலங்குகளொப்ப) அஞ்சாமல், எலும்பு இறைச்சிகளைக் கடித்திழுத்து நைத்து உண்பதற்காகவே மிக்க காயபலமுள்ள மனிதர் வாயினிடத்தே கடினமான கூர்மையுள்ள நான்கு பற்களையும் அந்த ஈசுவரன் படைத்தன னென்று கூறினன். அவனைச் சற்குண சம்பன்னரான அந்த வித்யாரண்யரெனுங் குருவானவர் பார்த்து, பின்வருமாறு பகரலாயினர். (204)

மூடருள் வம்பா ராய்ச்சி மூடகே ளெலும்பூ னுண்ணாக்
கோடரக் குரங்கு கட்குங் கூர்த்தவப் பற்க ளுண்டு
பீட்றுு நினது பேச்சொன் றினைநனி பிடிக்க நல்க
வாடிரு கரந்தி ருட்டே யாற்றிடப் படைத்தா னீசன்.

என்பவ னுரைக்கு நேரா மிம்மதி யொழித்தே யப்பல்
புன்புல வெலும்பல் லாத பொருள்வலி சிதைக்க வுற்ற
வன்பொரு ளாகு மென்றோர் மதிகொளா யென்றான் கேட்ட
வன்பறு மூடனுந்தன் னறையொழிந் தயர்ந்தி ருந்தான்.

மூடருள்ளே வீண்வாதிழைக்கும் வம்பாராய்ச்சி மூடனே! கேட்பாயாக. எலும்பிறைச்சிகளைத் தின்னாத கோடரமாகிய குரங்குகட்குங் கூர்மையான அப்பற்களுள்ளன. நீ பேசிய பேச்சு, யாதேனு மொன்றை நன்கு பிடிக்கவுங் கொடுக்கவும் உபயோகப்படுங் கைகளிரண்டையுந் திருட்டுத் தொழிலுக் காகவே ஈசுவரன் படைத்தான், — (205)

என்றுகூறும் அறிவிலான் கூற்றுக்கே நிகராகும். (ஆகையால்), இந்த ஸ்தூலபுத்தியை யொழித்து, அப்பறக்கள் அற்பமாகிய மாமிசமும் எலும்புமல்லாத பொருள்களின் கடினத்தை யொழிக்க வமைந்த கடின கருவிகளாகு மென்று ஒரு நற்புத்தியைக் கொள்வாயாக வென்று கூறினர். கேட்ட ஜீவகாருண்ய மில்லாத அவ்வம்பாராய்ச்சி மூடனும் தன் பேச்சைவிட்டயர்ந்திருந்தான்.

[வம்பாராய்ச்சி யென்பது வீணாராய்ச்சி, நூதன ஆராய்ச்சி யெனப் பொருளாம்.] (206)

5. கல்லாமூடன் வாதமும், குரு மறுப்பும்.

அவனயர்ந் திருந்த நீர்மை யறிந்தகல் லாத மூட
னிவர்முன ரூனுண் டோரா யிருப்பரேன் மிசைந்த் வாயை
யெவருமே காண விப்போ தறுத்தெறிந் தினைய நீதி
நவில்வரே னாமுங் கேட்டு நடக்கலா மெனத்தெ ரித்தான்.

அவன் அயர்ந்திருந்த தன்மையை யறிந்த கல்லாமூட னென்போன், இந்தச் சைவர் முன்னமே ஊனுண்டவரா யிருப்பரேல், உண்ட அசுத்தமுள்ள இவரது வாயை, யாவருங் காண இப்போது இவரறுத் தெறிந்துவிட்டு இத்தகைய நீதியைக் கூறுவராயின், அதனை நாமுங் கேட்டு நடந்து கொள்ளலா மென்று தன் கருத்தைத் தெரிவித்தான். (207)

அன்னவன் றனைப்பா ராவவ் வருட்செல்வ னானோ னீயு
மன்னைபா லருந்து போதுன் னாக்கையிற் படிந்த பவ்வீ
யின்னுமுண் டெனத்தேர்ந் தந்த விடமறுத் தெறிந்து வாபோ
வென்னவே யச்சி ரில்லா னிருந்தலை கவிழ்த்து நின்றான்.

அவ்வாறு கூறியவனை அவ்வருட் செல்வராகிய ஆசிரியர் பார்த்து, நீ உன் றாயினிடத்தில் ஸ்தந்யபானம் பண்ணும் பருவத்தில் உன்னால் மோசனஞ் செய்யப்பட்டு உனது தேகத்தி

லொட்டிக் கொண்ட பவ்வீயெனும் மலம், இன்னும் அதிலிருக்கிறதென்று தீர்மானித்துக்கொண்டு, அந்த இடத்தை யறுத்தெறிந்து விட்டு இங்கேவா: அதற்காக இப்போது போ என்று கூறவே, அந்த இழிதகையனும் தன் பெரிய தலையை நாணத்தாற் கவிழ்த்து நின்றான். (208)

6. தர்க்கமூடன் வாதமும், குரு மறுப்பும்.

பின்னரிவ் வூனுண் ணாத பெரியவ ரூனார் தேகந்
தன்னிலேயிருத்த லாலெப் படிச்சுசி சார்ந்தோ ராவ
ரின்னவர் மார்க்க முந்தா னெப்படி யுயர்வா மென்றான்
றன்னிலை யுணர்ந்தி டாது தருக்கிடுந் தருக்க மூடன்.

அதற்குப்பின், தன் யோக்கியதையைத் தானுணராமே கர்வித்திருக்குந் தர்க்கமூட னென்பவன், ஊனுண்ணா தவராகிய இப்பெரியவர், மாமிசம் பொருந்திய தேகத்திலேயிருப்ப வரன்றோ? ஆதலால், இவரெப்படிச் சுத்தமுடைய ராவர்? அசுத்தமுடை யவராகிய இவர் கூறுமார்க்கமும் எப்படி யுயர்ந்த மார்க்க மாகும்? என்று தர்க்கித்தான். (209)

அவனையு மருளோன் பார்த்துன் னகட்டுழை மலமுண் டாங்குச்
சிவணிநீ யிருத்த லாலுன் றீர்வைபோ னீயு மந்த
நவைமல மாக வேண்டு நனியத னையுமுண் ணென்ன
மவுனமாய் நின்றா னந்த வாதிழைத் தவனு மங்ஙன்.

அவனையுந் தயாளுவாகிய ஆசிரியர் நோக்கி, உன்வயிற்றி னுள் மலமுண்டு. அதனுடன் கூடிய தேகத்திலிருப்பவனே நீ. ஆதலால், நீயுரைத்த நியாயத்தின் படி (அதாவது ஊனாலாகிய தேகசம்பந்தம் நமக்கிருத்தலால் நாமும் ஊனே ஆதலால் ஊனுண்ணலாமென் றாமாறு) நீயும் அந்தக் குற்றமுடைய மலமேயாக வேண்டும். ஆகவே, அவ்வித மலத்தையு நீ நன்றாகவுண்ணென்று கூற; வர்தித்த அந்த மூடனும் அங்ஙனம் மௌனமாய் நின்றனன். (210)

7. குதர்க்கமூடன் வாதமும், குரு மறுப்பும்.

ஊனினை விலக்கு நீயி ருணுந்ததி மதித நெய்பா
லூனிலை கொல்லோ வென்றாண் டுரைத்தனன் குதர்க்க மூடன்
வானிறை வுணர்வோ னுன்றன் வாயினி லூறு நீரைத்
தேனிது வெனவுட்கொள்வாய் செம்புனல் கொளமாட்டாயால்.

குதர்க்கமூட னென்பவன், ஊனைநீக்கி யுண்ணு நீங்கள் உட்கொள்ளுந் தயிர், மோர், நெய், பால் ஆகிய இவை ஊனல்லவோ? என்று அங்ஙனங் கூறினன். மேலாகிய ஆசிரியர் – விவேகபூரணனார், உன் வாயி லூறுகின்ற நன்னீரைத் தேன் போலும் மதுரமான திதுவெனப் பருகுவாய். அவ்வாயிற்றானே (யாதொரு புண்ணின்வழிப்) பெருகும் இரத்தத்தை அப்படிப் பருகமாட்டாய். (211)

அருந்துமந் நீர ருந்தா தகற்று செம் புனலாங் கொல்லோ
மருந்தென நீதா னுண்ணு மறியினூ னதன்வ யிற்றுள்
ளிருந்திடு மலமாங் கொல்லோ வியம்புதி யென்வன் னோனும்
பருந்துதன் கூட்டிற் சேரும் பண்பென வடங்கி னானால்

(ஆகையால்), உட்கொள்ளும் அந்த நன்னீர் உட்கொள்ளாது விலக்கப்படும் இரத்தமாமோ? இது தேவாமிர்தமே யென்று நீ தின்னும் ஆட்டிறைச்சிதான் அவ்வாட்டின் வயிற்றினுள்ளி ருக்கும் மலமாமோ? கூறுகவென்ன; அந்த மூடனும், பறந்து திரிந்த பருந்து தன் கூட்டிலொடுங்குந் தன்மை போலப் பேசாதொடுங்கினன்.

[இங்ஙனம், தயிர் முதலிய பதார்த்தங்கள் ஊனாகமாட்டா வெனல் சாதிக்கப்பட்டது. இவ்வாறு சாதிக்கப்பட்ட பதார்த் தங்களை யுண்ணலாமென்று ஆசிரியர் கூறுதலால், இவை களை, ஊன் விலக்கிக் காய்க்கறி முதலிய சுத்த பதார்த்தங் கொள்ள முயல்வோர் சரீரஞ் சூடுண்ணாது குளிர்ந்திருக்கு நிமித்தம் உண்ணவே வேண்டுமென்க. "நெய்யில்லா வுண்டி பாழ்" என்றதும் அதுவென்க.] (212)

8. பிரமாதமூடன் வாதமும், குரு மறுப்பும்.

மேற்பிர மாத மூடன் வெய்தென வெழுந்து நின்றிவ்
வேற்பர னடியர் தீர்வை மேனெறி யாகி னாலும்
பாற்பரு வத்தவ் வாறு பழக்கிடிற் பொருந்து மிந்த
மேற்பரு வத்தே செய்யின் வெம்பிணி யுண்டா மென்றான்.

அதற்குப்பின், பிரமாதமூட னென்போன் விரைவாக வெழுந்து நின்று, இந்த வேலாயுதக் கடவுளினடியர் கூறுஞ் சித்தாந்தம் உயர்ந்த மார்க்கமாயினும், முலைப்பா லருந்தும் பருவந்தொட்டு அவ்வாறு பழக்கிடின் அம் மார்க்கம் யாருக்கும் அநுகூலமாகும். எனக்குள்ள இந்த முதிர்வயதிற் பழக்கினாற் கொடிய நோயுண்டாகு மென்றனன். (பிரமாதம் = அசட்டை.) (213)

நல்லழ குடைய பெண்ணை நறுமணத் தீந்து பின்னர்ப்
புல்லுதி யிவளை யென்னிற் புகலதின் முலையுண் போதே
யில்லிடை யெனைப்ப ழக்கி யிருந்திடிற் பொருந்து மிந்நாட்
புல்லினோ யுண்டா மென்று புகலுமா னவனு முண்டோ.

கட்டழகுடைய ஒரு பெண்ணை முன்னர் நல்ல விவாக முன்னிலையிற்கொடுத்து, பின்னர் நீ யிவளைக் கூடியிரு வென்னில், சொல்லப்பட்ட அவ்விஷயத்தில், தாய்ப்பாலருந் தும் பருவத்திலேயே என்னைப் பழக்கியிருந்தால் அது பொருந்தும்; இந்தக் காளைப் பருவத்தில் அது செய்யப்படின் நோயுண்டாகு மென்று கூறும் ஆண்மகனு முளனோ? (214)

9. இழிபலிமூடன் வாதமும், குரு மறுப்பும்.

அறைகெனு மறிஞன் முன்னே யப்பிர மாத மூடன்
பறைமொழி யிழந்தி ருந்தான் பக்கலி லிருந்த மற்றோர்
கறையின னெழுந்து நின்று கருணையி னிவருக் கேற்ற
துறையினை யிவர்சொல் கின்றார் தொன்மையெங் குலதே விற்கே.

இடுபலி யிட்டூ னுண்ணா திருப்பினஃ தலைக்கு மென்றா
னடுவுள னவனை நோக்கி நல்லருண் மார்க்கம் பேணு
நெடுமதி யனுக்கோர் கேடு நினைக்குமோ வதுவும் வேறா
மடுதொழி லாள னைத்தா னலைக்குமற் றொன்று கேட்டி.

கூறுக என்று கூறிய விவேகபூரணாசாரியர் முன்னர், அந்தப் பிரமாத மூடனானவன் ஒன்றுங் கூற வாயின்றி யிருந்தனன். அவன் பக்கத்திலிருந்த மற்றொரு பாவியெழுந்து நின்று, இவருக்குள்ள ஜீவகாருண்யத்தினாலே இவருக்கு உசிதமாகத் தோன்றும் மார்க்க மொன்றனை யிவர் கூறுகின்றனர். புராதனமான எங்கள் குலதேவதைக்கு,— (215)

வழக்கமாகக் கொடுக்கும் பலி கொடுத்து, அந்தப் பலியாகிய பிராணியின் மாமிசத்தை நாமுண்ணாவிடின், அந்தத் தேவதையானது எம்மைக் கஷ்டப்படுத்து மென்றா்ன். அது செவிக்கொண்ட நடுநிலையுள்ள ஆசிரியர் அவனைப் பார்த்து, பெரியோரால் நன்கு மதிக்கப்பட்ட ஜீவகாருண்ய வொழுக்கத்தை யநுஷ்டிக்கும் விசேஷ புத்திமான்களுக்கு அக்குல தேவதையும் யாதொரு கேடு புரிய நினைக்குமோ? நினையாது. தன் குலதேவதைக் கென்பதின்றித் தானுண்ணற் கெனக் கொல்கின்றவ னெவனோ அவனைத்தான் அத்தேவதை கஷ்டப்படுத்தும். வேறொன்று கூறுதுங் கேட்பாயாக. (216)

பெரும்பலி விரும்புன் றேவுன் பிள்ளையில் லவளை வெட்டித்
தரும்படி சொலிற்செய் வாயோ சாற்றிழி பலிமூ டாவென்
னரும்பறை முழக்கி னானன் னவனுமுள் ளயர்ந்தி ருந்தா
னிரும்பக வழக்க மூட னெழுந்தன னிவ்வா றோத.

பெரிய பலியை விரும்பும் உன்குல தேவதையானது, உன் மக்களையாயினு மனைவியையாயினும் வெட்டிப் பலியிடும் படி கேட்கில், நீ அப்படிச் செய்வையோ? இழிபலிமூடனே! கூறுவாயாக வென்னுந் தம்முடைய உறுதி வாக்கியத்தை

முழங்கும்படி செய்தனர். அந்த மூடனும் உற்சாகமின்றி யிருந்தனன். (பின்பு), இரும்பு போன்ற கடின சித்தமுள்ள வழக்கமூடன், பின்வருமாறு கூற வெழுந்தனன்.

["பிள்ளை யில்லவளை" எனவே, பிறவுயிர்களைப் பிள்ளைகட்கும், பிரியமுள்ளவர்கட்கும் நேராக நினைக்க வேண்டுமென்பதும் போதரும்.] (217)

10. வழக்கமூடன் வாதமும், குரு மறுப்பும்.

11. துணைமூடன் வாதமும், குரு மறுப்பும்.

எங்கண்முன் னவரூ னுண்ட வழக்கமே யெனக்கு மாதல்
பங்கமின் னெறியா மென்று பகர்தலும் வித்யா ரண்ய
புங்கவ னவனை நோக்கிப் பொறி யிழந் தேயுன் முன்னோர்
துங்கமின் மலமே நாளுஞ் சுமந்தறு காசு பெற்றே.

உய்ந்ததுண் டெனிலிந் நாணீ யும்மதை யேசெய் வாயோ
மைந்தனே யெனவன் னோனும் வாய்திறந் திலன்பின் னெஞ்சு
நைந்தெழு துணைமூ டன்றா னங்குடி யார்க ளூனுண்
மைந்தரா காரே னானு மறுப்பலவ் வூனை யென்றான்.

என்னலும் வித்யா ரண்ய னேசு ளோய் வழக்க மூடன்
பின்னவ னாகு நீயப் பிழையற்கோ தியதைத் தானே
யுன்னகத் துணர்தி யென்றா னவனுமுள் ளுடைந்தி டைந்தான்
பின்னரங் கிருந்த குஞ்சிப் பிடர்விதி வாத மூடன்.

எங்கள் முன்னோர் மாமிசம் புசித்து வந்தனர்: அவ்வழக்கமே யெனக்குமாதல் குற்றமில்லாத மார்க்கமாகு மென்று கூறியவுடன், வித்யாரண்யரெனும் ஆசிரியர், அந்த மூடனைப் பார்த்து, உன் முன்னோர் அறிவிழந்து பிரதிதினமும் துர்க்கந்த மலத்தையே சுமந்து தினமொன்றற்குக் கேவலம் ஆறு செம்புக்காசு கூலி பெற்று,– (218)

ஜீவனஞ் செய்து வந்த வழக்கமுளதாயின், இப்போது நாகரிக முடையவனா யிருக்கின்ற நீயும் அந்தந் தொழிலையே செய்வாயோ பிள்ளாய்! என்ன; அந்த மூடனும் அதன்மேல் வாய்திறவா திருந்தனன். அதன் பின்னர், இவ்வாத தும்ஸங் களால் மனம்புண்ணாகி (நாம் இது சொல்லிப் பார்ப்போ மென்னுங் கருத்தால்) அங்ஙனமெழுந்த துணைமூடனானவன், நம்முடைய குடியிலுள்ளார் புலால் புசியாதவராவரேல், நானும் அப்புலாலை நீக்குவே னென்றனன். (219)

இவ்வாறு துணைமூடன் கூறலும், ஆசிரியர் — வித்யா ரண்யனார், பாவியே! வழக்க மூடனுக்குத் தம்பியாகு நீ அந்தப் பாவிக்குக் கூறிய நியாயத்தையே எழுச்சியுள்ள மனத்தினு ணர்ந்து கொள்வாயாக வென்றனர். அவனும் ஊக்கமிழந்து விலகினன். பின்பு, அங்கிருந்த, பிடரியிற் றொங்குங் குடுமியுள்ள விதிவாதமூடனென்பவன்,— (220)

12. விதிவாதமூடன் வாதமும், குரு மறுப்பும்.

கதுமென வெழீஇ நின்றிக் கடுஞ்சைவர் பலவா றாய்நன்
மதியரை யேய்க்கின் றாரிம் மண்ணினி லவர வர்க்காம்
விதிவழி நடக்கு மெல்லாம் வீணிவ ருரைக ளென்றான்
பதியருட் குருவன் னோனைப் பார்த்திது பகருற் றானால்.

விரைவாக வெழுந்து நின்று, இந்தக் கடுஞ்சைவர் பலவகையிலும், நல்ல புத்திமான்களா யெனக்கு முன்னெழுந்து பேசியவர்களை யெல்லாம் ஏய்க்கின்றனர். இப் பூவுலகில் அவரவர்க் கேற்பட்ட விதிப்படி எல்லா வியவகாரங்களு நடக்கும். ஆதலின், இச்சைவர் கூறிய வனைத்தும் அப்பிர யோஜனமேயா மென்றான். அது கேட்ட பதிப்பொருளாகிய சிவபரஞ்சுடரினருளைப் பெற்ற ஆசிரியரானவர், அவனை நோக்கிப் பின்வருமாறு கூறத்தொடங்கினர். (221)

சிவஞான தேசிகம்.

உன்றனை விடாது பற்றி யுனதுகண் களைக்க லக்க
வின்றொரு வனையிங் கேவு கின்றன மிதுவு மந்தத்
தொன்றெனும் விதியென்றேசும் மாவிருந் திடநீ வேண்டு
மென்றன னவனும் வெள்குற் றிடைந்தன னகைத்தார் பல்லோர்.

(நீ ஓடினும்) உன்னை விடாமற் பிடித்துக் கொண்டு உன்னுடய கண்களைக் கலக்கிக் கெடுப்பதற்கு இங்கொரு வனை யிப்பொழுதே ஏவுகின்றனம். (அவ்வித காரியத்தை அவன் செய்கையில்) இதுவும், அந்த வூழெனும் விதியே யென்று (சித்த சமாதானத்தோடு) அவனை மீறாமலும் அவனுக்கொரு தீங்கு செய்யாமலும் அசைவற நீ யிருக்க வேண்டுமென்று கூறினர். அது கேட்ட அவனும் (நமதுபேச்சு நமக்கே கேடு விளைக்கின்றதெனுங் கருத்தால்) வெட்கி விலகினன். அது கண்டு அங்கிருந்த பலரும் நகைத்தனர். (222)

உற்றபாவமொழிக்குமா றுணர்த்தல்.

அறுசீர்க்கழிநெடில்டியாசியரியவிருத்தம்; சந்தம் வேறு.

இப்படி மூடர்கள் கத்திய யர்ந்தபி னிகழ்வுத ணந்தகுரு
துப்புறு மாணவ கன்முக நாடுபு சுகுணமு ளோயினிநீ
யெப்படி யுஞ்சுக பக்குவ னாயினை யெனமெ னிற்றனது
தப்பைநி னைந்துப யந்திடு கின்றவொர் தருமம்வி ளைந்தமையின்.

இவ்விதம், மூடர் பன்னிருவருங் கோஷித்து ஓய்ந் ததற்பின், அவர்களைப் பரிஹசிப்பதை விட்ட பரமகுருவானவர், சமர்த்தனாகிய சீடன் முகத்தை நோக்கி நற் குணமுள்ளோனே! இனி, நீ எப்படியாயினுஞ் சுகம் பெறும் பக்குவத்தை யடைந்தனை, எக்காரணத்தாலென்னில், "தன் குற்றத்தை நினைந்து அதனா லுண்டாகுந் துன்புக்கு அஞ்சியிருப்பதாகிய சற்சீட விலக்கணம் நின்னிடத் துண்டான தன்மையால்."

("தனது தப்பை நினைந்து பயந்திடுகின்றவோர் தருமம் விளைந்தமையின்" என்றதிலுள்ள தருமமானது மநுஸ்ம்ருதி 11—ம் அத்தியாயத்து 228—ஞ் சுலோகம் "பாவஞ்செய்தவன் தான் செய்த பாவத்தை எப்படி யெப்படிப் பலரிடத்துஞ் சொல் கின்றனனோ அவன், அப்படி யப்படியே பாம்பு தோலினின்று நீங்குவது போலப் பாவத்தினின்று நீங்குகின்றனன்." என்றும், 229—ஞ் சுலோகம் "பாவஞ் செய்தவனது மனம், எப்படி அந்தப் பாவத்தை (நிந்தித்துக் கொண்டு பச்சாத்தாபப் படுமோ அப்படியே) அந்தப் பாவமும் அவனை விட்டு நீங்கும்." என்றும் அருத்தமாமாற்றானும் பெறுதும்.) (223)

பாவமெ னாநினை வோரிட மேபல பவமுறு மென்றுயர் நூல்
யாவுந வின்றிடு மென்பவர் சொற்களை யமனென வேநினைதி
சீவனி னைப்பினி ழைப்பது மாசறு சிவனது செயலாகா
தாவியு ருக்களை யேனுக ரேலினி யருள்விர தம்பிடியே.

"இது பாவமென்று நினைப்போ ரிடத்திற்றான் பல பாவங்களுஞ் சேரும் (அப்படி நினையாது மனம்போன வண்ணம் எவ்வித காரியஞ் செய்யினும் பாவமே அணுகாது) என்று மேலான சாஸ்திரமெல்லா முறையிடுகின்றன" என்பார் வார்த்தைகளை இயமனென்றே நினைப்பாயாக. ஜீவபோதத் துடன் செய்யப்படும் ஜீவச்செயல் அனாதிமல முக்தனாகிய சிவன்செயலாகாது. இனி, பிராணிகளைக் கொல்லாதிருப்பா யாக. அவற்றின் ஊனை யுண்ணாதிருப்பாயாக. இந்த அஹிம்ஸா விரத வழி யுண்டாகுந் திருவருட்டபத்தை யநுஷ்டிப் பாயாக. (224)

சிவஞான தேசிகம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்; சந்தம்வேறு.

இந்நயத்த வருணூலைப் பலகாலும் படித்துரைக்கு மியல்பி
னாலுந்
தந்நலத்துக்கெனவூனுண்பவரையதை விடப்புரியொர்
தருமத்தாலும்
பொன்னையளித் துயிர்காத்தல் புனிதகங்கை யாதிபடி புரிவி னாலு
முன்னிழைத்த கொலைமறமு மூன்புசித்த தலைமறமு முடுகி யோடும்.

உயிர்க்கு உறுதிப்பயனைப் பயக்கும் இந்தச் சீவயா தனாவியாசத்தைப் பலகாலுந் தானும் படித்துப் பிறர்க்கும் போதிக்குந் தன்மையினாலும், சுய நன்மைக்கென வூனருந்துபவரை அவ்வருந்தலை விட்டொழிக்கும்படி செய்யுஞ் சமானமற்ற தருமத்தினாலும், விலைகொடுத் துயிர்காத்தல், கங்கை முதலாய புண்ணிய நதிகளில் ஸ்நானஞ் செய்தலாகிய அன்பினாலும், முதலிற் செய்த கொலைப் பாவமும், அக்கொலைக்குக் காரணமாய்ப் பின்பு ஊன்புசித்த பிரதானபாவமும் விரைந்தோடும்.

[காசிகாண்டம். –

ஆதி யுகத்தில் யோகத்தான் முத்தி யடையு மதன்பின்ன
ரோது முக்த்தி லருந்தவத்தான் முத்தி யுளதா மோங்கரிய
சோதி ஞானத் தான்முத்தி மூன்றா முகத்திற் றுன்னுமுயிர்
காத லோடுங் கலியுகத்திற் கங்கை படியின் வீடடையும்."

என்றியம்புமாறு ஜீவான்மாவானது, கிருதயுகத்தில் யோகத்தி னாலும், திரேதாயுகத்திற் றவத்தினாலும், துவாபரயுகத்தில் ஞர்னத்தினாலும், கலியுகத்திற் கங்கா ஸ்நானத்தினாலுஞ் சிவாதிக்ய மோக்ஷம் அடையத் தக்கதாகலின், இக்கலியுக நோக்கி, "புனிதகங்கை யாதிபடி புரிவினாலும்" என்றனர் ஆசிரியர். "ஒருவன், அந்தக் கங்கா நதியில் மூழ்கற் கேக உறுதியாய் நினைத்தவுடன் பாவ மெல்லாம் அவனைவிட்டு

நீங்கி, இனி எங்கே செல்வோமென நினைக்கும்." என்னும் அருத்தத்தையுந் தரத்தக்க,

"கடவுட் கங்கை நதிப்படிவான் செல்ல வொருவன் கருதுமுன
மிடர்கூர் பாவ மவனை யொழிந் தியாண்டுச் செல்வோ மெனக்கருதும்
விடய மதனின் மனம்போகா தடக்கி ஞான வெறுவெளியி
லடையு மவருங் காசிநக ரடைவார் பெறும்பே றடைவாரால்."

என்னுஞ் செய்யுளை, அக்காசிகாண்டந் தருமாற்றாற் புண்ணியநதி பலவற்றுள்ளுஞ் சிறந்து விளங்கும் அக்கங்கையைப் "புனிதகங்கை" என்று முற்பட அங்ஙனம் விதந்து "முன்னிழைத்த கொலைமறமு மூன்புசித்த தலைமறமு முடுகியோடும்" என்று கூறியருளின ரென்க.] (225)

கலிவிருத்தம்.

முத்தியை யீயு முதற்பொரு ளேநற்
புத்தியி லாது புலைத்தொழில் செய்தே
னத்துகள் யாவு மறுத்தரு ளென்னும்
பத்தியு நீநனி பண்ணுதல் வேண்டும்.

மோக்ஷத்தைக் கொடுத்தருளும் பதிப்பொருளாகிய முதற்பொருளே! நல்லறிவின்மையாற் புலையர் செய்யுங் கொலையையும் புலையையுஞ் செய்து வந்தேன், அவற்றாலுண்டாகும் பாவமனைத்தையும் நாசஞ் செய்தருள வேண்டுமென்னும் பிரார்த்தனையுடன் மன மொழி மெய்களாற் சருவேசுரனிடத்துப் பக்தியையும் விசேஷமாகச் செய்துவரல் வேண்டும். (226)

அருளற முள்ளவ ரைக்குக னடிசேர்
திருவுள முள்ளவ ரைத்ரி சியருட்
குருபர சங்கர குண்டல குமர
மருளறு வென்றுரை யென்றனன் மகிழ்வால்.

ஜீவகாருண்ய வொழுக்கமாகிய தர்மாநுஷ்டானத்தை யுடையாரையும், சர்வாத்மாக்களின் இருதய குஹையின் கண்ணே வசிக்குங் காரணத்தாற் குஹன் என்னுமொரு திருநாமத்தைக் கொண்ட ஸ்ரீசுப்பிரமணியக்கடவுளுடைய ஸ்ரீபாதார விந்தங்களை ஆச்சிரயிக்குந் திருவுள முடையாரையுந் தரிசிப்பாயாக. உலக முய்ய வேண்டுமென் னுங் காருண்ய மேலீட்டினால் ஞானாசாரியராக வெழுந்தருளி னோர்க்குள் அதியுத்கிருஷ்ட மானவனே! சதுர்த்த சத்தி நிபாதர்க்கு அனாதியாகிய மூலாஞ்ஞானத்தை யொழித்துக் காஷ்டாக்கினிபோலக் கலந்திருக்குஞ் சிவத்துவாபிவியக்தி யென்னுஞ் சமானரஹிதமாகிய சற்காரியத்தைச் செய்தருள் பவனே! (இரு செவியிலுஞ் சோம சூரியர்களுக்குச் சமானமான தேஜஸோடு கூடிய) குண்டலங்களை யணிந்தவனே! பரமமாதாவாகியும் பரம பிதாவாகியு மிருப்பதன்றிக் குமார ரூபமாகியு மிருப்பன் அந்தப்பரமனென் றறிந்து உலகம் உஜ்ஜீவிக்கும்படி குமரரூபமுங் கொண்டிருக்குங் குமாரக்கடவுளே! நீ யென்னுட் கலந்திருக்குந் தன்மை யையும், அப்படிக் கலந்திருந்து அடியேனுக்குச் செய்து வந்த பரமோபகாரங் களையும் அறியுந்திறஞ் சற்றேனு மின்றி அபலனா யிருக்கின்ற வென்னை அறியவொட்டாது மறைத்துவைத்த மூலாஞ்ஞான ஆணவமலத்தை; ஞானமாகிய வாளையெனக்கருளி, அது கொண்டு அறுத் தெரியும்படி நீ யநுக்கிரகஞ்செய்ய வேண்டும் என்று பிரார்த்திப்பாயாக வென்றுசித்த சந்துஷ்டியுடன் ஆஜ்ஞாபித்தனர். (227)

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

சீடன்வழிபாடு முதலியன.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இப்படி யாசான் சொற்ற யாவையுஞ் சீடன் கேட்டுத்
துப்புடை யருளின் மார்க்கஞ் சொல்லிய குரவர்மீளீ
யப்புட னலர்கள் கொண்டுன் னடியருச் சிப்போர் கட்கு
மிப்படி வணங்கு வேனென் றிறையடி வீழ்ந்தெ ழுந்தான்.

இவ்வாறாக ஆசிரியரருளிச் செய்த அனைத்தையுஞ் சீடன் கேட்டு, ஆத்மலாபமாகிய பெரும்பயனைத்தரும் ஜீவகாருண்ய மார்க்கத்தை அநுக்கிரகித்த ஆசிரியர்களுக்குள் சிம்ஹம் ஒத்தவரே! சுத்தஜலம், குற்றமற்ற புஷ்பங்கள் (இன்னுமுள்ள பூஜாத்திரவியங்கள்) உடன் உம்முடைய பாதங்களை யருச்சிப் போர் யாரோ அவர்களுக்கும் இப்படியே நமஸ்காரஞ் செய்வேனென்று ஆசிரியருடைய பாதங்களிலே தண்டா காரமாக வீழ்ந் தெழுந்தனன். (228)

மற்றவை வினவ நாளை வருதியென் றினிய வார்த்தை
சொற்றிட வேண்டு நீயுன் றுவரூறு வாயா லென்றான்
பற்றுடை யவனைப் பார்த்தப் பண்ணவ னவ்வாறோதி
முற்றருள் குருகு கேசன் முழுதுநன் கருள்க வென்றான்.

(பின்பு), மற்ற விஷயங்களையுங் கேட்டறிய நாளை வரக்கடவா யென்று தங்கள் வாயால் மதுரமொழியான கட்டளையை அருளிச் செய்ய வேண்டுமென்றனன். குருபக்தியுள்ள அந்தச் சற்சீடனை அந்தத் தெய்வ மொத்த ஆசிரியரும் பார்த்தருளி அப்படியே ஆஜ்ஞாபித்து, "மோக்ஷத்தை யில்லை யெனாதளிக்கும் வள்ளற்றன்மை யினராய்ப் பரமகுருவாயிருக்குங் குஹேசனானவர் சகல சம்பத்தையும் பிரசாதிப்பாராக" என்றாசீர்வதித்தனர். (229)

சிவஞான தேசிகம்.

வாழ்த்து.

பன்னிரு தடந்தோ ளெந்தை பாதமென் கமலம் வாழ்க
தென்னவிர் *திருவ தேவ் சேனையங் குறமின் வாழ்க
மின்னயி னவிரம் வாழ்க வியனரு ணகிரி வாழ்க
பன்னருட் குரவர் வாழ்க பரிவுடைச் சீடர் வாழ்க.

எல்லாத் தேவர்களுங் கொடுக்கும் பேறுகளைவிட, விசேஷமாகக் கொடுக்கும் உதார முடையாரென்பதற்கு அறிகுறியாகப் பன்னிரண்டு விசாலமான கரங்களுள்ள ஸ்ரீ ஷண்முகப் பெருமானாகிய என் பரமபிதாவின் பாதசரோருகங்கள் வாழக்கடவன. அழகுக்கழகு செய்யுந் தன்மையவாகிக் கண்டோருள்ளத்தைக்கவரு மிலக்ஷணங்கள னைத்து மமைந்த ஸ்ரீ தேவஸேனையாரும், குறவர்குல மீடேற வேண்டுமென்னுங் கிருபாவிசேஷத்தால் அக்குலமடந் தையாக அழகெலாம் பிறங்க வவதரித்த ஸ்ரீ வல்லிதேவியாரும் வாழக்கடவர். மின்னலொத்துப் பிரகாசிக்கும் வேலாயுதம் வாழக்கடவது. மயில்வாஹனம் வாழக்கடவது. ஸ்ரீகுமாரக் கடவுளையே வழிபட்டுக் கல்வியறிவு களின் மேம்பட்டுப் பிறவாப்பேறு பெற்ற ஸ்ரீ அருணகிரிநாத வள்ளலார் வாழக்கடவர். ஹிதோபதேசஞ் செய்யுங் காருண்ய மூர்த்திகளாகிய ஆசாரியர்கள் வாழக்கடவர். குருபக்தியுள்ள சீடரும் வாழக்கடவர். (230)

[*"திருவ" என்றதிலுள்ள அ—அசை. "திருவ மன்ன வன்"எனச் சிந்தாமணி இலக்கணையாரிலம்பகம் 42—ஞ் செய்யுட் கண்ணும் வருவது காண்க]

ஆகப் பாயிரமுட்படத் திருச்செய்யுள் —235.

21 – வது
சிவயாதனா வியாச மூலமுமுரையும்
முற்றுற்றன.

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

சீவயாதனா வியாசம் மூலமுமுரையும்.

அநந்தச்ருதி ஸ்ம்ருதி
புராணேதிஹாஸாதி பிரமாண ரூபமாகவுள்ள
இவ்வியாச மூலத்திலும், உரையிலும் பெயரொடு காட்டப்பட்ட

பிரமாண நூல்கள்.

சுருதிவாக்கியம்.

நிராலம்போபநிஷத்.

மண்டலப்ராஹ்மணோபநிஷத்.

சாண்டில்யோபநிஷத்.

வராஹோபநிஷத்.

கர்ப்போபநிஷத் முதலியன.

சைவசித்தாந்த நூல்கள்.

(ஆக மாந்த சாஸ்திரம்)

சிவஞான சித்தியார்.

சிவதருமோத்தரம். (உபாகமம்)

தேவிகாலோத்தரம். (உபாகமம்)

கௌளம் யாமளம் முதலிய ஆக மங்கள்.

(மானுடசித்தர் நூல்கள்)

சித்தாந்தப் பிரகாசிகை.

மநுஸ்ம்ருதி.

பராசரஸ்ம்ருதி.

இலிங்கபுராணம்.

சைவபுராணம். (ஞானசங்கிதை)

பாத்மபுராணம். (சிவகீதை)

கருடபுராணம்.

கந்தபுராணம்.

காஞ்சிப்புராணம்.

திருவிளையாடற்புராணம்.

சூதசங்கிதை.

காசிகாண்டம்.

வியாஸபாரதம். (வடமொழி)

பெரியபுராணத்தில், —

திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்,

கண்ணப்பநாயனார் புராணம்,

சாக்கியநாயனார் புராணம்,

அதிபத்தநாயனார் புராணம்,

சிறுத்தொண்ட நாயனார் புராணம்.

அரிச்சந்திர புராணம்.

திருக்குறள் (திருவள்ளுவப்பயன்)

கொன்றைவேந்தன்.

பிங்கலந்தை.

சேந்தன் றிவாகரம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

பட்டினத்தடிகள் பாடல்.

தாயுமானசுவாமிகள் பாடல்.

பஞ்சாதிகார விளக்கம்.

(சீவக) சிந்தாமணி.

சிவஞான தேசிகம்.

இவ்வியாசத்திலுள்ள மூலச் செய்யுள்களையும், [ ] இவ்வித வளைவுகளி லடங்கிய வற்றையும், அடியிற் கோட்டிற்குக் கீழிடப்பட்ட குறிப்புக்களையும், மூடர்வாதநும்ஸத்தி லிடப்பட்ட அவதாரிகை களையும் படியாமல் மற்றவைகளைத் தொடர்ந்து படித்தால், வசன நூலாகவே முற்றுறுமாறு இந்நூற் பொழிப்புரை யமைந்திருத்தல் காண்க.

"ஜீவயாதனையைக்குறித்த்வியாசம்" எனப்படுவது மிதுவே.

★

இந்நூன் முதற்பதிப்பு, கி.பி. 1906—ல், திருவனந்தபுரம்: மகா—ா—ா—ஸ்ரீ. ந. சுப்பிரமணியபிள்ளை யவர்களது முயற்சி வழியே நிகழ்ந்ததாகும்.

[மூலம் சுபகிருது (கி.பி. 1902)
வருஷத்து ஆவணி மாதம் சென்னையில் பாடி முடிந்தது]

பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் அருளிச் செய்த நூல்கள்

- **முதல் மண்டலம் :**
  குமரகுருதாச சுவாமிகள் பாடல்கள்
- **இரண்டாம் மண்டலம் :**
  திருவலங்கற்றிரட்டு
  1. முதல் கண்டம் : இசைத் தமிழ்
  2. இரண்டாம் கண்டம் : பல்சந்தப் பரிமளம்
- **மூன்றாம் மண்டலம் :**
  1. காசி யாத்திரை
  2. பரிபூரணாந்த போதம் – சிவசூரியப் பிரகாசம்
  3. தகராலய ரகசியம் – சதானந்த சாகரம்
- **நான்காம் மண்டலம் :**
  1. சிறுநூற்றிரட்டு
  2. குமரவேள் பதிற்றுப்பத்தந்தாதி
  3. சேந்தன் செந்தமிழ்
  4. பத்துப் பிரபந்தம்
  5. குமாரஸ்தவம்
  6. செக்கர்வேள் செம்மாப்பு, செக்கர் வேளிறுமாப்பு, கனவதிகாரம்
  7. சீவயாதனா வியாசம்
  8. திருத்தல தரிசன காலங்களில் பாடியருளிய கட்டளைக்கலித்துறைகள்
- **ஐந்தாம் மண்டலம் :**
  திருப்பா – திட்பம்
- **ஆறாம் மண்டலம் :**
  ஸ்ரீமத் குமாரசுவாமியம்
- **வசன நூல்கள் :**
  சிவஞான தீபம்
- **சிவஞான தேசிகம் :**
  1. கடவுளைக் குறித்த வியாசம்
  2. தேவர்களைக் குறித்த வியாசம்
  3. பரமசிவ மென்பதைக் குறித்த வியாசம்
  4. வேதத்தைக் குறித்த வியாசம்
  5. சமயங்களைக் குறித்த வியாசம்
  6. ஸ்ரீ சுப்பிரமணிய வியாசம்
  7. குருசிஷ்ய சம்பவ வரலாற்று வியாசம்
- செவியறிவுறூஉ
- சைவசமய சரபம்
- நாலாயிரப்பிரபந்த விசாரம்
- சுத்தாத்வைத நிர்ணயம்
- ஸ்ரீ சண்முக சகச்சிர நாமார்ச்சனை (தமிழில்)
- சைவ மகிமை
- ஸ்ரீ அருணகிரிநாதர் வரலாற்றுச்சுருக்கம்

தமிழ்மொழி வாழ்த்து.

ஈன்றாளின் மேலா மிரக்கமுள நச்செவ்வே
ணோன்றா டுதித்தினிய நூனுவலத் - தேன்போற்
கிடைத்ததெய் வத்தமிழே கேணினையு நின்னைப்
படைத்தவனை யும்பழிச்சு வேன்.

- காசியாத்திரை - 67.

மஞ்ஞைவிடுதூது.

பாரலர் முளரி காற்றம் பரமெனு மோரைந் திற்கும்
ஆரண னரிய ரன்றா னருண்மகே சுரன்ச தாவென்
கீரணை சிவனென் றாளி கிளக்குமே யோக தத்வஞ்
சீரணை யிவர்க்கு மேலாஞ் சிவனையின் றழையாய் மஞ்ஞாய்

- திருப்பா.

அமிர்தமதி.

யாதுமுனை யன்றியுண்டோ நானுனக்குப்
புறம்போவென் னாட்ட மாகிச்
சூதுடையோர் தொழில்போல யானறியா
தெனுளிருந்து சுழற்றி யாட்டுஞ்
சாதமதை யெனக்குநனி யறிவிக்க
வுளகருணை தான்வா ராமல்
தோதகந்தான் விளைத்ததெது சொல்லியரு
ளகண்டவருட் சுகிர்த வாழ்வே.

- குமரகுருதாச சுவாமிகள் பாடல்கள்.